கடவுள் துணை

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்களால்

திருவாய்மலர்ந்தருளிய

# காவிலன் கதை.

சென்னை-நகர்.

பு. முனிசாமி நாயுடு & ஸன்,

அவர்களது

சரஸ்வதிவிலாஸ அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1929. [அணா 6.

2417
35/3-1929
894.811

35-3-1921

16889



கடவுள் துணை.

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

# கோவிலன் கதை.

விநாயகர் துதி.

முந்திமுந்திவிநாயகரே முக்கணனார்தன்மகனே
ஐந்துகரத்தோனே அருள்சடையாள்புத்திரனே
விக்கினவிநாயகரே வெண்ணெயுண்டோன்தன்மருகா
முக்கணனார்பெற்றெடுத்த மூஷிகவாகனரே
வெட்பாலைக்குள்ளிருக்கும் சப்பாணிபிள்ளையாரே
சப்பாணிபிள்ளையாரே பொற்பாதம்நான்மறவேன்
கோவிலனார்தன்கதையை மனமகிழ்ந்துநான்பாட
விக்கினவாராமல் விநாயகரேமுன்னடவாய்

சுப்பிரமணியர் துதி.

ஆறுமுகவேலவரே அச்சுதன்மகனாரே
சிவகாமிபுத்திரனே தெய்வானைநாயகனே
வள்ளியைமணம்புரிந்த மகாதேவர்தன்மகனே
புள்ளிமயிலேறும் பூங்குறவர்மருமகனே
இக்கதையையான்பாட இன்பமாயென்னாவில்
ஒக்கவேநீயிருந்து உவந்தருளும்வேலவரே

சொக்கர் மீனாட்சி துதி.

சோலைமலருடைய சொக்கேசர்மீனாட்சி
ஆலவிடமுண்ட ஆலவாய்சுந்தரரே
அந்தமாயிக்கதையை யென்னால்பாடுதற்கு
எந்தனுடனாவி லினிதாய்குடியிருந்து
தப்புகள்வாராமல் தற்காருந்தாயாரே
ஒப்பும்படியா உத்தமமேகாத்தருளும்

திருமால் துதி.

ஆலிலைமேல்பள்ளிகொண்ட ஆதிநாராயணரே
பால்வெண்ணெய்தயிருடனே பரிவாயுண்டவரே

பாற்கடலில்பள்ளிகொண்ட பத்மலோசனனே
நீக்கமறவென்னுளில் நிலையாய்வந்திருந்து
குற்றங்கள்வாராமல் கோவிலனார்தன்கதையை
சுத்தமாய்ப்பாடுதற்கு ஸ்ரீராமர்காத்தருளும்

## சரஸ்வதியம்மன் துதி.

வாணிசரஸ்வதியே மறையவனார்தேவியரே
காணிக்கையாகவேதான் கவிப்பாவலர்தனக்கு
பால்பழம்சர்க்கரையும் பருவிளாம்பழமுடனே
கல்கண்டுநாழிகைக்கு கடப்பாடைத்திடுவேன்
பாலனுங்கோவிலன்தன் அருங்கதையைபாடுதற்கு
கலனுறாமல் கதையொன்றுஞ்சோராமல்
பத்தினியாள்தன்கதையில் பழுதொன்றுஞ்சேராமல்
உத்தமியாள்தன்கதையி லொன்றுங்குறையாமல்
பாடவேயென்னுளில் பார்வதியேயிப்போது
நடவேநீயிருந்து கட்டளைக்கவேண்டுமம்மா.


## கதையின் வரலாறு.

ஆயிரம்பாண்டியர்க ளாண்டிரளாம்மன்னவர்கள்
மதுரைபதுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
தேனுமதுரையது தென்மதுரையாண்டிருந்தார்
இப்படியேயாண்டிருந்தார் இன்பமுடன்பாண்டியர்கள்
பட்டணமாம்பட்டணமாம் காவிரிப்பூம்பட்டணமாம்
காவிரிப்பூம்பட்டணத்தில் கனமதுரையாம்வர்த்தகர்கள்
மாநாகன்செட்டியென்றும் மாச்சோட்டான்செட்டியென்று
அந்தானுமைத்துனனு மழகுடப்பல்வோட்டிருந்தார்
இராவோடிரவுதிரும்பும் காலைக்கம்சோங்குகப்பல்
படவிலவிவரும் பட்டணத்துமரக்கலமும்
பகலோடுபகல்திரும்பும் பத்துலட்சம்சோங்குகப்பல்
சொங்குபிளகுவருஞ் சொர்ணகப்பலேலம்வரும்
இப்படிக்குத்தானிருந்தார் இன்பமுடன்வர்த்தகர்கள்
மாநாகன்செட்டிபெற்ற மன்னவன்முத்துச்செட்டி
பிள்ளையில்லையென்று வெகுகவலையிருந்தார்
நந்தவனம்பூந்தோட்டம் நதிகரையும்வைத்தார்கள்

பொய்கைகளின்மேல் புஷ்பவனந்தானும்வைத்தார்
கைலையில்தானிருந்து காமதேனுவிங்குவரும்
நூலேணிகீழ்போட்டு விதமாகத்தானிறங்கி
புல்லுகள்மேய்ந்து தாமரைப்பொய்கையிலே
தாமரைப்பொய்கையிலே தாகமதுதானருந்தி
மன்னன்முத்துசெட்டி மகிழ்ச்சியுடன்தான்வாழ்ந்தி
நூலேணிமேலேறி கைலாசம்சேர்ந்திடுமாம்
அன்றுபோய்மற்றுநாள் அவ்வாகவரும்போது
காமதேனுதன்னைக்கண்டு கன்னாறுயேதுரைக்கும்
போமிடத்துக்கு நான்கூடவாரேனென்று
கன்னுதாயின்தொடர்ந்து காட்டுக்குவரும்போது
பூங்காவனந்தேடி வந்ததுகாமதேனு
புல்லுகளைமேய்ந்து சலங்களையுந்தானருந்தி
நூலேணிமேலேறி விதமாகவோவாடையிலே
பாரதனுபோல பார்த்துவிட்டார்முத்துசெட்டி
பட்டிமாடிங்கேவந்து பயிரெல்லாம்மேயுதிங்கே
கவுண்டுகல்கொண்டுமல்லோ கனமாயடிக்கையிலே
காருவதுக்குத்தப்பி கன்னுக்குப்பட்டதங்கே
கன்னுக்குப்பட்டவுடன் கதறிவிழுந்தது
அம்மாடியென்று அலறிவிழுந்ததங்கே

காமதேனு சாபமிடல்.

காருவைக்கண்டு கடுகவேயோடிவந்து
என்பிள்ளையைக்கொன்ற படியாலேயுந்தனுக்கு
பதினறுவயதிலே பாலகனைக்கொன்றுயே
ஆனபடியாலே நானுமேயுந்தனுக்கு
உந்தன்வயிற்றிலே உதிக்கிறமைந்தனுக்கு
பதினாறுவயதிலே பாலனிறக்கவென்று
அப்படிக்குச்சாபங்கள் இட்டதுகாமதேனும்
சாபந்தனைகொடுத்துவிட்டு கைலங்கிரிசேர்ந்ததுகாண்
அப்போ - மாநாகன்செட்டியார் மன்னவரேதுசெய்த
பிள்ளையில்லையென்று பெருந்தபசுசெய்தார்கள்
மைந்தனில்லையென்று மகாதபசுசெய்தார்கள்
அப்போதுசொக்கலிங்கம் ஆண்டவனுமேதுசெய்தார்
மாநாகன்செட்டிதேவி மயிலனையாள்வர்ணமாலை
வர்ணமாலைமயிலனைக்கு மைந்தனைத்தான்கொடுத்தார்



## கோவிலன் கதை.

### மணியரசம் பெருமைமைந்தன் காளிக்கு பிரார்த்தனை கூறுவது.

பட்டணமாம்பட்டணமாம் மதுராபுரிபட்டணமாம்
மதுராபுரிபட்டணத்தில் மணியரசன்வாணியனும்
மணியரசன்வாணியர்க்கு மைந்தர்களிரண்டுபேராம்
ஒருதாரமங்கையர்க்கு மைந்தரொருவருண்டாம்
இப்படிக்குத்தானிருக்க பின்பமுள்ளவாணியனும்
சாகுமதுகாலையிலே தன்மைந்தனல்வருக்கும்
உண்டானதிரவியத்தை இரண்டாய்பகுந்தாராம்
மூவருக்கொருபாகம் இருவருக்கொருபாகம்
பாகந்தான்பகுந்து கொடுத்தானும்வாணியனும்
அன்றையப்போதிலே மறுதாரமைந்தனவன்
எண்ணெய்குடமெடுத்து இன்பமுடன்வாரானே
மதுரையதுகாதம் வகையாகச்சுத்திவந்தான்
எண்ணைவிலையாகாமல் எங்குமவன்சுத்திவந்தான்
மதுரையைக்காக்கின்ற வடபத்திரகாளிகோயில்
மூப்பிறப்பிற்பாண்டியர்கள் செய்தவினையாலே
இப்பிறப்பிற்தாங்களவர் இருக்கும்படியாக
காளியம்மன்சந்நிதியாம் கதவடைத்தார்பாண்டியர்கள்
சாத்திக்கதவடைத்து தாள்பூட்டிமண்ணறைந்தார்
இந்தவொருகோவிலுக்கு திருவிளக்கேற்றினாலே
காளியம்மன்கோவிலுக்கு கனவிளக்கைவைத்தவரை
ஆர்விளக்கேற்றினாலும் ஆக்கினைசெய்திடுவோம்
எவர்விளக்கேற்றினாலும் இரண்டுதுண்டாக்கிடுவோம்
இப்படிக்குச்சொல்லியவர் எங்கும்பறையறைந்தார்
இப்படிஆக்கினைகள் செய்கின்றவேளையிலே
அந்நேரவேளையிலே அன்பானவாணியனும்
காளியம்மன்கோவில்முன்னே கடுகெனவேயோடிவந்து
[illegible]ண்ணெயெல்லாம்விற்றுவந்தா லேந்திழையேயுந்தனுக்கு
ஆயிரந்திருவிளக்கு அன்பாகவைப்பேனென்று
பிரார்த்தனைசெய்துக்கொண்டு போனானேவாணியனும்
அப்படியேயெண்ணையெல்லா மன்பாகவிற்றுவிட்டு
கோவிலின்னருகே வாணியனும்வந்துநின்று
பூட்டிருந்தாற்கதவைப் புண்ணியனுந்தான்திறந்து
ஆயிரந்திருவிளக்கை யன்பாகயேற்றிவைத்து

அரண்மனைக்குப்போய்விட்டான் அன்பாகவாணியனும்
ஆயிரம்பாண்டியர்கள் அந்நேரவேளையிலே
உப்பரிக்கைமேலே உலாவிக்கொண்டுநிற்கையிலே
காளியுடசந்நிதியில் திருவிளக்கைக்கண்டார்கள்
அப்போதுபாண்டியர்கள் அன்பாகவேதுசெய்தார்
சேவகரைத்தானழைத்து சேதியென்னசொல்லுகிறார்
உத்திரவைத்தான்கடந்து யார்வைத்தார்திருவிளக்கு
கண்டுபிடித்தவனை கடுகவேகொண்டுவாரும்
திருவிளக்குவைத்தவனை தேடிப்பிடித்துவாங்கள்
அப்போதுசேவகர்கள் ஆள்தேடிவாரார்கள்
கூடப்பிறந்ததொரு கொற்றவர்களண்ணமார்
காட்டிக்கொடுத்தார்கள் குணமான அண்ணமார்
அப்போதுசேவகர் அங்ஙனமேயேதுசெய்தார்
கட்டிப்பிடித்துக் கடுகெனவேகொண்டுவந்தார்
பாண்டியன்முன்பாக படைவீரர்கொண்டுவந்தார்

### திருவிளக்கிட்டவரைப் பாண்டியர் பிடித்துவரச்சொல்லியது.

கட்டினகட்டோடே கச்சேரிகொண்டுவந்தார்
ஆறாயிரம்பாண்டியர்கள் அந்நேரமேதுசெய்தார்
எங்களுத்தரவுதான்மீறி திருவிளக்குவைத்ததினால்
காளிக்குமுன்பாக கண்டதுண்டஞ்செய்யுமென்றார்
அப்படியேகாவலர்கள் அங்ஙனமேகொண்டுவந்தார்

### வாணியனும் வர்ணிச்சியும் மரணமடைதல்.

காளிகோயில்முன்பாக கடுகெனவேகொண்டுவந்தார்
திருப்பரங்குன்றைக்காடு தெய்வகாளிகோயில்முன்னே
அகடக்கல்சகடப்பாறை அச்சமில்லாதச்சக்கொம்பு
வெங்கலப்பாறைமுன்னே கொண்டுவந்தார்மன்னவனை
வீசினார்வாளாலே வெட்டினாரிரண்டுதுண்டாய்
அந்நேரவேளையிலே அவன்சிரசுதானெகிறி
காளிமடியிலே கடுகெனவேதான்விழுந்து
கதறியழுகிறானே கட்டழகனப்போது
உபகாரஞ்செய்தேனம்மா அபகாரம்நேர்ந்ததுவே
அப்போதுகாளியம்மா னஞ்சாதேமகனேயென்று
ஆதரவுசொல்லியல்லோ அடைவாகவேதுசொல்வாள்
ஒருவன்பழிக்குநாளை யுலகம்பழிவாங்கிவைப்பேன்

மைந்தன்பழிக்குநானே புலகம்பழிவாங்கிவைப்பேன்
என்றுமேசொல்லி இன்பமுடன்காளியவள்
அப்போதுதானிருந்த வாணியன்தன்தேவி
வாணியன்தேவியவள் மயிலனையாளோடிவந்து
மோதியவரைந்துகொண்டு மொய்குழலாள்தானிறந்தாள்
சோலைமலருடைய சொக்கரதுவறிந்து
வாணியன்தன்னுயிரும் வாணிச்சிதன்னுயிரும்
தங்கச்சிமிழ்தனிலே தானடைத்தார்சொக்கலிங்கம்
சொக்கர்முகம்நோக்கி காளியம்மனேதுசொல்வார்
இப்பிறப்புநீக்கி மறுபிறப்புயான்பிறந்து
செட்டியர்தகோவிலற்கு மனையாட்டியாகவந்து
விளக்குவைத்தபாண்டியரை வெட்டிதலைசாய்த்து
மணிகுடலைத்தான்பிடுங்கி வந்திடுவேன்கோயிலுக்கு
என்றுமவளுரைத்து யிருந்தாளேகாளியரும்
சோலைமலருடைய சொக்கரதுவறிந்து,
காளியின்தன்னுயிரை சொக்கலிங்கர்தான்பிடித்து
தங்கச்சிமிழ்தனிலே தானடைத்தார்சொக்கலிங்கம்
வாணியன்தன்னுயிரை சொக்கலிங்கர்தான்பிடித்து

கோவிலர் கர்ணகி மாதவி இம்மூவர்கள் உற்பத்தி.

வர்ணமாலைகெற்பமதில் மைந்தனுயுண்டுபண்ணூர்
வர்ணமாலைதன்வயிற்றில் மைந்தனவர்தான்பிறந்தார்
கோவிலனென்று பெயரெடுத்தார்கள்பெருமப்போ
அட்டாளுஞ்சொக்கரைப்போல் அழகுடையமன்னவனும்
தேமல்பிறையழகன் தெள்ளுமணிவாசகனூர்
உருமாலைக்கட்டழக னுத்தமனூர்கோவிலரும்
அள்ளித்தெளித்ததுபோல் அழகுசிறுதேமல்
மாங்காய்முடியழகர் மாதளம்பூமேனியனூர்
செக்கச்சிவந்தவன் செங்கிரைத்தண்டழகன்
அட்டாளுஞ்சொக்கரைப்போல் அழகுடையமன்னவர்தான்
சோமன்கட்டிவீதிவந்தால் தென்மதுரைசொக்கரென்பார்
மண்டைகட்டிவீதில்வந்தால் மதுரைவாழ்சொக்கரென்பார்
பார்ந்தார்முதலியென்பார் பார்ப்பாரசாதியென்பார்
கண்டால்முதலியென்பார் கன்னடையசாதியென்பார்
இப்படிக்குக்கோவிலரும் வளர்ந்துவருநாளையிலே
அப்போதுபாண்டியர்க ளன்பாகவேதுசெய்தார்
மைந்தர்வரம்வேண்டுமென்று மலைமேல்தவமிருந்தார்
பிள்ளைவரம்வேண்டுமென்று பெருந்தபசுதானிருந்தார்
இராஜகன்னிகோவிலிங்கி நலமாகத்தவமிருந்தார்
அப்போதுசொக்கலிங்கம் ஆண்டவனோடிவந்து
காளியுடன்தன்னுயிரைக் கடுகெனவேதான்பிடித்து

எழுமிச்சங்கனியாக்கி ஈந்தாராஞ்சொக்கலிங்கம்
இராஜகன்னிகோவிலிங்கி நலமாகத்தவமிருந்தார்
பட்சணஞ்செய்தாளாம் பாங்காகக்கோவிலிங்கி
அதுவேகெற்பந்தாளுச்சு அரிவையந்தமாதுக்கு
பத்துமாதஞ்சென்று பைங்கொடியாள்மங்கையற்கு
வலதுகால்செஞ்சிலம்பு இடதுகால்செப்போடு
கழுத்திலேபூமாலை கன்னவழியாக
கன்னவழியாக கட்டழகிபெண்பிறந்தாள்
அப்போதுபாண்டியர்கள் சோதிடரைத்தானழைத்து
நாழிகைபொருத்தமது நலமாகப்பாருமென்றார்
அப்போதுசோதிடர்கள் அன்பாகவேதுசொல்வார்
மாலையிட்டுபெண்பிறந்தாள் மதுரைதனக்காகாது
வாய்விட்டழுதாலே வடமதுரைவெந்துவிடும்
தேம்பியழுதாளே தென்மதுரைவெந்துவிடும்
பெட்டியிலேதானடக்கி வைகையிலேதள்ளுமென்றார்
அப்போதுகோவிலிங்கி அழுதுபுலம்பலுற்றாள்
குழந்தையைத்தான்பார்த்து கோவிலிங்கிபுலம்பலுற்றாள்
தங்கத்தாம்பாளத்தில் தையலரைத்தான்பார்த்து
பாலைக்கறந்து பக்கத்தில்தானும்வைத்தாள்
தாதிமார்கையில் தான்கொடுத்தாள்குழந்தைதன்னை
தாதியர்கள்தானெடுத்து தையலர்களோடிவந்து
பாண்டியர்முன்பாக பக்குவமாய்வைத்தார்கள்
அப்போதுபாண்டியர்கள் அந்தக்குழந்தைதன்னை
பாண்டியர்கள்தான்பார்த்து பாங்காகத்தானழுதார்
தவமாதவமிருந்து தையலைப்பெற்றெடுத்தோம்
பெற்றமகள்தன்னைப் பெட்டியிலேவையுமென்றார்
பேழையானபெட்டியிலே பிறந்தபெண்ணைவைத்தார்கள்
எட்டுகட்டுகட்டி யியலாகசீலுமிட்டார்
வைகையிலேதள்ளுமென்று வகையுடன்சொன்னார்கள்
அந்நேரவேளையிலே ஆரணங்கைக்கொண்டுவந்து
வைகையருகினிலே மன்னவர்கள்கொண்டுவந்தார்
ஓடுகிறவெள்ளத்திலே யுத்தமியைத்தள்ளுமென்றார்
வைகைபெருகியே வாராளேகர்ணகையாள்
ஒருமீன்சுழண்டுவர ஓலைவண்டுகீதம்பாட
சுறாமீன்கரைபுரண்டு காவிரிப்பூவருகுதங்கே
அஞ்சுதலைநாகம் அலைந்துகெட்டுவருகுதங்கே
பேழையைக்கொண்டுவந்து பொட்டணவேயோடிவந்து
பெட்டியின்மேலேறி வருகுதுசொர்ணநாகமது
காவிரிப்பூபட்டணத்தின் கரையிலொதுங்குதுகாண்
அப்போ-குவ்வாகுவ்வாவென்று குழந்தையழுகுதுகாண்

பெட்டியைத்தான் திறந்து வெட்டெனவேவேகமது
குழந்தையைத்தான் பார்த்து குணமுள்ளநாகமது
கோடிசூரியன்போலக் குழந்தையைக்கண்டது
நாகரத்தினக்கல்லை நலமாகவைக்கையிலே
எங்கும்பொருந்தவில்லை இன்பமுடன்குழந்தைக்கு
வலதுகால்சிலம்பில் தைத்ததுகாண்ரத்தினத்தை
அதிலேபொருந்திற்று அன்பானரத்தினமும்
நாகரத்தினசிலம்பென்று நலமாகப்பெயர்கொடுத்து
ஐந்துதலைநாகமது அந்தக்குழந்தைதன்னை
காளியென்றுதானிருந்து கனமாகவேதுசெய்யும்
கன்னவழியாய்ப்பிறந்த கட்டழகிகுழந்தையென்று
கர்னகியாளென்றுசொல்லி கனமாகப்பெயர்கொடுத்து
பெட்டியைகட்டியல்லோ வைகையிலேதள்ளியது
வைகைபெருகி வரண்டமணல்திரண்டோட
காவிரிப்பூம்பட்டணமாம் கரையிலேவருகுதங்கே
மைத்துனனுமைத்துனனும் வாதுகப்பலோட்டிவைத்தார்
அத்தானும்மைத்துனனும் அழகுகப்பலோட்டிவைத்தார்
பெட்டிவருகிறதை கண்டானேமாநாகன்
கட்டுமரங்கட்டி கடுகெனவேதானேறி
பெட்டியைத்தானெடுத்து பிரியமுடனோடிவந்து
சித்திரமுகச்சாவடியில் சீராகக்கொண்டுவந்தார்
பெட்டியதுயென்னுதென்றார் புண்ணியனார்மாச்சோட்டான்
பெட்டிக்குளிருக்கிறது என்னுதென்றான்மாநாகன்
அப்படியேநல்லதென்று அன்பாகக்கொண்டுவந்து
பெட்டிதிறந்தார்கள் புண்ணியனாரன்னேரம்
சூரியனைப்போலத் துலங்குதுகுழந்தையது
அந்தக்குழந்தையை அன்பாகக்கொண்டுவந்து
வைத்துவளர்த்தாரே வகையுடனேமாநாகர்
இப்படிதானிருக்க இன்பமுடனன்னேரம்
இப்படியாக யிருக்கின்றவேளையிலே
திருக்கடையூர்பட்டணத்தில் தேன்மொழியாள்வசந்தமாலை
அவள்-பிள்ளையில்லையென்று பெருந்தபசுதானிருந்தாள்
அப்போதுசொக்கலிங்கம் ஆண்டவனுரேதுசெய்தார்
எலுமிச்சங்கனியாக்கி யின்பமுடன்தான்கொடுத்தார்
பட்சணஞ்செய்தாளே பைங்கொடியாள்வசந்தமாலை
அதுவேகுளியாக ஆரணங்குமங்கையற்கு
பத்துமாதஞ்சென்று பைங்கொடியும்பெற்றெடுத்தாள்
அழகுதுலங்குது ஆனந்தங்கொஞ்சுது
அழகில்மிகுந்தவள்காண் ஆரணங்குமங்கையவள்
அப்போது-சோதிடரைத்தானழைத்து சாதகங்குறியுமென்றாள்
அப்போதுசோதிடர்கள் சாஸ்திரத்தைத்தானுரைப்பார்

சாஸ்திரத்தைத்தான்பார்த்து சாதகங்கள்தானுரைத்தார்
அஞ்சுவயதிலே அரியசிலம்பெடுத்து
நாட்டியங்கள்கற்று நலமுடனேமாதகியாள்
தித்தியென்பாள்மத்தளங்கள் திமிதியென்பாள்காற்சிலம்பு
ஒத்திவைப்பாளோரடியை ஓலமிடும்பொற்சிலம்பு
பத்தாம்பிராயத்திலே பைங்கொடியாள்மாதகியாள்
ஆணலழகன் அழகுடையவணிகன்றனை
செப்புச்சிலையழகன் செங்கரைத்தண்டழகன்.
அப்பெரியகொற்றவனை அழைத்துவருவாள்காண்
பன்னிரண்டுதன்வருஷம் பைங்கொடியாள்மாண்டிடுவாள்
பதின்மூன்றும்பிராயத்திலே பைங்கொடியாள்மாண்டிடுவாள்
இப்படிக்குஜாதக மின்பமுடன்தானுரைத்தார்
காவிரிப்பூம்பட்டணத்தில் கரைதுறையாமன்னவர்கள்
மாநாகன்செட்டியும் மாச்சோட்டான்செட்டியும்
பெரியதனவர்த்தகர் புண்ணியர்களிருவருமாய்
ஆயிரத்தலைகட்டு அதிகாரிமன்னவர்கள்
மாநாகன்செட்டிவீட்டில் மயிலனையாள்பெண்ணரசி
நாளொருமேனியாக நட்சத்திரம்போல்வளர்ந்தாள்
மாணிக்கக்கல்புதைத்து மயிலனையைத்தான்வளர்த்தாள்
சித்தமொருபட்டுடுத்தி சேரவொருபூச்சூட்டி
மாணிக்கம்போலே மயிலனையைவளர்த்தார்கள்
இப்படிபெண்ணுமே யின்பமுடன்வளர்ந்துவாறாள்

### கோவிலருக்கும் கர்ணகிக்கும் தாம்பூலமாற்றி விவாகஞ்செய்தல்.

காவிரிப்பூம்பட்டணத்தில் கனத்தநல்வர்த்தகன்
அன்றையபோதிலே அடைவாகமுத்துசெட்டி
மாநாகன்வீட்டுக்கு வந்துநின்றார்முத்துசெட்டி
அப்போதுபெண்குழந்தை அருகாகவருகையிலே
இது-யாருடையபெண்ணென்று எடுத்துரைத்தார்மாநாகன்
என்னுடையமைந்தனுக்கு இன்பமுடன்தாரீரோ
அப்படியேதாரேனென்று அன்பாகவாக்களித்தார்
பரியங்களென்னவென்று பண்பாகக்கேட்கலுற்றான்
ஆயிரம்பொன்கொடுத்தால் அரிவையரைநான்தருவேன்
அப்படியேசம்மதித்தார் அன்பானமுத்துசெட்டி
ஆயிரம்பொன்பரியமென்று அப்போதுதான்கொடுத்தார்
இன்றைக்குப்பரியம் இயலாகச்செய்யுமென்றார்
இன்றெட்டாநாளையிலே இசைந்தமுகூர்த்தமென்று
நாளிட்டுக்கொண்டாரே நலமுடனேமுத்துசெட்டி
அவர்போனமற்றநாள் அப்புசெட்டிவந்தாரும்



அன்னமயில்போல அரிவைபரைக்கண்டாரும்
ஆருகுழந்தையென்று அன்பாகக்கேட்டாரும்
என்னுகுழந்தையென்று யெடுத்துரைத்தான்மாநாகன
என்னுடையமைந்தனுக்கு உன்பெண்ணைத்தாரீரோ
அப்படிக்குத்தாரேனென்று சம்மதித்தார்மாநாகன்
பரியமென்னகொண்டுவாரீர் பண்பாகச்சொல்லுமென்றார்
ஆயிரம்பொன்பரியமென்று அன்பாகத்தான்கொடுத்தார்
பரியங்கொடுத்துவிட்டு பண்பாகப்போய்நடந்தார்
அவர்போனமற்றுநாள் லிங்கசெட்டிவந்தாராம்
கன்னிகையைத்தான்பார்த்து கன்னியிவளாரென்றார்
என்னுடையகுழந்தையென்று யெடுத்துரைத்தார்மாநாகன்
என்னுடையமைந்தனுக்கு உன்பெண்ணைத்தாரீரோ
அப்படிக்குநான்தாரேன் பரியமென்னவென்றுசொன்னார்
ஆயிரம்பொன்பரியமென்று அன்பாகத்தான்கொடுத்தார்
இன்றெட்டாநாளையிலே யிசைந்தமுகூர்த்தமென்று
நாளிட்டுக்கொண்டுமவர் நலமுடனேபோய்நடந்தார்
மாணிக்கசெட்டியவர் மன்னவனுமங்குவந்தார்
இவர்-அரண்மனைக்குள்ளாக அன்பாகவந்தாரே
மாணிக்கம்போலிரிய மயிலனையைக்கண்டாரே
இது-யாருடையபெண்ணென்று அன்பாகக்கேட்டாரே
என்னுடையபெண்ணென் றெடுத்துரைத்தார்மாநாகன்
என்னுடையபிள்ளைக்கு யேந்திழையைத்தாரீரோ
அப்படியேதாரேனென்று நனமுகன்மாநாகன்
என்னபரிய மெடுத்துரையுமென்றுசொன்னார்
இரண்டாயிரம்பொன்கொடுத்தால் ஏந்திழையைத்தாரோமென்றார்
அப்படியேதான்கொடுத்தார் அழகானசெட்டியவர்
அவர்போனமற்றுநாள் அனேகம்பேர்வந்தார்கள்
இப்படியாக யிவரிருக்கும்வேளையிலே
அன்றையவேளையிலே ஆனதொருமுத்துசெட்டி
தாம்பூலங்கொண்டுமென்ன தனஞ்செயருமோடிவாறார்
மாச்சோட்டான்செட்டியண்டை வாறார்காண்முத்துசெட்டி
தாம்பூலங்கொண்டுவந்து தனஞ்சயருமுன்னேவைத்தார்
கலியாணமென்று கட்டழகன்கூறினார்
ஆருக்குக்கலியாணமென்று அன்பாகக்கேட்கலுற்றார்
என்-மைந்தனப்பாசெட்டிக்கென்று அடவுடனேதாமுரைத்தார்
ஆருடையபெண்ணென்று அன்பாகக்கேட்கலுற்றார்
மாநாகன்பெண்ணென்று வகையுடனேதாமுரைத்தார்
அப்போ-மாச்சோட்டான்செட்டியார்க்குக் கோபம்பெருகுது
கோபம்பெருகுதுக் கொள்ளிகொண்டெரிகுது
என்னுடையபெண்ணையவன் எப்படிக்குத்தான்கொடுப்பார்
உன்னுடையபெண்ணென்று எப்படிக்குத்தான்தெரியும்

மாச்சோட்டான்செட்டியாரும் மன்னன்முத்துசெட்டியாரும்
இருவருமொன்றாக வந்தார்கள்மானாகன்முன்பு
மானாகன்முன்னேவந்து மன்னவர்களேதுசொல்வார்
என்னுடையபெண்ணை யெப்படிக்குநீர்கொடுப்பீர்
என்னுடையபிள்ளைக்கென்று நேமகஞ்செய்திருக்க
ஒருவருக்குநீர்கொடுக்க நீதியுண்டோமன்னவரே
ஒருத்தருக்கொருத்த ருகந்துசண்டைசெய்தார்கள்
பஞ்சாயத்தார்முன்பாக பாங்காய்விழுந்தார்கள்
திருவுளச்சீட்டு சிறப்புடனேபோடுமென்றார்
ஆருக்குஅமைப்போ அவர்களுக்காகுமென்றார்
அப்போதுபஞ்சாயத்தார் அனைவோருங்கூடினார்
திருவுளச்சீட்டு சிறப்புடனேபோடுமென்றார்
கோவிலர்பேர்வழிக்கு வந்ததுசீட்டதுவும்
அவனுடையபாரியென்று அனைவோருந்தாமுரைத்தார்
அப்படியேசம்மதித்தார் அன்புடனேசெட்டிமார்கள்
அப்போகலியாணம் அன்பாகச்செய்யவென்று
பந்தலதங்கரித்தார் பாங்காகவப்போது
முத்தாலேகால்நிறுத்தி முக்காதம்பந்தலிட்டார்
பவளத்தால்கால்நிறுத்தி பதின்காதம்பந்தலிட்டார்
வெற்றிலையாலேயவர் விஸ்தாரப்பந்தலிட்டார்
எங்குமலங்கரித்தார் எத்திசையுநீர்தெளித்தார்
கண்ணாடிசல்லிகட்டி கவுரிமான்குச்சுவிட்டார்
பந்தலின்முன்பாக யிருவரையுங்கொண்டுவந்தார்
சீக்குகழித்தார்கள் சீராகயிருவருக்கு
பெண்ணையுமாப்பிள்ளையு மழகாயலங்கரித்தார்
மணவறையின்மேலாக யிருவரையுந்தானமர்த்தி
தாலிதரித்தாரே தனஞ்சயனார்கோவிலரும்
அம்மிமிதித்தார்கள் அருந்ததிகண்டார்கள்
சாலுங்காரகமுஞ் சந்திரனைத்தான்தொழுதார்
மாலைதரிக்கையிலே வாய்விட்டுதானழுதாள்
மாங்கனியைத்தான்கொடுத்து மாலையிட்டார்கோவிலனார்
மாலைகொண்டுவந்தவொரு மடத்தாண்டிபோகவில்லை
கூறைகொண்டுவந்தவொரு கொற்றவனும்போகவில்லை
சாலுகொண்டுவந்தவொரு சாலியன்போகவில்லை
உற்றார்க்குசோறிடலை உறன்முறைக்குபாக்கிடலை
பக்திவழங்கியே வந்தஜனம்போகவில்லை
இப்படிக்குதானிருக்க இன்பமுடனன்னேரம்
வடிவார்வடிவழகன் மன்னர்கோயில்தன்தோழன்
சிலைபோல்வடிவழகன் செட்டிமகனேதுசொல்வார்
கலியாணப்பந்தலிலே சதுர்வைக்கவேண்டுமென்றார்
ஆரைக்கொண்டுவைப்போமென்றார் அங்குள்ளவர்த்தகர்கள்

## மாதவி சதுருக்குவந்து கோவிலனை அழைத்துப்போகுதல்.

திருக்கடையூர்பட்டணமாம் தெய்வரம்பைமாதவியாள்
அவளைபழைத்துவந்து ஆடல்வைக்கவேண்டுமென்றார்
அஞ்சாம்பிராயத்தில் அழகுநிலைப்பக்கற்பித்து
அழகுநிலம்பக்கற்பித்து ஆடுவாள்மாதவியாள்
என்றுமேகோவிலனு ரெடுத்துரைத்தாரப்போது
அப்படியேயாகட்டென்று அனைவோருந்தாமுரைத்தார்
அப்போதுமாச்சோட்டா னழகுதுரைமன்னவனும்
என்னுதமென்னுகிறார் என்னிமனக்குன்றாகிறார்
சாதகமும்பொப்பாது தலைவிதியுந்தப்பாது
பன்னிரண்டுபிராயத்தில் பைங்கொடியாள்மாதவியாள்
மாதவிபண்டையில் மன்னவன்போவானென்று
சாதகமுறைத்தது சரியாகஆச்சுது
எப்படிநாமவனை இங்குவந்துஆட்டிவைப்போம்
என்றுமேசொல்லி வருத்தமுற்றான்மாச்சோட்டான்
அப்போதுகோவிலனு ரணமுகரேதுசொல்வார்
மங்கையினங்கொடியாள் மாதவியாள்வந்தாலே
வந்தாலேயல்லாது வல்லுயிருபோக்கிடுவேன்
அப்படியேயழைப்பமென்று ஆணழகர்சொன்னாரே
சேமக்குருத்தோலை சிறப்பாகதான்வாரி
ஈழப்பனவோலை யிருபக்கந்தான்வாரி
தாளிப்பனையோலை தலைபக்கங்காம்பரிந்து
கணபதிமுன்பாக காப்பிட்டுக்கொண்டாரே
முத்துப்பதித்ததுபோல் மூன்றுவரிதானெழுதி
பவளம்பதித்ததுபோல் பத்துவரிதானெழுதி
திருக்கடையூர்பட்டணம்வாழ் தேன்மொழியாள்மாதவிக்கு
வக்கணையுமொப்பனையும் வைத்தெழுதுகிறார்
கலியாணப்பந்தலிலே கச்சேரிவைக்கவேண்டும்
ஓலைகண்டநாழிகைக்கு வரவேண்டுமங்கையரே
என்றுஎழுதினார் இன்பமுன்னமன்னவர்கள்
ஓலையைத்தான்முடித்து செந்திரிக்கப்போட்டார்கள்
காலாளுஞ்சேவகரைக் கட்டழகர்தானழைத்து
கருணோலைதானெடுத்துச் சேவகர்கள்கைகொடுத்தார்
ஓலையைத்தாம்வாங்கி ஓடினாருத்தமர்கள்
பட்டணமாம்பட்டணமாம் திருக்கடையூர்பட்டணமாம்
திருக்கடையூர்பட்டணத்தை தேடியேவாரார்கள்
வசந்தமாலைமுன்பாக வந்துநின்றுமன்னமர்கள்
ஓலைச்சுருளையந்த வசந்தமாலைகைகொடுத்தார்
ஓலையைத்தாம்வாங்கி வாசித்தாளப்போது
அதிலிருந்தமர்மமெல்லாம் அறிந்தாளேவசந்தமாலை

இன்பங்குளிர்ந்து இருதோளும்பூரித்து
சரீரங்குளிர்ந்து சருவாங்கம்பூரித்து
பூரித்திருதோளும் பொன்னாபரணமின்ன
அடியென்மகளே அரிவையரேமாதவியே
வாருமெனத்தானழைத்து மங்கையவளேதுசொல்வாள்
கஞ்சிகொண்டுகளோ பரிக்குங் காவிரிப்பூம்பட்டணத்தில்
சோறுகொண்டுமதவடைக்குஞ் சொர்ணகிரிகன்றுடு
காவிரிப்பூர்பட்டணத்தில் கரைதுறையில்வர்த்தகர்கள்
மாநுகனசெட்டியார் மாச்சாட்டான்செட்டியார்
வரவேண்டுமென்றுசொல்லி வாவிட்டாருக்காரங்கள்
இட்சணமேபோய்வாரு மெத்திறையேமாதவியே
அப்படியேநல்லதென்று வாரணங்குமாதவியாள்
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைசாங்குளிட்டு
எண்ணாய்க்கச்சையெழுமுழம் எட்டுசத்தாய்பிகுவெடுத்தாள்
தட்டிவரிந்துகட்டி தானணிந்தாள்பொற்சிலம்பை.
இமைபாரிரம்பொன்பெற்ற இந்திரவர்ணபட்டாடை
உள்ளாடைபாவாடை மேலாடைப்பட்டாடை
குடுத்திணிரவிக்கை குசம்பாவும்பொற்சிலை
பிகுவெடுத்தஒட்டியாணம் மெல்லியிளங்கொடியாள்
ஆடைகளாபரண மடங்கலுந்தானணிந்து
ஆனையின்மேலகம்பமது அடைவாகத்தானிருத்தி
கட்டுவனைத்தானழைத்தாள் நலமானமாதவியாள்
மத்தளமும்சுத்திகளும் வகையாகத்தானெடுத்து
தாயாரருகில்வந்து தான்பணிந்துதெண்டனிட்டு
முக்காலடிவணங்கி மூவிருகால்தெண்டனிட்டு
போய்வாரெங்களுக்குப் புகழ்ந்துவிடைதாருமென்றாள்
அப்போதுவசந்தமாலை அரிவையர்கேதுரைத்தாள்
இளநீரிலூறவைத்த யின்பக்கனிப்பாக்கும்
தங்கச்சிமிழினில் தான்கொடுத்தாள்மையுமொன்று
அப்போதுமாதுயிளங்கொடியாள் மாதவியாளேதுசொல்வாள்
வண்ணமாய்கானைகொடுப்பேன் எத்திறையேதாயாரே
வெற்றிலையில்மைதடவி மெல்லியரேகொடுத்தாள்
தொடர்ந்துவருவார்காண் தோகையரேயுன்பிறகே
என்றுசொல்லிவாழ்த்தி யின்பமுடனனுப்பிவிட்டாள்
ஏறினாளானையின்மேல் யெத்திறையான்மாதவியாள்
ஆனையைத்தான்நடத்தி அன்பாகவாராளே
காவிரிப்பூம்பட்டணத்தில் கரைதுறையும்வாராளே
கலியாணப்பந்தலிலே கட்டழகிவந்துநின்றாள்
அருகிருக்கும்வர்த்தகரை அனைவரையுந்தான்பார்த்து
கைக்கூப்பிதெண்டனிட்டு கட்டழகிகும்பிட்டாள்

மாநாகன்செட்டி மாச்சோ[illegible]ளுக்கு
உனக்கென்னதான்வேண்டுமென்று போகிறையோசொல்லுமென்றார்
என்கூடப்பிறந்தொரு பொன்னுருவிமாலைதன்னை
கழட்டியெறிவேனான் கட்டழகர்வர்க்கதன்மேல்
ஆர்கழுத்திலவிழுந்தாலும் அழைத்துக்கொண்டுபோவேனென்
அதற்குசம்மதிகாணென்று தாம்பூலந்தாருமென்றாள்
சம்மதிப்பட்டார்கள் தாம்பூலங்கொடுத்தார்கள்
சிலைபோல்வடிவழகர் செட்டிபிள்ளைகோவலனை
அந்தப்புரந்தனிலே ஆனைமுகனைபொளித்து
தாயார்வனமாலைதனை காக்கதுக்குகாவல்வைத்தார்
வெளியிலனுப்பாதே மெல்லியிளங்கொடியே
வாசலிருந்துகொண்டு மனைவரைக்காருமென்றார்
அப்போதுசபையிலே அனைவோரும்வந்திருந்து
ஆடுமென்றுமங்கைபர்க்கு அனைவோரும்விடைகொடுத்தார்
நிர்த்தபெண்ணுன்மத்தனத்தை நிமிர்தமென்னுன்காற்சிலம்பை
ஒத்திலைகாலோடிபை ஒகமிட்டார்காற்சிலம்பை
மத்தளமுமணிக்குரலும் வர்த்தகர்கள்கேட்டார்கள்
சங்கீதவாத்தியத்தை சபையோர்கள்கேட்டார்கள்
சந்தோஷமாகவே சகலமானவர்த்தகர்கள்
ஆடையுமாபரணம் அன்பாகத்தான்கொடுத்தார்
வர்த்தகரைதான்பார்த்து மயிலனையாளேதுசொல்வாள்
என்கூடப்பிறந்தொரு பொன்னுருவிமாலைதன்னை
கழட்டியெறிவேனென் கட்டழகர்வர்க்கர்மேல்
என்றுசொல்லிமாதவியாள் இபலானமாலைதன்னை
கையிலெடுத்துக்கொண்டு கட்டழகியேதுசொல்வாள்
மாலைதான்பார்த்து மயிலனையாளேதுசொல்வாள்
எனக்கேற்றநாயகனை சேர்ந்திழையேபார்த்து
மனதுக்கிசைந்தொரு மன்னவனைதானபார்த்து
அவர்கழுத்திலேமாலை வம்பாகவிழுமென்று
மாலைக்குமுற்றியே மயிலனையாளெறியலுற்றாள்
அப்போதுபொன்மாலை அன்னமேயேதுசெய்யும்
மாதவிக்கேற்றதொரு மணவாளர்தன்கழுத்தில்
வந்துவிழுமென்று மன்னவனைதேடுதே
அச்சமயத்தில் அழகானகோவலனும்
மாளிகைக்குள்பூட்டிருக்கும் மன்னவனாகோவலனும்
மத்தளமுமணிக்குரலும் மன்னவனுங்கேள்விப்பட்டு
பெண்குரலுஞ்சத்தமும் புண்ணியனுங்கேள்விப்பட்டு
கூத்துபார்க்கவேண்டுமென்று கொற்றவனுந்தானெழுந்தார்
தாயார்தவனமாலை தையலருந்தான்தடுத்தாள்
கதவைத்திறந்துவிடு கட்டழகிமாதாவே
இல்லாமற்போனாலே வெண்ணுயிரைமாய்த்திடுவேன்

அப்போ-கதவைத்திறந்துவிட்டான் கட்டழகியாரும்
அப்போதுகோவிலனும் ஆணழகன் தானெழுந்து
சேலத்துருமாலை செக்காடுபொன்சரிகை
சாங்குவு நமாலை கள்ளர்கட்டுமுண்டாக
ஒருபொன்னைருமுழமாம் ஒற்றைகட்டிசோமனது
திருநெல்வேலிசோமன் சோகதிருக்கிக்கட்டினுரே
தங்கமிதியடியாம் தனிக்குழல்ரத்தினமாம
முத்துமெருவடியாம் முகக்குமிழ்ரத்தினமாம்
முத்துமிதியடியை தொட்டுநடந்துவாருர்
ஆலமரப்பிள்ளையார் கோவிலண்டைதேடிவாருர்
தக்காரற்காலிமேல் தனஞ்சயனுர்உட்கார்ந்து
தாம்பூலம்போட்டுக்கொண்டு தனஞ்சயனுருகில்வந்து
அவரழகைப்பார்த்தாலே அட்டாளுஞ்சொக்கரென்பார்
அட்டாளுஞ்சொக்கலிங்கம் ஆயனொனுசொல்லுவாரே
மதுரையாம்சொக்கலிங்கம் மகாதேவரென்பார்கள்
இப்படியாக யிவரிருக்கும்வேளையிலே
அப்போதுமாதவியா ளிவையருக்கான்பார்த்து
பொன்னுருவிமாலைதன்னைப் பொற்கொடியுமவிட்டெறிந்தாள்
ஆர்கழுத்திலவிழாமல அட்சணமேவருகுதுபார்
கோவிலனைத்தேடி வருகுதுபார்பொனமாலை
அவனையறியாமல் அவர்கழுத்தில்விழுந்ததப்போ
அப்போதுமாதவியா ளாரணங்குதான்பார்த்து
ஆனையைவிட்டிறங்கி ஆரணங்குமாதவியாள்
மாலையைத்தேடிக்கொண்டு வாராளேமாதவியாள்
கோவிலனண்டையிலே கொம்பனையாள்வந்துநின்று
வார்த்தைகளைத்தான்பார்த்து மயிலனையாளென்னசொல்லுவாள்
எனக்கென்னதியாகம் நீரின்பமுடன்தாருமென்ருள்
அளவற்றசொர்ணமதை ஆணழகர்தான்கொடுத்தார்
மாதவியாள்வாங்கிக்கொண்டு மயிலனையாளேதுசெய்தாள்
என்-பொன்னுருவிமாலைதனைப் புண்ணியரேதாருமென்ருள்
ஏதடிபெண்ணேயென்று இன்பமுடன்கேட்கலுற்ருன்
உன்-கழுத்திலிருக்குது கட்டழகாதாருமென்ருள்
பாராதுபோலேயவர் பார்த்துவிட்டார்கோவிலரும்
கழட்டிக்கொடுப்போமென்று கட்டழகர்கைபோட்டார்
கழட்டமுடிகூடவில்லை கட்டழகர்வர்த்தகர்க்கு
இரம்பவாள்கொண்டு எலமாயறுக்கச்சொன்னுர்
வாளுமழுந்துது மாலைகழளவில்லை
என்னசெய்வேன்மாதவியே யேந்திழையேபெண்கொடியே
வாங்கிக்கொண்டுபோடி மயிலனையேநான்தாரேன்
மாலைகொடாமலே போறனுமன்னவரே
தாம்பூலந்தாரேன் தனஞ்சயரேபோட்டுக்கொள்ளும்

அப்படியேதாருமென்றார் ஆனைமுகர்கோவிலனார்
வெற்றிலைப்பில்லைதடவி விதமாகச்சுருள்கொடுத்தாள்
தாம்பூலமருந்தினபின் தனஞ்சயனார்கோவிலற்கு
மருந்துமயக்க மதிமயக்கமாகுதுகாண்
உண்டைமருந்தாலே உளறித்தவிக்கிறாரே
மருந்துமயக்கத்தாலே மதிமயங்கியென்னசொல்வார்
ஆசைதந்தமாதங்கியே தோகையரேயுனைப்பிரியேன்
சுகந்தந்தமாதங்கியே தோகையரேயுனைப்பிரியேன்
நான்கூடவாரேனென்று நலமாகத்தானெழுந்தார்
மாணாக்செட்டியும் மாச்சோட்டானிருவருமாய்
ஓட்டம்பெருநடையாய் ஓடிவந்தாரிருவருமாய்
அப்பாமகனேயென்று அழுதுகொண்டேயுருகிறார்
எங்களைவிட்டுமல்லோ எவ்விடத்துநீபோறாய்
மாலையிட்டதேவி மயிலனையாள்தானிருக்க
கூரையிட்டதேவியுங்கண் கொம்பனையாளிங்கிருக்க
எங்களைவிட்டுமே எவ்விடத்துப்போறாய்நீ
வாருமென்றுசொல்லி வழிமறித்துதானிருந்தார்
அப்போதுகோவிலனா ரானைமுகரேதுசொல்வார்
தாயேதுதங்கையேது பெண்சாதிதானேது
எனக்காசைதந்தமாதங்கியா ளரிவையருமிங்கிருக்க
சுகந்தந்தமாதங்கியாள் சுந்தரியாளிங்கிருக்க
இவளைவிடபெண்சாதி யெந்தனுக்காருமில்லை
அவளுடனேசெல்வேனென்று ஆனைமுகன்சொல்லுகிறான்
அப்படியேபோகட்டுமென்று அனைவோரும்பின்னடந்தார்
அப்போதுகோவிலனார் ஆனைபின்மேலேறி
மாதங்கியும்கோவிலரும் வாரார்திருக்கடையூர்
திருக்கடையூர்தெருவில்வந்து நின்றார்களிருவருமாய்
ஆனையைவிட்டுமவ ரன்பாகத்தானிறங்கி
அமிர்தகண்டசர்கோவி லன்பாகத்தானிறங்கி
பொலிக்குடமுன்பாக பொற்கொடியும்வந்துநின்று
பொலிக்குடமுன்பாக பொற்கொடியுமேதுசொல்வாள்
உன்னைவிட்டுநானபிரியே னுத்தமனேயென்றுரைத்தாள்
முந்தாணிபோட்டுமந்த மெல்லியருந்தாண்டினளே
உன்னைவிடவேறேயொரு மன்னவரைநான்பாரேன்
எந்தனுக்குபிரமாணம் இஷ்டமுடன்செய்யுமென்றாள்
அப்போதுகோவிலனா ரானைமுகரேதுசொல்வார்
உன்னைவிட்டுநான்பிரியேன் உத்தமியேயென்றுரைத்தார்
தாயும்தந்தையும்நீயே சகலமும்நீயேயென்றார்
உன்னைவிடநானும் ஒருவர்முகம்பாரேனென்றார்
அந்தப்புறந்தேடி அரிவையவள்வாராளே
அரண்மனைக்குள்ளாக ஆனைமுகன்வந்துநின்றான்

தோம்கிடைக்கட்டிலந்த சுந்தரியாள் தான்போட்டாள்
சலசலப்பாயொன்று தையலருந் தான்போட்டாள்
அதின்மேலுட்காருமென்றாள் ஆரணங்குமாதவியாள்
அப்படியேயுட்கார்ந்தார் மாணமுகர்கோவிலனார்
கட்டிலின்காலொடிந்து கட்டழகர்தான்விழுந்தார்
என்னடிமாதவியே இப்படிக்குத்தான்விழுந்தேன்
ஆசைதந்தமாதவியாளரிவையருமோடிவந்து
என்னநான்செய்வேனையா என்னுடையபுண்ணியரே
இந்தநல்லகட்டில்விட எங்களுக்குத்தேயறையில்லை
உன்னாலேயெங்களுக்கு உண்டாகவேணுமென்றாள்
அப்படியேகல்லவென்று மாணமுகர்கோவிலனார்
அந்நேரவேளையிலே அரிவையந்தமாதவியாள்
பானையைத்தான்கழுவி பனிநீருலையார்த்து
சென்னசம்பாவரிசி தீட்டியுலையிலிட்டாள்
முத்துப்போலசாதம் வடித்தாளே மொய்குழலாள்
நலவெல்லம்பூசனிக்காய் நாலுவிதஞ்சமைத்தாள்
கத்தரிக்காய்கொய்வாள் கருணைபுளியிடுவாள்
வாழைக்காய்கொய்வாள் வழுதலங்காய்கருரிப்பாள்
ஈழப்பலாக்காய் இருமுள்ளுபோக்கிடுவாள்
சோலைப்பலாக்காய்கள் சுளைதிருத்திவாங்கிடுவாள்
கறியுங்கறிவகையும் கனமாகத்தான்சமைத்து
வாழையிலைபோட்டு வட்டித்தாள்சாதமது
அப்போதுகோவிலனார் போசனங்கள்தான்புசித்து
சாப்பிட்டிலைப்பாரி தாம்பூலந்தான்தரித்து
வெடிமான்சிலைபழகன் முகதுவிற்கும்வியாபாரி
சேமக்குருத்தோலை செம்பொன்னெழுத்தாணி
தாளிப்பனையோலை தலைபக்கங்காம்பரித்து
முத்துப்புதைத்ததுபோல் மூன்றுவரிதானெழுதி
மாநாகன்செட்டியார்க்கு மன்னனெழுதுகிறார்
வக்கணையுமொப்பனையும் வைத்தெழுதுகிறார்
திருக்கடையூர்பட்டணத்தில தெய்வரம்பைமாதவியாள்
தெய்வரம்பைமாதவியாள் தேன்மொழியாள்தன்னிடத்தில்
வருந்தப்படுகிறேன் மயிலனையாள்தன்னிடத்தில்
சித்திரமுகச்சாவடியில் தேடிவைத்ததிரவியங்கள்
பன்னிரண்டுகப்பல்பணம் வரவேண்டுமெந்தனுக்கு
வாராதிருந்தால்தான் மாண்டுமடிந்திடுவேன்
ஓலைகண்டநாழிகைக்கு வரவேண்டுமட்சணமே
என்றுசொல்லிஓலையில் எழுதினார்போது
செந்திரிக்கர்தான்போட்டார் தனஞ்செயனார்கோவிலரும்
தூதுவனைத்தானழைத்து ஓலையைக்கைகொடுத்து
காவிரிப்பூம்பட்டணத்தில் கரைதுறைக்குப்போகவென்றான்

அப்போதுசேவகர்கள் அடைவுடனேயோடிவந்தார்
காடுமலைதாண்டி கடுகெனவேயோடிவாறார்
சில்லென்று காடுவிட்டு செடியும்வனங்கடந்து
ஒட்டப்பெருநடையாய் ஓடிவருகிறானே
தண்ணீர்கண்டாற்குடியானே தாவுகண்டால்நில்லானே
பிணைபோடுமாடுகண்டாற் போனவழிபின்விடான்
கஞ்சிக்கொண்டுகளைபறிக்கும் காவிரிப்பூதேடிவாறான்
சோறுகொண்டுமதவடைக்குஞ் சொர்ணகிரிதன்னில்
மாநாகன்செட்டிமுன்னே வந்துநின்றார்சேவகனும்
சேவகனுமப்போது சுருளோலைதானைகொடுத்தானே
எங்கிருந்துவந்தவன்காண எனக்காரியச்சொல்லுமென்றான்
அப்போதுதூதவனும ஆனைமுகனென்னசொலவான்
திருக்கடையூர்பட்டணத்தில் தெய்வரம்பைமாதவியாள்
அவளிடத்தலதானிருக்கும் அழகானகோவிலனார்
கோயிலனார்தன்னுடைய குணமுள்ளதூதனையா
அவ்விடத்திற்றானிருந்து ஆனைமுகன்வந்தேனென்றான்
ஓலையைத்தான்கொடுத்து உத்தமனும்விலகினான்
மாநாகன்வாங்கி வகையுடனேவாசித்தானே
ஓலையிலுள்ள அதிசயத்தைத்தான்பார்த்து
கோவிலனார்கைநாட்டை கொற்றவனுந்தான்பார்த்து
கண்ணிலொத்திக்கொண்டான் கட்டழகனப்போது
மாதவிதன்னிடத்தில வர்த்தகம்வந்துசேர்ந்ததென்று
வந்தவொருவோலைதன்னை மன்னவனார்தானபார்த்து

## கோவிலன் தன்பணத்தையெல்லாம் மாதவிக்களித்தல்.

அப்போகப்பலுள்ளமாலுமியைக் கடுகவரவழைத்து
பன்னிரண்டுகப்பல்பணம் பாக்காய்ப்பயணமென்று
படவிலரிசியென்ன பட்டணத்துப்பாலையென்ன
சோங்குமிளகுமென்ன சொகைப்பலேலமது
இத்தனையுந்தான்கூட்டி இன்பமுடனனுப்பிவைத்து
கப்பலுக்குப்பாய்கட்டி கடுகவருகுதுபார்
திருக்கடையூர்தேடி தீவிரமாய்வருகுதங்கே
அங்கேலங்கருதான்போட்டு கலமாகத்திருக்கடையூர்
லாங்குபடவேறு கலமாகவந்துதங்கே
வடிவால்வடிவழகன் வர்த்தகனார்முன்னேவந்து
இல்லைபோலவடிவழகன் செட்டியார்முன்னேவந்து
அழகுடையவர்த்தகனை ஆனைமுகன்கோவிலனை
கண்டுமல்லோதெண்டனிட்டு கட்டழகன்மாலுமியும்
பன்னிரண்டுகப்பல்பணம் பாக்காகவந்ததையா
படவிலரிசிகளும் பட்டணத்துமாலைகளும்



சோக்கமிளகு சொர்னகப்பலேலவங்களும்
இத்தனையுபயங்களென்று எடுத்துரைத்தார்மாலுமியும்
அப்போதுகோவிலனும் ஆனமுகன்தான்மகிழ்ந்து
தக்கமிறியபடியாக் களிக்குமிழ்காகினமாம
மெருவடியினமேலேறி முத்துக்குடைபிடித்து
தேவதுரைகளுக்கு வாராரோகோவிலரும்
படவுபணத்தையவர் பாங்காயிறக்குமென்றார்.
அப்படியேயிறக்கின ஞானகொருமாலுமியும்
மற்றப்பணமெல்லாம் கப்பலிலேதானிருக்கு
இறக்கினபணமெடுத்து யேந்திழைபான்வீடுவந்து
மாதவியைத்தானழைத்து வடிவழகனேதுசொல்வான்
ஆசைதங்கமாதவியே அரிவையைத்தானழைத்து
உனக்கென்னவேண்டுமென்று உத்தமனார்கேட்கலுற்றார்
அப்போதுமாதவியா ளரிவையருமேதுசொல்வார்
பனிரண்டுகாணிநிலம் பாங்காகவேண்டுமென்றார்
அப்படியேநல்லதென்று ஆனமுகன்கோவிலனும்
அந்தவூரிலிருக்கும் ஆனமுகன்முனிசிப்பை
வாருமென்றுதானழைத்து வர்த்தகருமேதுசொல்வார்
பனிரண்டுகாணிநிலம் பாங்காகவேணுமென்றார்
அப்படியேதான்கொடுத்தா ரானகொருமுனசிப்பு
மாதவிக்குவேணுமென்று மன்னனாங்கோவிலனும்
எழுநிக்குஉப்பரிகை இன்பமுடனகட்டுகிறார்
அரண்மனைகளாஸ்தானம் அன்பாகக்கட்டுகிறார்
பூசைபண்ணுமண்டபம் பொற்கொடிக்குகட்டுகிறார்
பற்றிபுலாவுகைக்குப் பர்னசாலைபுண்டுபண்ணார்
ஜன்னலெல்லாம்பொன்றேலே கதவெல்லாங்கண்ணாடி.
சாந்துகளாயினார் தையலுடமாளிகைக்கு
வீதிதிரிதுமவள் வீட்டுக்குவந்தாளே
கைகால்கழுவுமிடம் சலவைக்கல்லாலபுதைத்தார்
இத்தனையுமமர்த்திவைத்தா ரிளங்கொடியாள்நாயகிக்கு
மாதவியைதானழைத்து வடிவழகனேதுசொல்வான்
என்னென்னவேண்டும் இளங்கொடியாள்நாயகிக்கு
அப்போதுமாதவியாள் வடிவழகியேதுசொல்வாள்
உமக்குனமருங் கணக்குண்டோவேறேயில்லை
என்னகணக்கு இளங்கொடியேசொல்லுமென்றார்
காலைகடைசிலவுகொள்ள நாலமரக்கால்பொன்வேணும்
உச்சிக்கடைசிலவுகொள்ள ஒருமரக்கால்பொன்வேணும்
அந்திகடைசிலவுகொள்ள அரைமரக்கால்பொன்வேணும்
பாக்குகொள்ளவெத்தலுக்கு பத்துலட்சம்பொன்வேணும்
புகயிலைக்குவெத்தலுக்குப் பொன்கப்பல்பணம்வேணும்

பஞ்சணைக்குஆயிரம்பொன் சொர்ணகப்பல்பணம்வேணும்
நித்திரைக்குஆயிரம்பொன் சத்தியமாய்த்தரவேணும்
படுக்கைக்குஆயிரம்பொன் பக்குவமாய்த்தரவேணும்
பஞ்சணைக்குஆயிரம்பொன் பாங்காய்த்தரவேணும்
இப்படிக்குத்தரவேணும் இன்பமுள்ளநாயகரே
இன்னமென்னவேணும் இளங்கொடியேசொல்லுமென்றார்
நட்டுவர்க்காயிரம்பொன் நலமாகத்தரவேணும்
மத்தளக்காரனுக்கு வளமாகத்தரவேணும்
சுத்திக்காரபயலுக்கு சொர்ணங்கொடுக்கவேணும்
என்தாயார்வசந்தமாலைக் காயிரம்பொன்தரவேணும்
இப்படிக்குச்சத்தியமா யெனக்குமேநீர்தாரும்
இன்னமென்னவேணுமடி யிளங்கொடியேகேளுமென்றார்
குடுத்தினிரவிக்கை குசும்பாவின்சேலைவேணும்
பட்டுரவிக்கை பசும்பொன்னாற்சேலைவேணும்
இரத்தினசடையில்லையும் நாயகிக்குவேண்டுமென்றாள்
அப்படிக்கேதான்செய்தா ராணழகர்கோவிலனார்
கல்லிழைத்தகம்மலது கட்டழகர்செய்தார்காண்
கொப்புடனேவாளி கோர்வைமணித்தாவடமும்
முத்திழைத்தமூக்குத்தி மெல்லியர்க்குசெய்தார்காண்
எட்டுவிரலுக்கு மிசைந்தகணையாழி
வாங்கியொன்றுசெய்தார் மயிலணையாள்மாதுக்கு
காலாழிபீலாழி கண்டசர்மார்பதக்கம்
சவுளிபதக்கங்களும் கண்டசரந்தானுமின்ன
இத்தனை ஆபரண மேந்திழைக்குசெய்தார்காண்
இப்படிக்குக்கோவிலனார் யிருக்கின்றவேளையிலே
பன்னிரண்டுதன்வருஷம் பைங்கிளியாள்வீடுதன்னில்
பட்டணத்தான்கோவிலனும் பாங்குடனேவீற்றிருந்தார்
ஆட்டமாடிவிடுவந்தா லடிதொடைதான்பிடிப்பார்
பாட்டுபாடிவிடுவந்தால் பக்கமெல்லாந்தான்பிடிப்பார்
தலைகடைக்குப்போனால் தண்ணீர்கொண்டுபோவாரும்
புறக்கடைக்குப்போனால் பின்தொடர்ந்துபோவாரும்
வைத்தசாதமுண்ணுவார் வழிநடந்தால்கால்பிடிப்பார்
ஆடைகலைந்துதானால் அணைத்துமெள்ளகட்டிடுவார்
சேலைகலைந்துதானால் சேர்த்துமெள்ளகட்டிடுவார்
தலைமாட்டில்வந்துநின்று தாழம்பூசூட்டுவார்
இப்படிக்குத்தானிருந்தார் யேந்திழையாள்தன்னிடத்தில்
அவளுக்கு-தம்பலக்காளாஞ்சி தலைமேல்சுமந்திருப்பார்
எச்சிற்படிகமதை யேந்திருப்பார்கோவிலனார்
அமரர்கள்கோவிலுக்கு ஆடயிவள்போனால்
அவள்பின்னேபோவாரு மாணழகர்கோவிலனார்
பிளவுதான்கண்டுதானால் தவணைவைத்துகட்டுவாராம்

இப்படிக்குஇஷ்டமா யிருந்தாரேகோவிலனார்
பனிரண்டுவருஷமாய் பைங்கொடியாள் தன்னிடத்தில்
இன்பமுடனே யிருந்தாரேகோவிலனார்
பன்னிரண்டுதன்வருஷம் பட்சமுடன் தானிருந்தார்
அணியபெண்ணிடத்தி லன்புடனே தானிருந்தார்
மானுங்கலைபோல மருவிவிளையாடிருந்தார்
குயிலும்மயிலும்போல கூடிவிளையாடிருந்தார்
சாரையும்சர்ப்பம்போல சருவிவிளையாடிருந்தார்
இஷ்டமுடன் தானிருந்தார் ஏந்திழையாள் தன்னிடத்தில்
இப்படிக்கவிருந்தா ரின்பமுடன்கோவிலனார்

காவிரிப்பூம்பட்டணத்தில் கர்ணகியம்மன் வரலாறு கூறுதல்.

பட்டணமாம்பட்டணமாம் காவிரிப்பூம்பட்டணமாம்
கஞ்சிகொண்டுகேணிபழிக்குங் காவிரிப்பூம்பட்டணத்தில்
சோறுகொண்டுமதவடைக்குஞ் சொர்ணகிரிபட்டணத்தில்
காவிரிப்பூம்பட்டணத்தில் கர்ணகையாள் தன்றனக்கு
பன்னிரண்டுவயதாச்சு பைங்கொடியாள் தன்றனக்கு
நாளொருமேனியும் நட்சத்திரப்போல்வளர்த்தாள்
இப்படிக்குதான்வளர்த்தா ளேந்திழையாள்கர்ணகையும்
நாலொருபெண்களைப்போல் நாயகியாள் தான்வளர்த்தாள்
அப்படிவளர்த்துவாரா ளாரணங்குநாயகியாள்
தன்புத்திதனக்குமே தையலர்க்குநேர்ந்ததுகாண்
அப்போதுதாதியரை ஆரணங்குதானழைத்து
கண்ணாடிகொண்டுவந்து கட்டழகிநாயகியாள்
தன்னழகைத்தான்பார்த்தாள் தாமக்கருங்குழலாள்
கொண்டையிலேபூவும் குவளையிலேமையழகும்
கையிலேகங்கணமும் கழுத்திலேதாலிகளும்
இடையிலேகூறையும் முகத்திலேமஞ்சளுமாய்
கண்ணின் திருவழகும் கஸ்தூரிபொட்டழகும்
கஸ்தூரிபொட்டழகைக் கண்டுவிட்டாள்கர்ணகையாள்
எத்தனுக்குதாலியது வந்ததைசொல்லுமென்றாள்
ஆர்செய்தவேலையிது அரிவையரேசொல்லுமென்றாள்
கலியாணப்பந்தலிலே கட்டினதாலியது
இப்படிக்குகட்டினவ ரெங்கேயடிதாதியரே
மாமியார்பூர்ணமாலை மயிலினையைக்கேட்டையானால்
அந்தவரலாற்றை அடிபோடேதானுரைப்பாள்

கர்ணகிமாமியாரை தன்புருஷனெங்கேயென்று கேட்பது.

எதினால்பல்லக்கு எடுத்தார்கள்தாதியர்கள்
மாமியார்வீடுதேடி வாராளேமயிலனையாள்
மருமகள்வருவதை மாமியார்தான்பார்த்து
பச்சைக்கம்பளம்விட்டு பைங்கொடியாளெழுந்திருந்து
எதிர்கொண்டுவாராளே யேந்திழையாள்பூர்ணமாலை

மாமியைக்கண்டவுடன் மயிலனையுந்தெண்டனிட்டாள்
வாழ்த்தியெடுத்தணைத்தாள் மருமகளையப்போது
ஆசனமும்போட்டா ளானதொருமருமகட்கு
எங்கேவந்தீரென் றிளங்கொடியுங்கேட்டாளே
மாமிமுகம்பார்த்து மயிலனையுமேதுசொல்வாள்
மாலைதரித்ததொரு மணவாளனெங்கேயென்றாள்
தாலிதரித்ததொரு தனஞ்செயனெங்கேயென்றாள்
காசுகடைநிற்கின்ற கட்டழகரெங்கேயென்றாள்
எவ்விடத்தில்காசுகடை யெனக்கரியச்சொல்லுமென்றாள்
காசுகடைபக்கத்திலே வேசிகடைகளென்று
வேசிகடைவீட்டில் வீற்றிருப்பாருன்புருஷன்
எத்தனைநாளாச்சு யென்புருஷன்வீடுவந்து
பன்னிரண்டுவருஷமாச்சு பைங்கிளியேவீடுவந்து
திருக்கடையூர்பட்டணத்தில் தெய்வரம்பைமாதவியாள்
அவள்வசத்திலிருக்கிறா றுணழகருன்புருஷன்
அவரையழையாமல் போனதென்ன அத்தையரே
வேசியுடன்வீட்டுக்கு போனவனைநானழைத்தால்
நம்மொத்தவர்த்தகர்கள் நம்மைமதியார்கள்
ஆகையினாலேநாங்க ளழைக்கவில்லைமங்கையரே
உன்னாலேயானுக்கா லழையுமென்றாளுத்தமியும்
அப்படியேநல்லதென்று அரிவையருந்தானெழுந்தாள்
தன்னுடையமாளிகைக்கு தையலரும்வந்துநின்று

கர்னகி தன்புருஷனுக்கு ஓலையெழுதி பனுப்புதல்.

தாளிப்பனையோலை தலைபக்கங்காம்பரிந்து
சுழப்பனையோலை யிருபக்கங்காம்பரிந்து
கணபதியைத்தானினைந்து யெழுத்தாணிகைபிடித்து
ஐக்துவயதினிலே யறியாதநாளையிலே
மாலையிட்டுமூலைவைத்து மாதவியாள்வீடுசேர்ந்து
தாலிகட்டிமூலைவைத்து தாய்வீடுபோய்நுழைந்து
பன்னிரண்டுதன்வருஷம் பரஸ்திரீயாள்வீடுசேர்ந்து
மாலையிட்டதேவிநான் மாண்டுமடிகிறேன்
தொண்டையிலேஜீவன் திடுக்கிட்டுப்போகுதுகாண்
உற்றார்கள்பெற்றார்கள் பொன்னுரைத்துநாவிலிட்டார்
அப்படியும்போகவில்லை அரிவையுடதன்னுயிர்தான்
கல்லென்றாலென்கணவன் புல்லென்றாலென்புருஷன்
உம்முடையகையாலே துளசிதீர்த்தம்விட்டாலே
என்னுடையசீவனது பிறந்துமடிந்துவிடும்
கட்டினதாலியை கையாலேவாங்கிக்கொண்டு
உற்றுரிமைசெய்துவிட்டு வுத்தமரேபோய்நடவும்
நீர்-வருமளவுமெந்தனுயிர் மன்னவரேபோகாது
ஓலைகண்டநாழிகைக்கு வாவேண்டுமுத்தமரே

என்றுசொல்லிஓலை எழுதினன்கர்ணகியும்
செந்திரிக்குத்தான்போட்டு தலைப்புறத்தில்கட்டனாம்
தாதிகளைத்தானழைத்து ஓலையைக்கைகொடுத்தாள்
திருக்கடையூர்பட்டணத்தில் தீவிரமாய்நீங்கள்போய்
மாதவியைஅறியாமல் வடிவழகர்தன்கையிலே
ஓலையைகொடுத்து உத்தமனார்கோவிலனை
பல்லக்கிலேற்றிக்கொண்டு பாங்கியரேவாருமென்றாள்
வனமாய்வனந்தாண்டி வாறார்கள்தாதியர்கள்
காடுசெடிதாண்டி கடுகவேவாறார்கள்
கல்லென்றகாடுஞ் செடியும்வனந்தாண்டி
புல்லென்றகாடும் புலிகள்வனந்தாண்டி
வனமாய்வனந்தாண்டி வாறார்கள்தாதியர்கள்
சித்ரமுகச்சாவடியில் தேன்மொழிமார்வந்திறங்கி
பல்லக்கைவிட்டிறங்கி பாங்கியர்கள்தானிருந்தார்
அந்நேரவேளையிலே ஆணழகர்கோவிலனார்
சித்ரமுகச்சாவடிக்கு கோவிலனும்வாராரே
பூசைகள்தான்முடிக்க புண்ணியரும்வாராரே
பதாஸ்தானந்தேடி யிருந்தாரேகோவிலனார்
ஆற்றுமணலெடுத்து ஆவிடையாருண்டுபண்ணி
தோட்டமதுதிறந்து செவ்வலரிபூவெடுத்து
வாசற்படிதிறந்து வர்ணலட்சம்பூவெடுத்து
கொண்டுவந்தபுஷ்பமதை குபுகுபென்றுதான்சொரிந்து
அட்டாருஞ்சொக்கரையும் அங்கயற்கண்ணம்மையும்
அன்பாகமனதிலே ஆணழகர்தானினைந்து
கண்ணிரண்டுமூடிக்கொண்டு கையிரண்டுமேந்திக்கொண்டு
சிவசிவாவென்றுசொல்லி செயகண்டிதானடித்தார்

கர்ணகி ஓலையைக் கோவிலனார் காணுதல்.

செயகண்டிதானடிக்க தேன்மொழியாளோடிவந்து
பூசையிலேதானிருக்கும் புண்ணியனார்கைதனிலே
ஓலைச்சுருளையந்த உத்தமிமார்தான்கொடுத்தார்
ஓலையைத்தான்வாங்கி உத்தமரும்வாசித்தார்
கர்ணகிகைநாட்டை கட்டழகன்கண்டாரே
கோமளையாள்கைநாட்டை கோவிலனும்கண்டாரே
ஓலையினுள்ளதொரு வக்கணைகள்தாமறிந்து
சிவசிவாவென்றுசொல்லி திருச்செவியில்கையைவைத்து
அரகராவென்றுசொல்லி அவர்செவியில்கையைவைத்து
இப்படிக்கிசேரிட்டதோ எந்திழையேயுந்தனுக்கு
நல்லவனார்செயனுக்கு என்னதான்செய்வேனென்று
தாதிகளைத்தானிருத்தி தனஞ்செயனார்கோவிலரும்
மாதவியாள்தன்னிடத்தில் விடைபெற்றுவாரேனென்று
தலைமேலேகையைவைத்து தானழுதுவாரானும்.

என்னசொல்லியழுதுவாரா சின்பமுடன்கோவிலரும்
ஐந்துவயதிலே அறியாதகாளையிலே
மூன்றுபிராயத்திலே மூலைகுடிக்கும்காளையிலே
மடிமேலெடுத்துவைத்து மாங்கனியைக்கைகொடுத்து
மாலையிட்டுவைத்துநான் மாதவியாள்வீடுவந்தேன்
கூரையிட்டுதனியேவைத்து கூத்தியார்வீடுவந்தேன்
மாலையிட்டதேவியவள் மாண்டுமடியலாச்சே
உன்னாலேயென்னசுகம் உத்தமியேநான்கண்டேன்
மாலையிட்டதல்லாது மற்றொருசுகமறியேன்
கூறையிட்டதல்லாது கூடிசுகமறியேன்
வீணுக்குத்தாலிகட்டி விருதாவாய்விட்டுவந்தேன்
ஆசைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
நம்பியிருந்தேனே நட்டாற்றில்விட்டாயே
தலைமேலேகையைவைத்து தனஞ்செயரும்வாராரே
மாதவியாள்வீடுதேடி வாராரேகோவிலனார்
கூட்டமாய்க்காற்றடித்தால் கொம்போடேகொம்பசையும்
தனிமரமாய்க்காற்றடித்து தாவிப்புலம்புரேனே
என்று-முத்துப்போல்கண்ணீரை முகமெல்லாஞ்சோரவிட்டு
பவளம்போல்கண்சலத்தை பக்கமெல்லாஞ்சோரவிட்டார்
இப்படிக்குத்தானழுது ஏந்திழையாள்முன்னேவந்து
முருகுழலாள்அரண்மனையில் முடிமன்னர்வந்துநின்று
தலைவாசல்வந்து தனஞ்செயனார்நிற்கிறாரே
மாதவியைக்கண்டு வடிவழகர்நிற்கையிலே
அழுதகண்ணுஞ்சிந்தையுட னுணமுகன்நிற்கையிலே
அப்போதுமாதவியா ளன்பாகத்தான்பார்த்து
ஆரடித்தாரேனழுதாய் அழுதகண்ணுநீர்ததும்ப
அடித்தவரைச்சொல்லுமென்று ஆரணங்குகேட்கையிலே
கோவிலர் பெண்சாதியிடம்போக மாதவியை செலவு கேட்குதல்.
அப்போதுகோவிலரு மரிவையருக்கேதுசொல்வார்
ஆருமடிக்கவில்லை அன்னியருந்தீண்டவில்லை
ஐந்துபிராயத்திலே அறியாதகாளையிலே
கொஞ்சும்வயதிலே கொடிதானகாளையிலே
மடிமேலெடுத்துவைத்து மாங்கனியைகொடுத்து
மாலைதரித்ததேவி மங்கையருமாண்டாளென்று
கூறைதரித்ததேவி கொம்பனையுமாண்டாளென்று
பத்தினியுமாண்டாளென்று பட்டணத்துதாதிவர்தான்
உத்தமியுமாண்டாளென்று ஓலைகொண்டுதாதிவர்தான்
மாண்டுபோனகன்னியாள் மதிமுகத்தைப்பார்க்கவேண்டும்
செத்துபோனகன்னியாள் திருமுகத்தைக்காணவென்று
வாழ்வுக்குதவாவிட்டால் சாவுக்குதவவேண்டும்
நன்மைக்குதவாவிட்டால் துன்மைக்குதவவேண்டும்
என்றெனத்தவர்த்தகர்கள் என்னைமதியார்கள்

சரியொத்தவர்த்தகர்கள் சற்றுமதியார்கள்
நான்-ஊருமட்டும்போய்வாரேன் ஒருவார்த்தைசொல்லுமென்றார்
காடுமட்டும்போய்வாரோன் நல்லவார்த்தைசொல்லும்பெண்ணே
முத்தானவாய்திறந்து உத்தாரஞ்சொல்லும்பெண்ணே
அப்போதுமாதகியா ளாரணங்குயேதுசொல்வாள்
என்னிலுந்தானழகோ ஏதுங்கெட்டகர்னகையாள்
கூத்தியார்நானிருக்க கொண்டவள்மேலாசையென்ன
வேசியவள்நானிருக்கத் விரல்கொடுத்தாளாசையென்ன
தாசியவள்நானிருக்கத் தாலியுள்ளாளாசையென்ன
என்னிலுந்தானழகோ யேதுங்கெட்டகர்னகியாள்
மறந்துவிடுமறந்துவிடு மாலையிட்டாள்தன்னுசை
போட்டுமறந்துவிடு பொற்கொடியாள்தன்னுசை
பன்னிரண்டுதன்வருஷம் பஞ்சணைமேல்நாமிருந்து
கூடிக்குலாவிக்கொண்டு கொற்றவனேநாமிருந்தோம்
சாரையும்சர்ப்பமும்போல் சருவிவிளையாடிருந்தோம்
குயிலும்மயிலும்போல் கூடிவிளையாடிருந்தோம்
மானுங்கலைபோல மருவிவிளையாடிருந்தோம்
எள்ளுக்குளெண்ணெயைப்போல் எந்நாளும்வாழ்ந்திருந்தோம்
பாலுக்குள்வெண்ணெயைப்போல் பாவியேநாமிருந்தோம்
எள்ளுவேறெண்ணெவேறே பிரியவைத்தாள்மாபாவி
விட்டுதோஉன்னுசை விளாம்பழத்துஓடதுபோல்
வேண்டுமென்றநாளையிலே வேம்புகரும்பாயிருந்தேன்
வேண்டாதநாளையிலே வேப்பங்கசப்பானேன்
சட்டிசுட்டார்போலே கைவிட்டுபோறேனென்றீர்
ஆரைச்சதமென்பேன் அன்னியனைத்தஞ்சமென்பேன்
நம்பியிருந்தேனே நட்டாற்றில்விட்டீரே
இப்போ-ஊருக்குப்போரேனென்று உத்தமனார்கோவிலரே
மனதுதான்கிட்டுமோ மன்னவரேயுந்தனுக்கு
என்னகுற்றஞ்செய்தேனென்று என்னைவிட்டுப்போறேனென்றீர்
என்னைநீவிட்டுபோக என்னமனந்தோணுதுகாண்
ஆசையைதீர்த்துவிட்டு அம்பலத்தில்விட்டீரோ
முத்துப்போல்கண்ணீரை முகமெல்லாஞ்சோரவிட்டாள்
ஆரைவிட்டுகண்சலத்தை சோரவிட்டுதானழுதாள்
பட்டுபோல்வெம்பியவள் பவளம்போல்நின்றழுதாள்
மானழுதபார்வைபோல் தானழுதுவாடுகிறாள்
அப்போதுகோவிலனும் ஆணழகன்தானெழுந்து
முந்தாணிகொண்டு முகமெல்லாம்தான்துடைத்து
உன்னைவிட்டுநான்பிரியே னொருநாழியானாலும்
கொண்டவளைத்தான்பார்த்து கொம்பனையேவாறேனடி
உற்றுரிமைசெய்துவிட்டு ஒருநொடியில்வாறேனடி
கட்டியதாலிதன்னை கைமேலேவாங்கிக்கொண்டு
வைகையில்ஸ்நானம்பண்ணி வருவேனடியுன்மனைக்கு



கோவிலன் மாதவிக்குப் பதுமைசெய்து கொடுத்தல்.

ஒன்றுக்குமஞ்சாதே ஒளிவுள்ளகண்மணியே
சந்தோஷமாகவே தையலேயனுப்பிவைத்தால்
காவிரிப்பூம்பட்டணத்தில் கரைதுறைக்குப்போய்வாரேன்
என்றுசொல்லிகோவிலனு ரெடுத்துரைத்தாரன்னேரம்
மாதகி கோவிலனை உன்னைப்போல் பதுமைசெய்து
வைத்துப் போய்வாருமென்று சொன்னது.
அப்போதுமாதகியாள் அரிவையாளேதுசொல்வாள்
உன்னைப்போலொத்த பதுமையொன்றுசெய்துவிட்டு
சிறுபதுமைசெய்துவிட்டு செட்டிபிள்ளைபோய்வாரும்
மணிப்பதுமைசெய்துவைத்து மன்னவரேபோய்வாரும்
அப்போதுகோவிலனார் ஆணழகரேதுசொல்வார்
சித்திரமுகச்சாவடியில் தேன்மொழியேநானும்போய்
களஞ்சியத்துபணங்களை கடுகெனவேதானழித்து
பதுமையொன்றுசெய்துவைத்து பைங்கிளியேபோய்வாரேன்
களஞ்சியத்தைத்தேடி கட்டழகர்வாராரே
பொன்னுமிதியடியை போட்டுமிகநடந்து
திருநெல்வேலிசோமன் சிராகத்தானுடுத்தி
கர்ங்குவுருமாலை கள்ளார்கட்டுமுண்டாச்சு
சேலத்துருமாலை சேர்த்திருத்திகட்டினாரே
சவுளிகடுக்கனது சன்னல்பின்னல்தாழ்வடமும்
ஒண்டிக்கல்முருகுதான் ஒருகாதில்சோதிமின்ன
முப்புரிநூலுமது மூன்றுலட்சம்பொன்பெறுமே
செக்கசிவந்தவர்காண் செங்கீரைத்தண்டழகர்
மாங்காய்முடியழகன் மாதளம்பூமேனியனார்
தானுமழகுடையோர் தக்கோலந்தின்றவர்காண்
அழகாலழகனவன் அதிசயித்தவர்த்தகர்காண்
அட்டாளுஞ்சொக்கரைப்போ லாணழகன்வாரானே
மாதகிக்குபதுமைசெய்ய வாராருங்கோவிலனார்
பஞ்சணத்தார்வீடுதேடி பட்டணத்தார்வாராராம்
குட்டியென்றவாச்சாரி குருபுத்திரர்கம்மாளர்
சுப்பனென்னுமாச்சாரி சுத்தபுத்திகம்மாளர்
அண்ணன்றம்பியேழுபே ருடைதொருகம்மாளர்
பஞ்சணத்தார்வீடுதேடி பட்டணத்தார்வாராரும்
அப்போதுபஞ்சணத்தா ரண்ணன்றம்பியேழுபேரும்
அட்டாளுஞ்சொக்கரைப்போ லழகுடையார்வாராரும்
மதுரைவாழும்சொக்கரைப்போல் மகாதேவர்வாராராம்
நாம்-கேட்டவரந்தருவார் கீர்த்தியுள்ளசொக்கரவர்
தோட்டமதுதிறந்து தொன்னைதைத்துப்பூவெடுத்து
வாசற்படிதிறந்து வண்ணவட்டம்பூவெடுத்து
ஓடுகிறகெங்கையிலே ஒருசொம்புஜலமெடுத்து
பாதமதுதுலக்கிப் பட்டாடைத்தானெடுத்து
ஓட்டம்பெருநடையாய் ஓடிவந்தார்பஞ்சணத்தார்

அட்டாளுஞ்சொக்கலாபரென்றுமனதிலெண்ணி
பாதமதுதலக்க பட்டாலடிதுடைத்து
கொண்டுவந்தபுட்பமெல்லாம் குப்பதென்றுதான்சொரிந்து
வாரிவந்தபுட்பமெல்லாம் மலரடியில்தான்சொரிந்து
மூக்காலடிவணங்கி மூவிருகால்தெண்டனிட்டு
வந்துபணிந்தவரை கண்டக்கோவிலனார்
சிவசிவாவென்றுசொல்லி திருச்செவியில்கைவைத்து
அரகராவென்றுசொல்லி அருஞ்செவியில்கைவைத்து
என்னைப்பணிந்தவகை ஏதுவகைசொல்லுமென்றார்
அட்டாளுஞ்சொக்கரென்று அடிபணிந்தோம்நாங்களும்மை
கேட்டவரந்தருவீரென்று கீர்த்தியுடன்தான்பணிந்தோம்
சொக்கரல்லசொக்கரல்ல சாதியிலேசெட்டியென்னை
தான்பதுமைபண்ணவந்தேன் பட்டணத்தார்கோவிலன்றான
மாதவியைப்பதுமைசெய்ய வடிவழகன்வந்தேனென்றான்
அதுஉங்களாலாகுமோ உத்தமரேசொல்லுமென்றார்
எங்களாலாகுமென்று அழைத்துவந்தாராண்மனைக்குள்
வட்டமணைபோட்டார் வடிவழகன்கோவிலற்கு
வட்டமணையின்மேல் வடிவழகனுட்கார்ந்து

கோவிலன்தன்னைப்போல பதுமைசெய்யச்சொல்ல கம்மாளர்
துரிதத்தில் தங்களால் முடியாதென்றது.

என்னைப்போல்பதுமையொன்று இன்பமுடன்செய்யவேண்டும்
எத்தனைநாளையிலே செய்துகொடுப்பீரென்றார்
எட்டுநாளொருவாரம் இருப்பீரேயாமாகில்
உம்மைப்போல்பதுமை உத்தமரேயாமாகில்
ஒருநாழிகைக்குள்ளாக செய்யவேணுமென்றுரைத்தார்
எங்களாலாகாதென்று சொன்னார்கள்பஞ்சணத்தார்
என்னைப்போல்உருவுகட்டி தாரீரோவென்றுகேட்டார்
மெழுகாலேஉருவுகட்டி முடிமன்றுசெய்யவேண்டும்
அதிலேபழுதானலாகாதுகோவிலரே
மறுபடியுமுருக்கியல்லோ செய்யவேண்டுமென்னவரே
எவ்வளவுவேலைகொள்ளு மெங்களுக்கென்றுசொன்னார்
அரைநாழிக்குள்ளேசெய்ய எங்களாலாகாது
அப்போதுகோவிலனாராமுகமேதுசொல்வார்
பொன்னையுருக்கியல்லோ புண்ணியரேதாருமென்றார்
அப்படியேயல்லவென்று கம்மாளர்சம்மதித்தார்
மூசையிலேபோட்டு உருக்கினார்பொன்னையும்
அப்போதுகோவிலனாராணமுகமென்னசெய்வார்

கோவிலற்கு பொற்பதுமை அமைந்தது.

புத்துமண்ணுங்கொண்டுவந்து புண்ணியனாருஞ்ஞானம்
அத்தைக்குழுவிகல்லுபோல் ஆணழகர்செய்தாரகம்
சுற்றிநிலைவைத்தார் சொர்ணங்கொண்டுவாருமென்றார்

அப்போதுஆரைநினைக்கிறாளற்றசிந்தையிலே
பத்தாதபத்தினியே பழுதுபடாரத்தினமே
குற்றமற்றரத்தினமே கோவிலிங்கிசிர்மகளே
நீபத்தினியெய்யானால் பதுமையமையவேண்டும்
பத்தினியைத்தானினைத்து பஞ்சலோகந்தான்கவிழ்த்தார்
ஓடியுருகுதங்கே உள்ளுருகிப்பாயுதங்கே
ஐந்தெழுத்துபாவனையும் ஆணழகன்கோவிலன்போல்
பட்டணத்தார்போலாக பதுமையமைத்ததங்கே
பஞ்சணத்தாரையழைத்து பட்டணத்தாரேதசொல்வார்
கருவுகட்டிதாங்கவென்று பட்டணத்தார்தாமுஞ்சொன்னார்
இரவைசல்லாதான்மூடி கலமாகக்கொண்டுவந்தார்
குளத்தங்கரைக்கவர் கொண்டுவந்தார்பஞ்சணத்தார்
கருவுகள்கட்டினார் பஞ்சணத்தாரப்போது
அழகுதுலங்குது ஆனந்தங்கொஞ்சுது
அதினுடையதன்னழகை கண்டார்கள்பஞ்சணத்தார்
நம்மாலேயாகுமோ நலமாகசெய்வதற்கு
அனைநாழிக்குள்ளே யவனைவைக்கக்கூடாது
பதுமையைக்கொண்டுவந்து பட்டணத்தார்கைகொடுத்தார்
பதுமையையெடுத்துக்கொண்டு பட்டணத்தார்வாராரே
மாதகியாள்அக்கபுரம் வாராரேகோவிலனார்
தலைக்கடைவாசலிலே வந்துநின்றார்கோவிலரும்
பதுமையயங்குவைத்து பட்டணத்தாருள்நுழைந்தார்
மாதகியாள்முன்வந்து வடிவழகனேதுசொல்வான்
பொழுதேறிப்போகுதடி போகவேணுங்காவிரிப்பூ
நாளேறிப்போகுதடி நடக்கவேணுங்காவிரிப்பூ
போகவிடைதாருமென்றார் பொற்கொடியேமாதகியே
அப்போதுமாதகியாள் ஆரணங்கென்னசொல்வாள்
பதுமைகொண்டுவந்திரானால் பட்டணமேபோய்வரலாம்
திருப்பதுமைசெய்துவந்தால் சீமைக்கனுப்பிவைப்பேன்
அப்போதுகோவிலனார் ஆணழகனேதுசொல்வார்
தலைக்கடையிலோடிவந்து தையலரேபாருமென்றார்
ஓட்டம்பெருநடையா ஓடிவந்துபாருமென்றார்
தலைக்கடையிலோடிவந்து தையலரும்பார்க்கலுற்றார்
மாணிக்கம்போலே மணிப்பதுமைதுலங்குதுகாண்
பதுமையைப்பேசவைத்தால் பட்டணமேபோய்வரலாம்
சந்தோஷமானாள் சரீரங்கள்பூரித்தாள்
கோவிலனார்முன்னேவந்து கொடியிடையாளேதுசொல்வாள்
பதுமையயழைக்கப்பார்த்தாள் பாவையிளங்கொடியும்
பேசாதபொற்பதுமை பொற்கொடியாளேதுக்கென்றாள்

மாதகிக்கு கோவிலனார் பதுமையைப் பேசச்செய்தல்

அப்போதுகோவிலனார் ஆணழகரேதுசெய்தார்
புறக்கடையிலோடிவந்தார் புண்ணியனார்கோவிலரும்

பச்சிலைதான்கசக்கிப் பான்காசுத்தாவெடுத்து
நெற்றிக்குதிலதமிட்டு நேர்விழிக்குமைமெழுதி
கர்ணகியைத்தானிணக்தார் கட்டழகாப்போது
கண்ணைத்திறக்குதுபார் கற்பதுமைபேசுதுபார்
பொற்பதுமைசொல்லுகுது பெல்லாசியைப்பார்த்து
ஆசைதர்தமாதகியே அத்தாட்சிபெண்மயிலே
அடிஓட்டிவிடுஓட்டிவிடு ஊரைவிட்டோதவழி
இஞ்சிவிற்கும்செட்டிமகன் இனிநாகடப்பானோ
மஞ்சள்விற்கும்செட்டிபிள்ளை மனதுபோல்நடப்பானோ
அண்ணன்வருமளவும் ஆளடிமையுந்தனுக்கு
தமையன்வருமளவுந் தானடிமையுந்தனுக்கு
என்றுசொல்லிபொற்பதுமை யிருக்கிறவேளையிலே
அப்போதுமாதகியா ளருங்கிளியாள்தான்பார்த்து

பொற்பதுமை மாதகியை அடிப்பது.

அப்போதுபொற்பதுமை ஆங்காரக்கோபமுடன்
மாதகிபேசாமையால் மனங்கொள்ளாக்கோபமுடன்
ஐவுளிபிரம்பெடுத்து ஜாடுதுபார்மாதகியை
கொத்துபிரம்பெடுத்து கொல்லுதுபார்மாதகியை
வர்ணப்பிரம்பெடுத்து மாறியடிக்குதுபார்
எழுந்தாலொருகுத்துவைக்கும் விழுந்தாலொருவுதைவுதைக்கும்
குத்துக்குழக்குாத்தம் கொப்பளிததுதானுமிழ்ந்தாள்

கோவிலரை ஊருக்கு போய்வாருமென்று மாதகி அனுப்புதல்.

வர்த்தகனைத்தான்பார்த்து வடிவழகாபோய்வாரும்
ஊருக்குப்போய்வாரும் வுத்தமரேகோவிலரே
அப்போதுகோவிலனுர் அந்தப்புறந்தாண்டி
அந்தப்புறந்தாண்டி ஆனைமுகர்வாராரே
சித்திரமுகச்சாவடியில் சேரவாராரே
நித்திரைப்போருரே நேருனகோவிலரும்
அந்தக்குளத்திலே ஆரணங்குகாதியர்கள்
பொற்கொடிமார்தாதியர்கள் போதவேஸ்நானம்செய்தார்
போசனமண்டபத்தே போய்புகுந்தாள்மாதகியும்
பொற்றளிகைதான்போசித்து இருந்தாளேமாதகியாள்

கர்ணகி கோவிலர்வாராமையால் சாபமிட பதுமையிறந்தது

அப்போதுகர்ணகியாள் ஆரணங்கேதுசொல்வாள்
அஞ்சனத்தைப்போட்டுமவள் ஆராய்ந்துபார்க்கலுற்றாள்
மையுருகமையுருக மையழகுதோணுகுது
அனுபாருமங்கைதனும் ஆரணங்குமுன்னேவந்தாள்
மாதகிக்குப்பதுமைசெய்து வாறார்வணிகோவிலரும்.
என்றுசொல்லியஞ்சனத்தால் இன்பமுடன்தோற்றுகுது
அப்போதுகர்ணகியாள் ஆரணங்குஎன்னசெய்தாள்

கைமுறித்துசாபமிட்டாள் கட்டழகிகன்னையரும்
பத்தினியவள்சாபமிட்டப் பதுமையாயடைக்கத்தங்கே
செத்தபடிக்கது சிலைகளுஞ்சேர்ந்ததுகாண்
அப்போதுமாதவியாள் ஆனைக்குமோடிவந்து
பதுமையைதான்பார்த்து பாவையிளங்கொடியாள்
செத்ததிடக்கிறதை தேன்மொழியாள்கண்டுவிட்டாள்
கோபம்பிறந்ததங்கே கொம்பனையாள்தானொருத்தி
காகமென்றுதான்கூட்டி கல்லின்மேலேயடித்தாள்
அதுபொடியாகப்போச்சுது பொற்கொடியாள்முன்பாக
அப்போதுமாதவியாள் ஆண்டுதானெழுந்து
தாயாரக்கவசந்தமாலை தையலருகில்வந்து
அம்மாடியென்றுசொல்லி அலறியழுதாளே
என்னடிமகளேயென்று இளங்கொடியாள்கேட்கலுற்றாள்
பதுமைசெய்துவைத்த பட்டணத்தார்போனார்கள்
அவர்போனதின்பிற்பாடு பொற்பதுமையிறந்ததுகாண்
சண்டமோசம்பண்ணிப்போனார்காண் மெல்லியிளங்கொடியே
என்றழுகையிலே இளங்கொடியாளேதுசொல்வாள்
அஞ்சாதேமகளேயென்று ஆனைக்குசொல்லலுற்றாள்

பதுமையிறந்ததும் நதி கோவிலனை ஓலையெழுதி வரவழைத்தல்.

தாளிப்பனைபோலே தலைப்புறமுங்காம்பரித்து
எழுத்தவைக்கயிலே இருபுறமுங்காம்பரித்து
முத்துபதித்ததுபோல முன்னுவரியெழுதுகிறாள்
என்னென்றவோலையிலே எழுதுகிறாள்வசந்தமாலை
மாதவியும்பதுமையுமே பஞ்சணைமேலிருந்தார்கள்
கல்லின்வழியாக சர்ப்பமிறங்கிவந்து
பதுமையைகிட்டுவிட்டு மாதவியைக்கடித்ததுகாண்
மாண்டுமடிந்தனளே மாதவியாள்பாம்பாலே
எடுப்பாருமில்லைகாண் எத்திழையாள்மாதவியை
ஓலைகண்டவுடனக்கு உத்தமரேவரவேண்டும்
கடுகவேவேண்டும் கட்டழகாகோவிலரே
காணப்பிணமாகக் கட்டழகிதானிருக்க
என்னலேயாகுமோ பேர்திகழ்வைத்தாளெடுக்க
நீருநெருப்பாகவே நீர்போகவேண்டுமையா
என்றுசொல்லியோலையிலே யெழுதினாள்வசந்தமாலை
பல்லக்குதான்கொடுத்து பாவையருமேதுசொல்வாள்
ஓலைச்சருள்கொடுத்து அனுப்பினாள்வசந்தமாலை
வாய்வேகமனோவேகமாய் வாறார்கள்தாதியர்கள்
சித்திரமுகச்சாவடியில் தேன்மொழிமார்வந்துநின்றார்
அப்போதுகோவிலனார் ஆனைமுகரேதுசெய்தார்
பல்லக்கின்மேலிருந்து பயணமிட்டுப்போகையிலே
அக்கொடுவேளையிலே அரிவையர்கள்தான்சூழ்ந்தார்

கோவலர் ஓலையைக்கண்டு மாதவியிறந்தாளென்று புலம்பி வருகிறது

பல்லக்கைதான்மறந்து பாவையர்களோலைதந்தார்
ஓலைச்சுருளையந்த வுத்தமனுந்தான்பார்த்து
கதறியழுதாரே கட்டழகர்கோவலனார்
அடிபெண்ணே மாதவியே அரிவையரேமாண்டாயோ
சுகந்தமாதவியே தோகையரேமாண்டாயோ
ஆசைச்சதமென்பேன் அன்னியமாத்தஞ்சமென்பேன்
எவனைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
உன்னைநம்பியிருந்தேனே கட்டாற்றில்விட்டாயே
ஒருவரைபறிகொடுப்பாருலகத்திலுள்ளபடி
இருவரையும்பறிகொடுத்து ஏழையானேனே
கூட்டமாகக்காற்றடித்தால் கொம்போடேகொம்பசையும்
தனிமரமுங்காற்றடித்து தாவிப்புலம்புவேனே
கன்னியாள்மாண்டு கைச்சாரியிருக்கொணாதே
பத்தினியாள்மாண்டபின் பரஸ்திரியிருக்கொணாதே
உத்தமியாள்மாண்டபின் ஒருத்தியிருக்கொணாதே
பரஸ்திரியாள்மாண்டுமென் பத்தினியாளிருக்கொணாதே
இருவரையும்பறிகொடுத்து இளவுகாத்தகிளியானேன்
தலைமேலேகையைவைத்துத் தானழுதுகோவலரும்
கன்னையாள்தாதியரை கட்டழகன்தான்பார்த்து
ஐம்பதுபொன்னையும் அடைவாகதான்கொடுத்து
பத்தாதபத்தினியே பழுதுபடாத்தினமே
குற்றமற்றபெண்மயிலே கோகிலக்கிளிமகளே
உற்றருமைசெய்யவென்று உத்தமனானும்வந்தேன்
வந்தவிடந்தனிலே வழக்கொன்றுண்டாச்சு
வழக்குகளைபற்றறுத்து வருவேனுன்னிடத்தில்
என்றுதாதிகளைத்தானனுப்பி தன்னுசெயனார்வாராரே
ஆசைதந்தமாதவியே அரிவையரேமாண்டாயோ
என்றைக்குகாண்பேனு னேந்திழையேயுன்முகத்தை
என்றுசொல்லிகோவலரும் அழுதுகொண்டுவாராரே
மாதவியாளந்தபுரம் வந்துநின்றார்கோவலரும்
அப்போதுமாதவியா ளாரணங்கேதுசெய்தாள்
உண்டுபசியாறி ஒருசொம்புநீர்குடித்து
தாம்பூலந்தானருந்தி தையலிளங்கொடியாள்
சப்பிரகூடமஞ்சத்திற் றானிருந்தாள்மாதவியாள்
அந்நேரவேளையிலே ஆணழகன்முன்னேவந்து
கானகத்திலேயனுப்பிக் கழுத்தறுக்கவோலைவிட்டாய்
இலையிலேசாதமிட்டு கழுத்தறுக்கவெண்ணங்கொண்டாய்
என்றுசொல்லிகோவலரும் இன்பமுடன்கேட்கலுற்றார்
அப்போதுமாதவியா ளன்பாயெழுந்திருந்து

கோவிலர்வந்தாரென்று மாதகி தன்தாயாரிடத்தில் சொல்ல
அவரைவிடாமல் பத்திரப்படுத்தென்று கிழவிசொல்ல
மாதகிகோவிலரை இச்சைப்படுத்துதல்.

வசந்தமாலைமுன்பாக மயிலனையாள்வந்துநின்று
கோவிலச்செட்டியார் கொழுநரும்வந்தாரம்மா
அப்போதுவசந்தமாலை அரிவையருக்கேதுசொல்வாள்
தாசிவீடுவந்தார்கள் தலைதப்பிப்போகிறதோ
வேசிவீடுவந்தவரை வீட்டுக்கனுப்புவதோ
பாதாளந்தேடியவனைப் பக்குவப்படுத்தவேண்டும்
ஈரமணல்வெட்டி யிருக்கப்புதைக்கவேண்டும்
என்றுசொல்லிவசந்தமாலை யேதுரைத்தாளப்போது
அப்போதுமாதகியா ளருங்கிளியாளேதுசொல்வாள்
அவனைஎன்னதான்செய்கிறது பேங்கிழையேசொல்லுமென்றார்
அப்போதுவசந்தமாலை அரிவையற்கேதுசொல்வாள்
ஆபரணங்களுண்டோ அரிவையரேசொல்லுமென்றாள்
ஆபரணங்களுண்டு அரிவையரேயென்றுசொன்னாள்
தட்டிபறியுமென்றாள் தையலந்தவசந்தமாலை
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரணங்குவோடிவந்து
செட்டியார்முன்பாக தேன்மொழியாள்வந்துநின்று
என்கணவரவர்த்தகரே எனக்கிசைந்தபுண்ணியரே
பார்த்தாப்போல்பார்த்திருக்க பாக்குப்பைதாருமென்றாள்
இதுவோசிலபாரம் இந்தாடிபெண்ணேயென்றார்
இந்தாடியென்றுசொல்லி எடுத்துவெள்ளக்கைகொடுத்தார்
கண்டாப்போல்கண்டிருக்கக் காண்டகத்தைத்தாருமென்றாள்
இதுவோசிலபாரமென்று எடுத்துவெள்ளக்கைகொடுத்தார்
உம்மைகண்டாப்போல்கண்டிருக்க கணையாழிதாருமென்றாள்
உம்மைப்போல்பார்த்திருக்க கடுக்கனைத்தாருமென்றாள்
அப்படியேதான்கொடுத்தா ராணழகர்கோவிலரும்
மேல்உருமாலைத்தாருமென்றாள் மெல்லியிளங்கொடியாள்
அத்தனையுந்தான்கழட்டி ஆணழகர்கைகொடுத்தார்
அப்படியேதான்கொடுத்தார் ஆணழகர்கோவிலனார்
மேலிருக்குமங்கவஸ்திரம் மெல்லியர்க்குத்தாருமென்றாள்
இதுவோசிலபாரமென்று எடுத்துக்கொடுத்துவிட்டார்
கையிலுள்ளகுட்டையை கட்டழகிதாருமென்றாள்
இதுவோசிலபாரமென்று எடுத்துக்கொடுத்துவிட்டார்
உம்மைப்போல்பார்த்திருக்க உத்தமனேயெந்தனுக்கு
தாடியும்மீசைகளும் தரவேணுமென்றுசொன்னாள்
கத்தரிக்கோல்கொண்டு கத்தரித்துகைகொடுத்தார்
அத்தையும்வாங்கினா ளரிவையர்தமாதகியாள்
தலையிலுள்ளகுடுமையை தரவேணுமென்றுசொன்னாள்
அத்தனையுங்கத்தரித்து ஆணழகர்தான்கொடுத்தார்
அண்ணாக்கயிர்சீலை ஆணழகாதாருமென்றாள்

அத்தனையுந்தானுரிந்து அரிவையவள் கைகொடுத்தாள்
உந்தன் வடிவழகை எந்தனுக்குத்தாருமென்றாள்
எப்படிக்குநான்கொடுப்பேன் விளங்கொடியேபெண்ணழகை
சூரிகத்திகொண்டுவந்து சரண்டினால்பல்லுரித்தை
பாறையின்மேல்படுக்கவைத்தாள் பட்டணத்தார்கோவிலனை
கம்பிளிமையழகுனுள் கட்டழகிமாதகியாள்
பிடரியில்கைகொடுத்து பொட்டெனவே அழுக்கினாள்
நாகபாம்புபோலே நலமாகக்கறுத்துதங்கே
அரவம்துடிதுடித்து ஆவியெல்லாந்தான்பதறி
வேர்வைவழிந்தது வர்த்தகனார்மேனியெல்லாம்
அந்தானதுதீர்த்தமென்று அன்பாகத்தானெடுத்து
கெண்டியிலேவைத்தாளாங் கிளிமொழியாள்மாதகியாள்
திருப்பதிதிம்மனைப்போல் நின்றாரயகோவிலரும்

மாதகி கோவிலர் அழகுமுகல்டரித்து இவனை என்னசெய்கிற தென்று தாயைக்கேட்க தாய் குளத்தில் தள்ளென்று சொன்னது.

அப்போதுமாதகியா ளாரணங்குவாரேனே
வசந்தமாலைமுன்பாக வந்துநின்றாள்மாதகியாள்
எல்லாபபரித்துக்கொண்டு விளங்கொடியேதாயாரே
திருப்பதிதிம்மனைப்போல் நின்றாண்டிகோவிலனும்
அவனைஇனியென்னசெய்கிறது யேந்திழையேதாயாரே
சிங்கமுகக்கேணியிலே தேன்மொழியேதள்ளுமென்றாள்
அப்படியேநல்லதென்று அரிவையருஞ்சம்மதித்து
கோவிலனார்முன்னே கொம்பனையுமோடிவந்து
வெடிமான்சிலையழகா முத்துவிற்கும்வர்த்தகரே
கலைமான்சிலைபழகா முத்துவிற்கும்வர்த்தகரே
எக்காலஞ்சென்றிடுமோ என்கணவாயுன்னைக்காண
என்னைவிட்டுநீபிரிய யெப்படிக்குத்துணிந்தீரோ
சிங்கமுகக்கேணியிலே சலமுண்ணத்தீர்கொடுத்தாள்
அத்தானுடதீர்த்தமென்று அரிவையான்பார்த்திருப்பேன்
அப்படியேயாகட்டென்றார் ஆணழகர்கோவிலரும்
தாம்புக்கயிருஞ்சொம்புந் தையலவள்தானெடுத்து
சிங்கமுகக்கேணி யருகினில்கொண்டுவந்தாள்
அறுபதுபாகமுள்ள அழகுகிணர்தனக்கு
முப்பதுபாகக்கயிர் மொய்குழலாள்தானகொடுத்தாள்
ஜலந்தன்னைமொள்ளுமென்று தேன்மொழியாள்கைகொடுத்தாள்
அப்போதுகோவிலரும் அந்தசொம்பில்கயிறணிந்து
கயிறைநழுவவிட்டார் கட்டழகர்கோவிலரும்
எட்டவில்லைகயிறு யென்னசெய்வேன்மாதகியே
இறங்கிமொள்ளுஎன்கணவா யெனக்கிசைந்தபுண்ணியனே
நாலுபடியிழிறங்கி நலமாகமொள்ளலுற்றார்
இறங்கிசலமொள்ளலுற்ற நின்பழுள்ளகோவிலரும்

அவர்பிடரியிலேகைகொடுத்து பின்னாலேதள்ளிவிட்டாள்
சிங்கமுகக்கேணியிலே திட்டென்றுவிழுந்துவிட்டார்
பாறைபதன்மேல்மூடிப் பாவையரும்வந்துவிட்டாள்
அப்போதுகோவிலரும் ஆணழகரேதுசெய்தார்
பெண்ணேபெண்ணேமாதவியே பொற்கொடியேகட்டழகி
ஆசைதந்தமாதவியே அரிவையரேமாண்டாயோ
நான்செத்தாலுஞ்சேதியில்லை தேன்மொழியேமாண்டாயோ
மாதவியைத்தானினைந்து வாடிப்புலம்புகிறார்


மாதவி கிணற்றில்தள்ளின கோவிலர் பிழைத்து மாதவியிடம்வருதல்

அப்போதுசெங்கை அழுத்தந்தபூமியிலே
அவர்உயிர்போகும்வேளையிலே ஆனைநினைக்கலுற்றார்
பத்தாபத்தினியே படுதுபடாத்தினமே
குற்றமற்றமெய்யதியே கோவிலன்சிரமகளே
பத்தாகாண்மாளுகிறேன் பைங்கொடிக்குயாருரைப்பார்
உன்புருஷன்மாளுகிறான் உச்சனுக்குயாருரைப்பார்
பத்தினியுமெய்யானால் பக்கத்திணைவாருமென்றார்
பத்தினியைச்சாவினைக்க பார்த்தவிட்டாள்செங்கையவள்
என்றுஅவர்கிணற்றிருந்தஜல முழுகிணறுபொங்கினதே
அப்போதுகோவிலரும் ஆணழகர்தானெழுந்து
மாதவியாள்காலடியைக் கண்டுமக்கட்டழகர்
காலின்ஜலமெடுத்து கட்டழகன்தான்குழைத்து
நெற்றிதிலதமாக இட்டாரேபுண்ணியரும்
மாதவியாள்வீடுதேடி வாராரேகோவிலரும்
மாதவியாள்முன்னேவந்து வடிவழகரென்னசொல்வார்
சிங்கமுகக்கேணியிலே தேன்மொழியேயென்னைத்தள்ளி
மனந்துணிந்தாயே மாதவியேயென்றுசொல்லி
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரணங்கேதுசொல்வாள்
பணிக்கவாசன்தேடிப் பாவையரும்போயழைத்தேன்
நானைக்குயாரோமென்று கலமாகத்தானுரைத்தார்
இதற்குள்ளேவந்தீரோ என்னுடையபாக்கியந்தான்
பஞ்சணைமேலாகப் பாங்குடனேகுந்துமென்றாள்
அப்போதுகோவிலனார் ஆணழகரென்னசொல்வார்
பொழுதேறிப்போகுதடி போகவேணுங்காவிரிப்பூ
நாளேறிப்போகுதடி நடக்கவேணுங்காவிரிப்பூ
வாழ்வுக்குதவாவிட்டால் சாவுக்குதவவேண்டும்
என்றுசொல்லிகோவிலரு மினங்கொடையைக்கேட்கலுற்றார்
அப்போதுமாதவியாள் ஆரணங்குதாசியாள்
தூயவர்வசந்தமாலை தையல்முன்னேவோடிவந்து
செத்துமடியவில்லை செட்டிபிள்ளையென்றுசொன்னாள்
அப்போதுவசந்தமாலை ஆரணங்கேதுசொல்வாள்
வாசிகண்டமதியில் மன்னவனாரித்தன்றுமென்றாள்

அப்படியேசம்மதித்து ஆரணங்குமாதகியாள்
பிழைத்துவந்த கோவிலனை மாதகி மறுபடியும் ஆற்றில்தள்ளுதே
செட்டியார்முன்னேவந்து தேன்மொழியாளேதுசொல்வாள்
எக்காலஞ்செல்லுமோ என்முகத்தைநீபார்க்க
என்னையாளேன்சனமது கட்டழகர்செய்யவேணும்
வாருமென்றுசொல்லி வைகைக்குகூட்டிவந்தாள்
வைகைக்கரைதனிலே வடிவழகன்றனைநிறுத்தி
ஏணிதனையக்கொண்டுவைத்து இன்பமுடன்தான்தேய்த்தாள்
அரைப்புகள்கொண்டுவந்து அன்பாகத்தான்தேய்த்து
ஆற்றிலேமுழுகச்சொன்னாள் ஆரணங்குமாதகியாள்
இருகரையுஞ்ஜலம்பெருகி ஏகமாய்ப்பெருகினதே
எப்படிக்குநானிறங்கி முழுகுவேனென்றிறங்கிய
ஞானக்கொடிகொண்டுவைத்து உத்தமனைக்கட்டியவள்
ஆற்றில்விரைகுமென்று ளரிவையக்குமாதகியாள்
ஆற்றிலிறங்கினு ராணழகர்கோவிலரும்
கழுவிலகப்பட்டார் சுந்தரனப்போது
அடித்துக்கொண்டுபோகுது ஆணழகர்கோவிலனை
அப்போதுமாதகியாள் ளானமனைக்குவந்துவிட்டாள்
அடித்துக்கொண்டுபோகிறதே ஆற்றிலேகோவிலனை
ஆளைக்குமுழுகிறதும் மற்றலைக்குதேறுவதும
இப்படிக்குவரும்போது இன்பமுடன்கோவிலனும்
பெண்ணேபெண்ணேமாதகியே பொற்கொடியேமாண்டபோ
நான்மாண்டால்சேதமில்லை நாயகமேமாண்டாபோ
மாதகியைக்காணினைக்க அழுதுகிறான்கவலையுடன்
கட்டுவிட்டுமெய்பறந்து கலகலத்தேபணியெல்லாம்
கூட்டைவிட்டுவருகிறது குறிக்குமாயார் ஆறுதனில்
உயிர்போகும்வேளையிலே யானைமிதிக்கநாற்றுச்
பத்தாதபத்தினியே பழுதுபட்டாததினமே
என்னுயிர்மாளுதையோ யேத்திழைக்குயாருரைப்பார்
புத்தாகான்மாளுறண்டி பத்தினிக்குயாருரைப்பார்
மலைபறிபோகுதடி கணவாளன்மாளுகிறேன்
கூறைபறிபோகுதடி கொற்றவனார்மாளுகிறேன்
பத்தினியுமெய்யானால் பக்கத்துணைவருமென்றார்
கர்ணகியுமெய்யானால் கூடத்துணைவருமென்றார்
அப்போதுகெங்கை அரிவையருந்தான்பார்த்து
பத்தினியாள்புருஷன்தன்னை கொன்றேபாவம்வரும்
என்று-ஆற்றிலொதுக்கிவிட்டு, அக்கரையில்தள்ளினளே

**மாதகி ஆற்றிலேதள்ளின கோவிலர் கர்ணகியிடம்வந்து சேருதல்**

காவிரிப்பூம்பட்டணத்தில் கரையிலொதுக்கிவிட்டாள்
அப்போதுகோவிலனு ராணழகரோதுசெய்தார்
காந்தவனுர்கண்டு களையாகிவிழுந்துவிட்டார்



கர்ணகையாளிவர்க்கக் காதடைப்புதிர்க்கத்தக்கே
கலிநேசபந்தான்தெளித்து ஏழுத்திருக்காரகட்டழகர்
கழ்கட்டுதிருக்குளத்தில் வர்த்தகனாப்போது
அத்திமரவோரத்திலே ஆணழகர்வந்திருந்தார்
பூவாதஅத்திமரம் பூவாய்ச்சொரியுதங்கே
காயாதமரங்களுமே காமத்துசொரியுதங்கே
பூக்காதமரங்களுமே பூத்துசொரியுதங்கே
அத்திமரத்திலே ஆணழகர்தாமிருந்து
அத்திபழந்தான்புசித்து ஆணழகனவீற்றிருந்தார்
கர்ணகியாள்தாதியர்கள் கன்னியர்களேழுபேரும்
செப்புக்குடங்கொண்டு ஜலமொள்ளவாரார்கள்
பூவாதஅததிமரம் பூர்த்துசொரியுதங்கே
பழமாய்பழம்பழுதது பாங்காய்விழுந்திருக்கும்
தாதிமார்தான்பார்த்து அதயலர்களப்போது
பூவாதஅத்திமரம் பூர்த்துச்சொரியுதங்கே
பழமாய்பழம்பழுக்கு பாவையிளங்கொடியே
மரத்தின்மேலேறி பழம்பறிப்போமென்றுசொல்லி
அண்ணாதுபார்த்தார்கள் அரிவையுடதாதியர்கள்
திருப்பதிதிம்மனைப்போல் திகைதப்பிவந்ததடி
இத்தமரந்தன்னில் இருக்குதடி திம்மனது
எல்லாரும்பார்க்கலுற்றார் இன்பமுடன் திம்மனைத்தான்
தலைவிரங்கிக்கொண்டுநின்றார் தனஞ்சயருமப்போது
அதிலேயொருதாதியவ ளன்பாகத்தான்பார்த்து
குரங்கல்லகுரங்கல்ல கோவிலனென்பார்கள்
கர்ணகியாள் தன்னுடைய கணவனிவனென்பார்கள்
பத்தினியாள் தனனுடைய புருஷனிவனென்பார்கள்
வெடிவான்சிலைபழகன் முத்துவிற்கும்வர்த்தகண்டி
கலைமான்சிலைபழகன் கப்பலோட்டும்வர்த்தகண்டி
என்றுசொல்லிதாதியர்க ளோக்கிழைமாரோடிவந்தார்
கர்ணகிமுன்னேவந்து கைகட்டிதெண்டனிட்டார்
மாலையிட்டஉன்கணவன் மணவாளன்வந்தான்காண்
தாலிதரித்தஉத்தன் தனஞ்சயனார்வந்துவிட்டார்
கூரைதரித்தநல்ல கோவிலனார்வந்தார்காண்
என்றுமிகச்சொல்லியிலே யேந்திழையாள்தான்கேட்டு
பல்லக்குதான்கொடுத்தாள் பைங்கொடியாளப்போது
கட்டுவர்க்கலட்சணமும் கர்ணகியாள்தான்கொடுத்தாள்
அலங்காரம்செய்துமே அழைத்துகொண்டுவாருமென்றாள்
அப்போதுதாதியர்கள் அன்பாகவோடிவந்து
அத்திமரத்திலிருக்கும் ஆணழகர்கோவிலனை
தாழயிறங்குமென்றார் தையலர்தாதியர்கள்
அம்மனைமாகவேதான் எப்படிக்கிறங்குவேனென்
அக்கவஸ்திரமொன்று அன்பாகவிட்டெடுத்தார்

அவர்-தன்மேலேபோட்டுக்கொண்டு தாழுமிறங்கிவந்தார்
அந்தக்குளத்திலே அன்பாகத்தான் முழுகி
சாத்துவிலக்கார்த்து இந்திரவர்ணப்பட்டுடுத்தி
களைந்ததுகில்களைந்து நாகரிசப்பட்டுடுத்தி
சிவசிவாவென்றுமே சிவனுனைத்தோத்தரித்து
அரகராவென்றுமே ஆண்டவனைத்தோத்தரித்து
ஆடையுமாபரணம் அடக்கதுந்தானணிந்து
பல்லக்கின்மேலாக பட்டணத்தாரேறினாரே
பல்லக்குதானெடுத்து பாங்கியர்கள்வாறாரே
காவிரிப்பூம்பட்டணத்தில் கர்ணகியாளகப்புறம்
அரண்மனைக்குள்ளாக அவர்களிறங்கிவிட்டார்
கோவிலனுருமக்கே கொப்பெனவேதானிறங்கி
தலைக்கடையின்வாயிலே தனஞ்சயனுட்கார்ந்தார்
தாதிகளோடிவந்து தையலர்க்குதெண்டனிட்டு
உன்-மணவாளர்வந்தாரென்று மங்கையர்கள்தானுரைத்தார்

கர்ணகி தன் புருஷனைக் காணுதல்

அவ்வார்த்தைதான்கேட்டு ஆணைக்குகர்ணகையாள்
அவர்முகைப்பார்ப்போமென்று ஆணைக்குவாராளே
அன்னார்தலைக்கூந்தல் அறுபத்துமூன்றுமுழம்
கர்ணகியாள்கூந்தலது கணக்குமிதங்களில்லை
கூந்தல்விரித்தாளே கொடியிடையாள்கர்ணகையாள்
திரேகமெல்லாம் தான்மறைந்து தேன்மொழியாள்வாராளே
தலைக்கடையின் வாயலண்டை தையலரும்வந்துநின்றாள்
கோவிலர்தானழைக்க கொடியிடையுந்தான்பார்த்து
உன்னைவிட்டுபோனீரே என்னவம்பெற்றுவந்தீர
மாதவியாள்செய்ததெல்லாம் மன்னவரேசொல்லுமென்றாள்
கூத்தியார்செய்ததெல்லாம் கொற்றவரேசொல்லுமென்றாள்
வைப்பாட்டிசெய்ததெல்லாம் வர்த்தகரேசொல்லுமென்றாள்
நீபொறுத்திருவேன் தேன்மொழியாள்கர்ணகியாள்
கல்லாகமண்ணாக சரியாகச்செய்திடுவேன்
அவள்செய்த அக்கிரமத்தை ஆணழகாசொல்லுமென்றாள்

கோவிலனர் தன்பெண்சாதியுடன் வசனித்தல்.

அப்போதுகோவிலனா ரணழகர்தான்பார்த்து
கர்ப்பமடைக்குதடி கனியாய்வருகுதடி
பசியதுவெந்தனுக்குப் பற்றிப்பிடிக்குதடி
என்பசியைத்தீர்த்தாலே இருந்ததெல்லாம்சொல்லுவேனே
அப்போதுகர்ணகியாள ஆணைக்குகானெழுந்து
அவ்வசனந்தான்கேட்டு ஆணழகரேதுசொல்வார்
தாதிகையால்சமைத்தால் சாதமுண்ணமாட்டேனென்றார்
பத்தினியாள்சமைத்தால் பட்சணஞ்செய்வேனென்றார்
பத்தினியேயுன்கையால் பரிமாறவேணுமென்றார்
அப்போதுகர்ணகியாள் ஆணைக்குமேதுசொல்வாள்

கட்டசட்டிதொட்டறியேன் சோறதுப்பறமறியேன்
ஆக்கவகையறியேன் ஆனைக்குப்போட்டறியேன்
எப்படி சாதந்தான் இவ்விவாய்ச்சமைத்திடுவேன்
நாதிக்கோத்தானழுந்து தையலுந்தகர்வுக்கயான்
செப்புக்குட்டுமெடுத்து ஜலத்துக்குவாருமென்றார்
பத்தினியுமுன்னடக்க பாவையர்கள் பின்னடக்க
முழங்கால்சலத்திலே மெல்லியர்கள் வந்துநின்று
அட்டாளுஞ்சொக்கலிங்கம் ஆண்டவனைத்தானினைந்து
மதுரைவாழ்சொக்கலிங்கம் மாதேவனைநினைந்து
அங்கயற்கண்மீனாட்சி அம்மனைத்தானினைந்து
நான்பத்தினியாள்மெய்யானால் பலிக்கவேணுமென்சபம்
என்று-பெருவிரல்தன்னாலே எழுட்டினள் கங்கைதனை
செப்புக்குடப்போலே திரண்டதுசெங்கைபது
மாளிகைக்குள்ளாக மங்கையரும்வந்தாளே
சின்னசம்பா தன்னையிடிதீட்டியுலையிலிட்டாள்
முத்துப்போல்சாதமது வடித்தாளேமொய்குழலாள்
நந்தியென்னும்பூசணிக்காய் நாலுவிதந்தான்சமைத்தாள்
புடலங்காய்தானசமைத்தாள் பீர்க்கங்காய்பொரியலிட்டாள்
பத்துவிதக்கறியும் பதினெட்டுபச்சடியும்
எட்டுவிதக்கறியும் இபலானபோசனமும்
பச்சென்றகீரையும் பாங்கான துவையல்களும்
அவிட்டல்துவட்டல்களும் ஆனதொருகூட்டமுதும்
சாறமுங்கூட்டமுதும் சரிகுழலாள்தான்சமைத்தாள்
அழகாகத்தான்சமைத்து அடுக்கிட்டுமூடிவைத்தாள்
ஆனமுகன்முன்பாக அரிவையருமோடிவந்து
பாலைபதனைகொடுத்தாள் பட்டணத்தார்கோவிலற்கு
பாலொரண்டுபெல்லக்கி ஓலைகொண்டுவாரவழித்து
வசந்தநீர்கொடுத்து மதிமுகப்புஷ்க்கதிசெய்து
பூசைபண்ணுமண்டபத்தில் புண்ணியனார்வந்துநின்று
நாலிரண்டுபந்திரமாய் நடத்தினார்பூசைதனை
பூசைமுடிந்தது புண்ணியனார்கோவிலற்கு

கர்ணகி தன்புருஷனுக்கு அன்னமிடுதல்.

வாழைமுறிபோட்டு வட்டித்தாள்சாதங்கறி
எட்டுவிதக்கறிகள் இருபத்தோர்பாசடியும்
பத்துவிதக்கறியும் பாங்கானபச்சடியும்
அவிட்டல்துவட்டல் ஆனதெல்லாம்தான்படைத்தாள்
வெந்நீரும்மோரும் விதமாகவைத்தார்கள்
தாதியர்களோடிவந்து தனஞ்செயரைத்தானழைத்தார்
போசனம்பண்ணுமென்றார் பொற்றொடிமார்தாதியர்கள்
கூட்டிக்குறுப்பியே கொற்றவனுக்குத்தானமைப்பார
ஒருசாண்டைதான்வைத்தார் மத்தமனுர்வாய்த்துளிலே

அப்போதுகோவிலற்கு ஆர்நினைவுவந்ததுபார்
ஆசைதங்கமாதவியை அரிவையைத்தானினைந்து
போசனமுண்ணாமற் புண்ணியருந்தானிருந்து
ஆனையைநான்மறந்து அறியாமல்நாகமுண்டேன்
என்றுசொல்லிக்கோவிலனு மிருந்துவிட்டார்மாமமாக
அப்போதுகர்ணகியாள் ஆணைக்குதான்பார்த்து
கர்னைகவேம்பானேன் கைசாதம்வேம்பாச்சோ
பத்தினிவேம்பானேன் பகர்ந்தசாதம்வேம்பாச்சே
எடுத்துப்பொசியுமென்று எந்திழையாள்சொன்னாளே
பத்தினியும்வேம்பல்ல பகர்ந்தசாதம்வேம்பல்ல
உத்தமியும்வேம்பல்ல எற்ற அன்னம்வேம்பல்ல
எனக்-காசைதந்தமாதவிக்கு அரிவையற்குதானுமிப்போ
மாதவியாள் தனக்கு மரக்காற்பொன்தருவேனும்
கடன்பணத்தைவழிசொன்னால் கைசாதமுண்பேனென்றார்
மடியிலேசாதமில்லை கடன்கொடுப்பாராருமில்லை
கையிலொருகாசுமில்லை வர்த்தகஞ்செய்வோமென்றால்
நீ-அவள்கடன்கொடுப்பதெப்போ வீட்டுக்குவாறதெப்போ
என்கையிலொன்றுமில்லை என்னுடையபுண்ணியரே

கோவிலன் கர்ணகியை சிலம்புகேட்குதல்.

காற்சிலம்புதந்தாயானால் கனமதுரைவிற்றுவாரேன்
மணிச்சிலம்பைதந்தாயானால் மதுரையில்விற்றுவாரேன்
பொற்சிலம்பைதந்தாயானால் பொன்மதுரைவிற்றுவாரேன்
செஞ்சிலம்பைவிற்றுநான் தெய்வதாசிகடன்கொடுப்பேன்
காற்சிலம்பைதாருமென்று கட்டழகன்கேட்கலுற்றான்
கூடப்பிறந்தொரு கொடியிடையாள்காற்சிலம்பை
கன்னுறிக்கதில்லை கடைத்தெருவேபோனதில்லை
செட்டியறிக்கதில்லை திராசில்வைத்துநிறுத்ததில்லை
கொல்லனறிக்கதில்லை குண்டுவைத்துநிறுத்ததில்லை
ஓடாணிதானுமில்லை உத்தமியாள்காற்சிலம்பு
திருகாணிதானுமில்லை தேன்மொழியாள்காற்சிலம்பு
எப்படிக்குநான்கழற்றி யிதமாய்கொடுப்பேனென்றாள்
அட்டாளும்சொக்கரையும் அம்மனையுந்தானினைத்தாள்
மதுரைவாழும்சொக்கரையும் மகாதேவரைதானினைத்தாள்
சொக்கர்கிருபையாலே திருகாணியுண்டாச்சு
உத்தமனார்கிருபையாலே யோடாணியுண்டாச்சு

கர்ணகி சிலம்புகழற்ற அச்சிலம்பு புலம்புவது.

திருகாணியில்கைபோட்டு தேன்மொழியாள்வாங்கையிலே
வாயைத்திறந்துதான் மணிச்சிலம்புதானசொல்லும்
கபற்றுதேகர்ணகியே கணவனுக்குத்தீம்புவரும்
தெனமதுரைபோனாரானால் செத்துமடிந்திடுவார்
வடமதுரைபோனாரால் மாண்டுமடிந்திடுவார்

இந்தப்பயணந்தான் இனியிருப்பப்போறதில்லை
மதுரைக்குச்சென்றாலே மறுத்துவரப்போறதில்லை
என்றுசொல்லிநெஞ்சிலடிப்பு அழுதுபுலம்புகுது
இதை-காணுதுபோலேயல்லோ கண்டுவிட்டாள் கர்ணகையாள்
மணிச்சிலம்பழுதெறந்த மயிலனையாள் தானபார்த்து
மதுரைக்குப்போனாலே மாண்டுமடிக்கிடுவீரென்று
மாண்டுமடிவீரென்று மணிச்சிலம்புசொல்லுகுது
ஆகையால்தென்மதுரை ஆணழகாபோகாதே
குற்றாலம்குலகாடு கொற்றவரேபோய்வாரும்
கும்பகோணம்மாயவரம் குருதேசம்போய்வாரும்
மதுரைக்குப்போகாதே மன்னவரேயென்றுரைத்தாள்
கான்-செத்தாலுந்தென்மதுரை சிலம்புவிற்றால்தென்மதுரை
என்சிலம்பைகாணெடுத்தால் எனக்குப்பகைவருண்டோ
அள்ளவேணும்திருடவேணும் அணிமதுரைபட்டணத்தில்
என்சிலம்பைவிற்றாலே எனக்குப்பகைவருகுதென்றாய்
கோவிலர் சிலம்பெடுத்து வருகையில் கர்ணகை பின்தொடர்ந்து.
சிலம்பைமெள்ளவேயெடுத்து செட்டியார்தானெழுந்து
மதுரைக்குப்போவேனென்று வர்த்தகருந்தானெழுந்தார்
நான்கூடவாரேனென்று கர்ணகையும்பின்தொடர்ந்தாள்
உன்கூடவாரேனென்று உத்தமியுங்கூறலுற்றாள்
தனந்தேடபோமிடத்தே தார்குழலேவாலாமா
பொருள்தேடபோமிடத்தே பொற்கொடியாள்வரலாமோ
நீ-இங்கேயிருமென்று எழுந்தானேகோவிலரும்
அப்போதுகர்ணகையாள் எழுதுபெண்ணாளேதுசொல்வாள்
நீ-போறவிடத்துக்கு நான்கூடவருவேனென்றாள்
நான்கூடவாரேனென்று கலமாயெழுந்திருந்தாள்
மாளிகைக்குள்புகுந்து மங்கையற்குசொல்லிவிட்டாள்
நீவாமேவாருமென்று தெருத்திண்ணையில்வந்துநின்று
இனியிருந்தால்வருமோவென்று யெழுந்துநடக்கலுற்றான்
பையெடுத்துதோளில்வைத்து பட்டணத்தார்வாறாரோ
காதவழிதூரம் கட்டழகர்வாராரோ
அந்தப்புரம்போன ஆரணங்குகர்ணகையாள்
தாதியற்குசொல்லிவிட்டு தையலரும்வந்துநின்றாள்
வர்த்தகனைக்காணுமல் மங்கையவளேதுசொல்வாள்

கோவிலா தனித்துப்போனதால் கர்ணகிசாபமிட்டு
புருஷனைக்கண்டு இருவரும்போகுதல்.

காதவழிதூரம் கடுகெனவேபோனாளே
அவர்-போனவழிதன்னிலொரு குத்துக்கல்காணவேணும்
ஐந்தெழுத்துப்பாவினையும் அரிவையாபோல்தோணவேணும்
பத்தெழுத்துபாவனையும் பாவையைப்போலதோணவேணும்
திருக்கடையூர்பட்டணத்தில் தெய்வரம்பைமாதவியாள்
அழகுதளைக்கவேணும் அணைத்துக்கொஞ்சவேணும்

வடிவுதலைக்கோனும் வடிவழகுகொஞ்சவேனும்
என்றுமிக்கர்ணகியாள் விட்டாள்பெருஞ்சாபம்
பத்தினியாள்சாபமிட்ட பாவையர்போல்தோனுதல்லே
இதையறிந்ததுபோலே கண்டுவிட்டுவிட்டார்கோவலரும்
அடி-ஆசைதங்கமாதவியே அரிவையரேபெண்டிவந்தாய்
சக்கதமாதவியே சுந்தரியேபெண்குவர்தாய்
திருக்கடையூர்தானிருந்து தேன்மொழியேவந்தென்ன
உன் உடையகடனுக்காக உத்தமியாள்விலைபெறித்து
காற்சிலம்பைக்கொடுத்து கணமதுரைவிற்கப்போறேன்
வழிமறிக்கவந்தென்ன மங்கையரேகொடியே
காணமிக்கவுக்க கணுக்காலுங்கொப்பளிக்க
வெய்யிலுங்காணாது மெல்லியரேவந்தென்ன
முக்காலவாய்திறந்து உக்காரஞ்சொல்லும்பெண்ணே
வாயைத்திறக்கவில்லை மறுவார்த்தைபேசவில்லை
நாவைத்திறக்கவில்லை நனியார்த்தைபேசவில்லை
பெண்டிபெண்ணேபெண்மயிலே வித்தவேதாபமென்ன
கட்டித்தழுவினார் கனிவாயைமுத்தமிட்டார்
கட்டைவிளக்கையிலே கண்ணியுடதேகமது
சேர்ந்தணைக்கையிலே தேன்மொழியாள்தேகமது
கல்லாவுருகவென்று கட்டாப்போது
என்றுசொல்லிகோவலனு மென்கிழையைப்பார்க்கலுற்றார்
கர்ணகிசாபமிட கல்லாகத்தோனுது
வெடிமான்சிலையழகன் முத்துவிறகும்வியாபாரி
கர்ணகையைப்பார்த்துவிட்டார் பட்டழகர்கோவலனும்
போருஞ்செய்யப்போமிடத்தே பொன்னுனவாலமோ
தனக்கேடப்போமிடத்தே கையல்லாவோ
விட்டிலேயுடைமைவிட்டு மெல்லியரேவாங்கினதே
வீட்டைவிட்டேனவந்தாய் நல்வினைவல்லகொடியே
என்றுந்தவர்க்கர்க ளெல்லாமகிமையார்கள்
சிவெபாத்தவர்த்தார்கள் சற்குமகியார்கள்.
ஆறுலும்வாடியென்று ஆணழகர்முன்னடந்தார்
ஆணழகர்முன்னடக்க அரிவையரும்பின்னடக்க
காடுமலைகளெல்லாம் கடுவெளியேகானடந்து
[illegible]சென்றநாள்சென்று செடியும்பழுக்கண்டு
வாறுநிருவர்களும வனமரப்பக்கண்டு
மதுரைக்குச்சேர வருகின்றநாளையிலே
பத்தாதபத்தினியும் பழுதபட்டாத்தினமும்
குற்றமற்றமெய்யாயன கோவிலிங்கிமகளும்
நாத்தங்களைப்பார்த்து பயிலேனைபானோனதுசொல்வாள்
செட்டியார்தனைப்பார்த்து தேன்மொழியாளேதுசொல்வாள்
காதவழிநடந்து கால்கொப்பளித்ததைய
நாவழிதானடந்து நெரைடகௌல்லாமிகோருதைய

எடுத்தடிவைப்போமென்றால் இனிநடக்கக்கூடவில்லை
தண்ணீரது தாகம் தாங்கமுடியவில்லை
நீரில்மேல்மேகமது நிற்கமுடியவில்லை
தண்ணீர்கொண்டுவந்தீரானால் தையலருநான்பிழைப்பேன்
என்றுசொல்லிகர்ணகையாளேந்திழையாள்கேட்கையிலே
பெண்சாதிகால்கட்டு பிள்ளையொருகால்கட்டு
கட்டோதமூட்டை கைக்குகனமென்பார்
அப்படியேயாச்சுது ஆரணங்குயிப்போது
இந்தவனந்தனிலே யெங்குகொண்டுநான்வருவேன்
என்றுசொல்லிகோவிலனார் இட்டுக்கொண்டுவாராம்
எட்டிவனச்சோலையிலே யேந்திழையைக்குந்தவைத்தார்
கெண்டிகைத்தானெடுத்து சலமெடுத்துவாராரே
அந்நேரவேளையிலே அவ்வனத்தில்வாழுகின்ற
எதிர்காட்டுகள்ளரவரேழுபேர்வாரார்கள்
வெட்டிக்கிளைபறிக்கும் வேடர்கள்வாரார்கள்
குத்திக்களைபறிக்குங் குலவேடர்வாரார்கள்
பச்சைமலையிலது பவளமுளைத்ததுபோல்

கோவிலனார் தண்ணீருக்குப்போக கள்ளர் கர்ணகியைமடக்குதல்.

கர்ணகியாள்தன்னிடத்தில் கள்ளர்கள்வாரார்கள்
ஆறுபேர்வந்தின்றார் ஆரணங்குமுன்பாக
ஆறுபேருக்கிளையான் ஆனதொருகள்ளனவன்
மரத்தின்மேலேறியே ஆள்வரவுபார்க்கலுற்றான்
அப்போதுகர்ணகியாளாரணங்குதான்பார்த்தாள்
ஆபரணம்தாருமென்று ஆரணங்கைகேட்கலுற்றார்
உன்னை-குத்தியெறிந்திடுவேன் வீரமணிவாளாலே
என்றுசொல்லிகள்ளரவரெதிரிலேவந்தின்றான்
அப்போதுகர்ணகையாளாரணங்குதான்பார்த்து
உச்சிலேதானிருந்து உள்ளங்கால்தான்தொடங்கி
பூட்டிருந்தஆபரணம் பொட்டெனவேதான்கழட்டி
தாலிதவிரமற்றதெல்லாம் தான்கழட்டி
கள்ளருக்குமுன்னேவைத்தாள் கர்ணகையாள்பத்தினியும்
எடுத்துக்கொண்டுபோங்களென்று ளேந்திழையுமப்போது
மரத்தின்மேலிருந்தவன் மன்னவரைத்தான்பார்த்து
இந்த செட்டிஉடமையிலே சேர்ந்தார்க்குமெத்தவுண்டு
வர்த்தகனுடமையிலே மாற்றுக்குறைச்சலுண்டு
பத்தரைமாற்று பசும்பொன்னாம் தங்கமது
சூரியன்போலாகத் துலங்குமாங்கிலியம்
மங்கிலியம்வாங்கிவர வேண்டுமென்றானப்போது
அவ்வார்த்தைதான்கேட்டு ஆறுபேரோடிவந்து
மங்கிலியந்தாருமென்று மன்னவர்கேட்கலுற்றார்
அப்போ-கோபம்பிறந்தது கொம்பேரிடையாட்கு


F. V. Press, Madras:—1929.

கர்னகி கள்ளருக்கு சாபமிடுதல்
ஆறுபேர்கள்ளர்களை அன்பாகத்தான்பார்த்து
இவர்-குத்துக்கல்லாகப்போக கொடுத்தாளேசாபமது
பத்தினியாள்சாபம் பலித்ததுகாணப்பொழுது
கட்டாகநின்றார்கள் கட்டழகராறுபேரும்
மரத்தின்மேல்நின்றவனை வவ்வாலாய்த்தொங்கவென்று
வவ்வாலாய்த்தொங்கவென்று மயிலனையாள்சாபமிட்டாள்
அப்படியேதொங்குகிறார் ஆணழகராறுபேரும்
அந்தச்சமயத்திலே ஆணழகர்வாராராம்
சொம்புசலங்கொண்டு தீவிரமாய்வாரார்காண்
அண்டையிலேவந்துநின்றார் ஆணழகர்கோவிலனார்
ஆறுபேர்கல்லாக யிருக்கிறதைக்கண்டாரே
இவர்-ஆரடிபெண்ணேயென்று அரிவையரைக்கேட்கலுற்றார்
இந்நாட்டுக்கள்ளரிவ ரேழுபேர்வந்தார்கள்
ஆபரணங்கேட்டாரிந்த ஆறுபேர்கள்ளர்களும்
வெட்டியெறிவோமென்றார் வேடர்களாறுபேரும்
அஞ்சிப்பயந்துநான் ஆபரணந்தான்கொடுத்தேன்
தாலியைவேண்டுமென்று தனஞ்செயர்கேட்டார்கள்
ஆறுபேர்கள்ளரைநான் கல்லாய்சமைத்துவைத்தேன்
மரத்தின்மேல்நின்றவனை வவ்வாலாய்சமைத்துவைத்தேன்
என்றுசொல்லிகர்னகையும் எடுத்துரைத்தார்கோவிலற்கு
அப்போதுகோவிலனார் அரிவையரைத்தான்பார்த்து
எழுப்பிவிடச்சொன்னாராம் இன்பமுள்ளவர்ந்தகரும்

கர்னகி கல்லாய்சமைத்த கள்ளர்களையெழுப்பியது.

அப்போதுகர்னகியா ளரிவையருமேதுசொல்வாள
கல்லாய்சமைத்தவரை கடுகவெழுப்பிவிட்டாள்
எப்போதும்போலே எழுந்தார்கள்கள்ளரெல்லாம்
கர்னகையாள்முன்னேவந்து கட்டழகர்தெண்டனிட்டார்
ஆறுதப்புநூறுபிழை அடியார்கள்செய்ததெல்லாம்
கோடிதப்புமனம்பொறுத்து கொண்டனைக்கவேண்டுமம்மா
அப்போதுகர்னகையா ளாரணங்கேதுசெய்தாள்
உப்பாவொரட்டாக உத்தமரேபோங்களென்றாள்
இப்படிக்குச்சாபமது தந்தாளாங்கர்னகையாள்
இருவருந்தானெழுந்து வாரார்கள்மதுரைக்கு

சொக்கருடைய ஆலயத்தை கோவிலருங்கர்னகியும் கண்டது

மதுரைக்குச்சமீபமது வருகின்றவேளையிலே
தோற்றுதுபோலேயல்லோ தோற்றுதுதென்மதுரை
அரும்புபோலேதோற்றுவது ஆருடையதோட்டங்கள்
அடிபிட்டுக்குமண்சுமக்கும் பேயாண்டிசொக்கரடி
சொக்கரதுவாலயந் தோகையரேயென்றுரைத்தார்
அங்கயற்கண்மீனாட்சி அம்மனுடவாலயந்தான்

அப்பாலேதோற்றுவது ஆருடையவாலயங்கள்
மருந்திலாப்பிணிதீர்க்கும் வயிதீசனுதனடி
அப்பாலேதோற்றுவது ஆருடையவாலயங்கள்
கள்ளகுருக்களவர் கள்ளவிநாயகராம்
அப்பாலேதோற்றுவது ஆருடையவாலயங்கள்
தானுய்முளைத்தெழுந்த தாயுமானஜம்புலிங்கர்
அப்பாலேதோற்றுவது ஆருடையஆலயங்கள்
ஆயிரம்பாண்டியர்கள் அணிதிரளாமன்னவர்கள்
பாண்டியர்களாலயங்கள் பைங்கொடியேயென்றுரைத்தார்
முன்பாகத்தோற்றுதே ஆருடையஆலயங்கள்
மாணும்துறையது வண்ரோங்தெப்பகுளம்
என்றுமிகத்தானுரைத்தார் வர்த்தகனார்கோவிலரும்
இப்படிக்குச்சொல்லி இருவரும்வரும்போது
கர்ணகி விநாயகரை ஆருடங்கேட்க அவர் சொல்லியது
கள்ளவிநாயகர்முன் கர்ணகையாளோடிவந்து
கைகூப்பிதெண்டனிட்டு கர்ணகையாள்கேட்கலுற்றாள்
சிலம்புகொண்டுவாராரோ செட்டிபிள்ளைகோவிலனார்
அவர்-சிக்குசிலவில்லாமல் திரும்பிவருவாரோ
அழும்புகளில்லாமல் அவர்வந்துசேருவாரோ
வாயைத்திறக்கவில்லை மறுவார்த்தைபேசவில்லை
தாளைத்திறக்கவில்லை தனிவார்த்தைபேசவில்லை
மௌனமாய்தானிருந்தார் மங்கையற்குமுன்பாக
கோபம்பிறக்குதங்கே கொடியிடையாள்கர்ணகிக்கு
அடிமடியில்போட்டு அம்பலத்திலிழுக்கலுற்றாள்
சொல்லுகிறேனென்றவர் சொல்லுகிறார்விநாயகரும்
இந்தப்பழனம் அணிமதுரைபோவாரானால்
மாண்டுமடிந்திடுவார் வரப்போறதில்லையென்றார்
துரும்பெடுத்துமேற்போடுந் துன்மார்க்கமதுரையது
சிந்தையிட்டுதலைவெட்டும் நீதியில்லாதென்மதுரை
இந்தமதுரைக்கு இனிபோனானுன்கணவன்
இனிதிரும்பப்போறதில்லை இயலானவுன்புருஷன்
தட்டானேதாயாதி பாண்டியனேபங்காளி
மூத்தநமயனென்று அவனுடையபிள்ளையென்பான்
வாத்தியாரடித்ததினால் வனம்போனபிள்ளையென்பான்
ஒப்பாரிகொண்டு உறவுசொல்லிதானழைப்பான்
கட்டினகட்டோடே கச்சேரிகொண்டுபோவான்
நீதிகளோபாண்டியர்கள் சிற்கத்தலைவெட்டிவைப்பார்
பழிகாரமதுரைதேடி பட்டணத்தார்போனாலே
இறந்துமடிந்திடுவார் இனிதிரும்பப்போறதில்லை
பின்னேவருங்காரியத்தை முன்னேசொல்லிவிட்டேன்
என்றுவிநாயகரும் எடுத்துரைத்தார்கர்ணகிக்கு

அவ்வசனங்கேட்டு அரிவையரும்வாராளே
கோவிலனார்முன்னேயவள் கொம்பனையாள்வந்துநின்று
விநாயகர்சொன்னதெல்லாம் விபரமாய்த்தானுரைத்தாள்
கட்டழகர்கோவிலற்கு கன்னியாள்தானுரைத்தாள்
இவ்வசனங்கேட்டு இன்பமுள்ளகோவிலனார்
எழுந்துநடந்தாராம் இயலாசவப்போது
மதுரையைத்தான்தேடி வாராரேகோவிலனார்
மானுமதுரையது வண்டோரத்தெப்பகுளம்
உன்னை-இந்தநல்லபட்டணத்தில் அடைக்கலமாய்வைப்பதற்கு
ஆர்வீடுதேடியுன்னை அடைக்கலமாய்வைப்பேண்டி
வெள்ளாழன்வீடுதேடி மெல்லியரேவைக்கட்டுமா
வெள்ளாழன்வீட்டில்வைத்தால் வேலைகள்மெத்தவுண்டு
முப்போகம்விளைந்தாலும் உப்புக்குநெல்லில்லையென்பார்
இன்னம்-ஆர்வீடுதேடிவைப்பேன் அரிவையரேயுந்தனைநான்
வன்னியர்வீடுதேடி பாவையரேவைப்பேனோ
எருழும்வேளையிலே நாற்றுநடவாருமென்பார்
ஆர்வீடுதேடியுன்னை அடைக்கலமாய்வைப்பேண்டி
கோமுட்டிவீடுதேடி கொம்பனையேவைப்பேனோ
கடைவிற்கும்வேலையெல்லாம் கடைபெருக்கவாடியென்பார்
சேணியர்வீடுதேடி தேன்மொழியேவைப்பேனோ
தறிபோடும்வேலையெல்லாம் நூலிழைக்கவாடியென்பார்
செட்டியார்வீடுதேடி தென்மொழியேவைபேனோ
அரைக்கமிளகிடுவார் அரைக்கணக்கெழுதிவைப்பார்
கரிக்குமிளகிடுவார் கால்கணக்கெழுதிவைப்பார்
விருந்தாளிவந்தாலே வருந்தியுலைவைக்கவொட்டார்
இன்னம்-ஆர்வீடுதேடியுன்னை அடைக்கலமாய்வைப்பேண்டி
இப்பெரியபட்டணத்தில் இடைச்சிவீடுபாருமென்றாள்
இடைச்சிவீட்டில்வைத்தாளே இளைப்பாறல்மோர்குடிப்பேன்
என்றுமிகவுரைத்து இருவரும்வாராரே
வைகைக்கரையோரம் வந்துநின்றாரிருவருமாய்
அந்தச்சமயத்தில் ஆச்சியவள்சிற்றிடைச்சி
தயிர்பானைதானெடுத்து தையலரும்வாராளே
அட்டாளுஞ்சொக்கரென்று ஆச்சிமனதிலெண்ணி
அடிவணங்கிதெண்டனிட்டாள் அழகர்கோவிலனை
வந்துபணிந்தவளைக் கண்டந்தகோவிலனார்
சிவசிவாவென்றுசொல்லி அருஞ்செவியில்கையைவைத்தார்
அரகராவென்றுசொல்லி அருஞ்செவியில்கையைவைத்தார்
ஆரென்றுநீபணிந்தாய் அரிவையிளங்கொடியே
சொக்கரல்லசொக்கரல்ல ஜாதியிலேசெட்டிபிள்ளை
கூத்தியார்கடனுக்காக கொண்டவள்சிலம்பெடுத்து
கொண்டவள்சிலம்பெடுத்து கொடிமதுரைவிற்கவந்தேன்

என்பேருகோவிலனார் என்கூத்தியாள்மாதவியாள்
கூத்தியாள்மாதவியாள் கொண்டவள்கண்ணகையாள்
கூத்தியார்கடனுக்காக கொடிசிலம்பைகொண்டுவந்தேன்
இந்தமதுரையிலே இன்பமுடன்விற்கவந்தேன்
என்றுமிகச்சொல்லையிலே எழுந்தாளே ஆச்சியம்மாள்
அந்தப்புரத்துக்கு அரிவையரும்வாராளே
ஆச்சிக்குமுன்பாக அழகுள்ளகோவிலரும்
கண்ணகியாள்மாதரும் கடுகெனவேவாரார்கள்
ஆச்சியம்மாள்தன்மனைக்கு அன்பாகத்தானுழைந்து
தலைகடைத்திண்ணையிலே தனஞ்செயனுமுட்கார்ந்தார்
கண்ணகியாளைப்பார்த்து கட்டழகரேதுசொல்வார்
பசியாயிருக்குதடி பாவையிளங்கொடியே
பசியினைப்பைதீர்த்துவிட்டாய் பட்டணமேபோய்வாரேன்
செஞ்சிலம்பைவிற்றுநான் தேன்மொழியேவாரேனென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு அருங்கிளியாலேதுசொல்வாள்
கையிலேகாசுமில்லை கடன்கொடுப்பாருமில்லை
எப்படிக்கிசாதம்நான் இதமாகச்செய்வேனென்றாள்
ஆச்சியிடத்தில்வாங்கி அரிவையேசமையல்செய்யும்
ஆச்சியரைப்பார்த்து அரிவையருமேதுசொல்வாள்
இளைப்பாகத்தானிருந்தார் என்கணவன்கோவிலனார்
அமுதுபடிதந்தாலே ஆணழகர்கோவிலற்கு
சமையல்செய்துபோடுகிறேன் தையலந்தஅத்தையரே
அமுதுபடைகாய்கறிகள் அத்தனையுந்தான்கொடுத்தாள்
பானைகழுவி பனிநீருலைவார்த்து
முத்துபோல்சாதம் வடித்தாளேமெல்லியரும்
பத்துவிதக்கறியும் பதினெட்டுபச்சடியும்
எட்டுவிதக்கறியும் இருபத்தோர்பச்சடியும்
புத்துருக்குநெய்யும் பொன்போலசிறுபருப்பும்
அத்திவிரகொடித்து தித்திக்கப்பால்காய்ச்சி
இத்தனையும்செய்துவைத்தாள் ஏலங்கருங்குழலாள்
பானைகொண்டுகைகொடுத்தாள் பைங்கிளியாளப்பொழு
பானைகொண்டுபல்விளக்கி வேலைகொண்டுநாவழித்து
தீர்த்தநீர்வாங்கியவர் திருமுகமுஞ்சுத்திசெய்து
வசந்தநீர்வாங்கியல்லவோ மதிமுகமுஞ்சுத்திசெய்து
பூசைபண்ணுமண்டபத்திற் புண்ணியனார்தானுழைந்து
பூசைமுடித்துக்கொண்டு புண்ணியனார்கோவிலரும்
வாழையிலைபோட்டு வட்டித்தாள்சாதமது
அருங்கறியும்போசனமும் அன்பாகத்தான்படைத்தாள்
வெந்நீரும்நீர்மோரும் விதமாகவைத்தார்கள்
போசனங்களுண்டு பொடிலட்டுகைதிமிரி
தாம்பூலந்தரித்துக்கொண்டார் தனஞ்செயனார்கோவிலரும்

பாவிகைபாய்போட்டாள் கர்னகியாள்பெண்ணரசி
பட்டுப்பாய்போட்டாள் படுத்தாரேபட்டணத்தார்
ஆச்சியம்மையுருகாக அருங்கிளியும்போய்படுத்தாள்
அந்நேரவேளையிலே யென்னேரமாகுதப்போ
வெள்ளிமுளைக்குதடி வெடிகோழிகூவுறது
அப்போதுகோவிலனும் ஆணழகன்தானெழுந்து
அந்நேரவேளையிலே ஆணழகரேதுரைப்பார்
கர்னகியைப்பார்த்து கட்டழகரேதுசொல்வார்
மதுரைக்குப்போய்வாரேன் மங்கையரேவிடைகொடென்றார்
என்னை-ஆச்சியுடன்தன்வசத்தில் அடைக்கலமாய்வையுமென்றாள்
கர்னகியைகைபிடித்து கட்டழகரேதுசொல்வார்
ஆச்சியரைதானழைத்து அன்பாகவேதுசொல்வார்

### கோவிலர் சர்னகியை ஆச்சியிடத்தில் ஒப்பிவைத்து

### கர்னகி அடைக்கலக்கும்மி.

கர்னகியுந்த னடைக்கலமம்மா
காரிழையுந்த னடைக்கலமம்மா
பத்தினியுந்த னடைக்கலமம்மா
பார்வதியுந்த னடைக்கலமம்மா
உத்தமியுந்த னடைக்கலமம்மா
ஆட்டாலேமாட்டாலே மிகுந்தவள் தாயே
ஆனையென்றாலும் வளர்த்தவளே தாயே
மாட்டாலேஆட்டாலே மிகுந்தவளே தாயே
மாயனையென்றாலும் வளர்த்தவளே தாயே
மதுரைக்குநான்போய் வருமளவுந்தாயே
மயிலனையாளுந்த னடைக்கலந்தாயே
தென்மதுரைநான்போய் வருமளவுந்தாயே
தேன்மொழியாளுந்த னடைக்கலந்தாயே
கனமதுரைநான்போய் வருமளவுந்தாயே
கர்னகையுந்த னடைக்கலமம்மா
கர்னகியைத்தான்பிடித்து காரிழையாள்கைகொடுத்தார்
சிலம்பெடுத்துதோளில்வைத்து செட்டிபிள்ளை தானெழுந்தார்
கர்னகியைத்தான்பார்த்து கனமதுரைபோறேண்டி
நல்வாக்குநீகொடடி நாயகமேயென்றனுக்கு
போய்வாருமென்றாளே பொற்கொடியாளப்போது
ஆச்சியரைத்தான்பார்த்து ஆணழகர்கேட்கலுற்றார்
போகட்டுமோவென்றுசொல்லி புண்ணியருங்கேட்கலுமே
போய்வாருமென்றாளே பொற்கொடியாளப்போது
கர்னகையுமோடிவந்து கட்டழகர்முன்னேநின்று
எனக்கோரடையாள மின்பமுடன்செய்யுமென்றாள்

### கோவிலர் கர்ணகிக்கு அடையாளஞ்செய்தல்.

பேழைபெட்டிக்கொண்டுவந்து புண்ணியனாரேதுசெய்தார்
திருவிளக்கேற்றிவைத்தார் சீரானபெட்டியிலே
மாங்கனியுமல்லிகைப்பூ வைத்தாராம்பெட்டியிலே
தேங்கனியுங்கொண்டு சீராகவைத்தாராம்
சந்தனத்தைதானுரைத்து வைத்தாராம்பெட்டியிலே
நான்-மதுரைக்குச்சென்று வருமளவுமங்கையரே
தேங்காயுடையாது செம்புஜலங்குறையாது
மல்லிகைப்பூவாடாது மாங்கனியுமழுகாது
சந்தனமுலராது தையலிளங்கொடியே
வைத்தஅடையாளம் மாறுமல்தானிருக்கும்
மாண்டுமடிவேனானால் மங்கையரேநீர்கேளும்
திருவிளக்குநின்றுவிடும் தேன்மொழியேபார்த்துக்கொள்ளும்
தேங்காயுடைந்துவிடும் செம்புஜலங்குறையும்
மாங்கனியழுகிவிடும் சந்தனமும்தீய்ந்துவிடும்
இதுதானடையாள மேந்திழையேயுந்தனுக்கு
நான்-மதுரைக்குபோவதற்கு மனதில்லையென்றுசொல்லி
சிலம்பெடுத்துதோளில்வைத்தார செட்டிபிள்ளை கோவிலனார்

### கோவிலனார் வீடுவிட்டுவரும்போது துற்குறிகாணுதல்.

அப்போது-பள்ளிபளபளென், பனைமரத்திலா[illegible]
தலைவாசல்வருகையிலே தலை[illegible]ரகைதவறிவிழும்
அந்தசகுணம்விட்டு ஆனமுடியர்வெளியில்வ[illegible]
குடியிட்டகரும்பூனை குறுக்காகவந்ததங்[illegible]
அந்தசகுணந்தபபி அப்பாலேவாராரே
எருமுட்டையுந்தலை மொட்டையு மெதிரில்வரக்கண்டாராம்
ஓரிகுறுக்காச்சு ஒற்றைப்பார்ப்பானெதிரானான்
வாழாக்குமரியவள் மீளாநெருப்பெடுத்தாள்
வண்ணான்குடமெடுத்து எதிரில்வரக்கண்டாராம்
ஏணியுஞ்சாணானு மெதிரில்வரக்கண்டாராம்
தட்டோலைகைபிடித்து கணக்கன்வரக்கண்டாராம்
ஆண்கோட்டான்பெண்கோட்டா னலறியழக்கண்[illegible]
அசரீரிவாக்காக ஆரணங்குபுலம்புகிறாள்
காராமபறச்சியவள் கதறியழக்கண்டாராம்
மதுரைக்குபோகாயோ செத்துமடியாயோ
என்றுசொல்லிபறச்சி நின்றுபுலம்புகிறாள்
ஒற்றைக்குறவிட்டு [illegible]ங்கியழுகிறாளே
அத்தனையுந்தள்ளிவிட்டு ஆனமுகர்வாராரே
மதுரையைத்தான்தேடி வருகின்றவேளையிலே
மதுராபுரிபட்டணத்து மன்னவருங்கண்டுவிட்டார்
இப்பெரியமதுரையிலே யென்சிலம்பைவிற்கவேண்டும்
மதுரைக்குள்ளாகவேதான் வடிவழகன்போய்நுழைந்தான்

அரண்மனைகளாஸ்தான மாணமுகர்கண்டுவிட்டார்
கோட்டைகளுங்கொத்தளமும் கோவிலனர்கண்டுவிட்டார்
கோவிலின்முன்பாக கோவிலனர்வந்துநின்றார்
இந்தச்சிலம்பைதானினி மதுரையிலேவிற்றுமே
செங்கல்லால்கோவில்தன்னை கருங்கல்லால்கட்டிவைப்பேன்
நெருங்குகின்றவீதியிலே நெருங்காதமோட்டிவைப்பேன்
அபிஷேகஞ்செய்வதற்கு அபாஞ்சிதானளிப்பேன்
இப்படிக்குபிரார்த்தனைகள் செய்தாரேகோவிலனர்
சிந்தாமணிதாசிவீடு செட்டிபிள்ளைவாராரே

## கோவிலற் சிலம்புவிற்கும் கும்மி.

சிலம்போசிலம்போ சிலம்பு
தென்மதுரைபெண்டுகளா சிலம்போசிலம்பு
பச்சைசிலம்பையுங் கொள்வாருமுண்டோ
பசும்பொன்னாற்சால்சிலம்பு கொள்வாருமுண்டோ
உத்தமியாள்காற்சிலம்பைக் கொள்வாருமுண்டோ
உமையவள்காற்சிலம்பைக் கொள்வாருமுண்டோ
இந்தச்சிலம்பை கொள்வாருமுண்டோ
இதுக்கேற்றவிலைதனைக் கொடுப்பாருமுண்டோ
தென்மதுரைபெண்டுகளா சிலம்போசிலம்பு
விலையில்லாசிலம்பை விலையொன்றுய்க்கூறி
வீதிகடந்தாராங்கோவிலருமங்கே
வெள்ளானைகட்டிநான் வாழ்ந்ததும்போதும்
வேசிமருந்தாலே நொந்ததும்போதும்
தங்கானைகட்டிநான் வாழ்ந்ததும்போதும்
தாசிமருந்தாலே தோற்றதும்போதும்
தங்கமதிலுப்பரிகை பொற்கோபுரங்கள்
தலைவாசலிருந்ததுக் தலையாரிக்காவல்
மூவாயிரங்கப்பல் தண்ணியிலேவிட்டேன்
கப்பலுஞ்சோங்கி கரைதட்டிப்போச்சு
வர்த்தகங்கட்டிச் சிலம்பெடுத்துவந்தேன்
வாழ்மதுரைதன்னில் சிலம்புகொள்வீரே.

வேறு.


இப்படியாய்கோவிலரு மின்பமுடன்கூறிவாரார்
கூறிகூறிவாராரே கோவிலச்செட்டியாரும்
சிந்தாமணிதாசியவள் தேன்மொழியாளோடிவந்து
வர்த்தகனையவள்பார்த்து வாருமென்றுதானழைத்தாள்
வாருமென்றுதானழைக்க வாராரேகோவிலரும்
சிலம்பைதான்தாருமென்று தேன்மொழியாள்கேட்டாளே
எடுத்துகொடுக்கவே யெடுத்தாராங்கோவிலரும்
வாய்விட்டழுகுதங்கே மயிலனையாள்பொற்சிலம்பு

பத்தினியாள் காற்சிலம்பு பரஸ்திரீக்கேற்காது
உத்தமியாள் காற்சிலம்பு உத்தனுக்குஏற்காது
வைப்பிட்டமுருகக்கே மயிலனையாள் காற்சிலம்பு
எடுத்துகட்டுமென்று சொன்னாள் ஏந்திழையாள் சித்திரமணி
இந்தச்சிலம்புமே எந்தனுக்குயேற்காது
ஆராருபோடவேணும் ஆரணங்குகாற்சிலம்பை
மீனாட்சிபோடவேணும் சொக்கரவர்பார்க்கவேணும்
வள்ளியவள்போடவேணும் வடிவேலர்பார்க்கவேணும்
லட்சுமியாள்போடவேணும் மகாவிஷ்ணு பார்க்கவேணும்
இந்தச்சிலம்புமே யெந்தனுக்கேற்காது
எடுத்துமெள்ள கட்டுமென்றாள் யேந்திழையாளப்போது
ஆனையின்மேல்பணத்தாரேன் அரண்மனைக்குப்போங்களென்றாள்
தாசியவள்நீகொடுக்கத் தனஞ்செயனார்வாங்குவேனோ
அவளரண்மனையைவிட்டு ஆணழகர்வாராரே
நாலுபக்கந்தென்மதுரை நடுவில்பிள்ளையார்கோவில்
கோவில்வீதிதன்னில் கோவலனார்வாறாரே

**இராஜகன்னி சிலம்பு சொட்டையாக தட்டானிடங் கொடுத்தது.**

இராஜகன்னிதன்சிலம்பை நாயகியாளப்போது
வஞ்சிபத்தன்கைதனிலே மயிலனையாள்தான்கொடுத்தாள்
சொட்டைநிமிர்த்திக்கொண்டு வாவென்றுசொன்னாளே
அவனெடுத்துக்கொண்டுபோய் அறிவையின் காற்சிலம்பை
ஆசைச்சுவர்மீதில் வைத்தானேவஞ்சிபத்தன்
வஞ்சிபத்தன்புறக்கடையில் புளியமரத்தடியில்
கெருடனுங்கூண்டுகட்டி குஞ்சுகள்தான்பொரிக்க
குஞ்சுக்கிறைதேடப் போச்சுதுகெருடனது
அந்தச்சமயத்தில் ஆரணங்குமுத்துமாலை
அரைக்கீரைதானறிய வந்தாள்புறக்கடையில்
அதிலேயொருமுள்ளு அன்பாகத்தைத்துதங்கே
ஐயோசிவனேயென்று அழுதுகொண்டுவீடுவந்தாள்
கெருடனுக்கிடங்கொடுத்து காலுக்கிடராச்சு
ஐயோசிவனேயென்று அழுதுகொண்டுதானிருந்தாள்
பள்ளிக்கூடம்படித்து பாலகர்வீடுவந்தார்
அப்போதுமுத்துமாலை அழுதுகொண்டிருக்கிறதை
அழுதுகொண்டிருக்கிறதை பார்த்தார்கள்பிள்ளைகளும்
ஏனம்மாயழுகிறாயென்று சொல்லிக்கேட்டார்கள்
அரைக்கீரையறியப்போனேன் அங்கேயொருமுள்ளுதைத்து
வேதனைகளாச்சுதென்று சொன்னாளேமுத்துமாலை
அந்தவிசேஷமதை ஆணழகர்தான்கேட்டு
அந்நேரத்திலே ஆணழகர்தானேறி
கெருடனிடகூண்டை சிராகக்கலைத்துவிட்டார்

8



கழுத்தைமுறித்துக்கொன்று கடுகவேவிட்டெறிந்தார்
அந்தச்சமயத்தில் அன்பானகெருடனது
குஞ்சுக்கிரைதேடி கொப்பெனவேவந்ததங்கே
ஆரெடுத்தார்குஞ்சையென்று அழுதுகொண்டுபார்க்கையிலே
வஞ்சிபத்தன்மைந்தர்செய்த வேலையென்றுசொல்லி
பழிக்குப்பழிவாங்கவென்று பாங்கானகெருடனது
பார்த்துக்கொண்டிருந்ததங்கே பாங்கானகெருடனது
அப்போதுவஞ்சிபத்த னவனுடையசெஞ்சிலம்பை
ராசகன்னிசெஞ்சிலம்பை கலமாகக்காயவைத்தான்

கெருடன்முட்டையையுடைத்தபடியால் சிலம்புகொண்டுபோவது.

இதுதான்சமயமென்று யின்பமுடன்கெருடனது
காலமேகவ்விக்கொண்டு கடுகவருகுதங்கே
ஏழுகடலுக்கப்பால் திருப்பாற்கடலதனில்
ஆயிரங்கன்னிபுற்று ஐந்துதலைநாகமது
ஐந்துதலைநாகன்கையி லவள்சிலம்பையொப்பித்து
பற்றியெடுத்துமது பாங்காகவைத்ததங்கே
ராஜகன்னிகோவிலிங்கி நற்சிலம்பைக்கேட்கலுற்றாள்
தாரேன்தாரேனென்று தனஞ்சயனார்சொல்லலுற்றான்
அந்நேரவேளையிலே ஆயிரம்பாண்டியர்கள்

பாண்டியர்கள் வஞ்சிபத்தனைக் கண்டிக்கிறது.

வஞ்சிகல்லாத்தன்றனை வரவழைத்தாரப்போது
இன்றையதினத்திலே சிலம்புதராவிட்டால்
நாளையதினத்திலே கலமாகவுந்தனைத்தான்
ஆனையின்காலிலே யடைவாகப்புரட்டிடுவோம்
என்றுமிகத்தீர்ப்பு யின்பமுடன்தான்கொடுத்தார்
அப்போதுவஞ்சிபத்த னவ்வார்த்தைதான்கேட்டு
அரண்மனைக்குள்ளாக ஆனமுகன்தான்வந்து
மனையாளைத்தானழைத்து மன்னவனேதுரைப்பான்
என்னடிபெண்ணேநீ இளங்கொடியேமுத்துமாலை
அந்த-செஞ்சிலம்புதன்னாலே தீம்புவந்துநேர்ந்ததேடி
நாளையதினத்தில் கலமாகப்பாண்டியர்கள்
ஆனையின்காலிலே ஆனமுகர்கொல்லவென்றார்
நீ-மஞ்சளதுதானிழந்தாய் மணமிழந்தாய்பூவிழந்தாய்
இனி-யென்னசெய்வதென்று எந்திழையாளுனக்குரைப்பேன்
தாலியறுத்துமந்த தையலரும்விட்டெறிந்தாள்
இப்படிக்குத்தானிருக்க வின்பமுடனந்நேரம்
அந்தச்சமயத்தி லானமுகர்கோவிலனார்

ராசகன்னிவீதிக்கு கோவிலர்சிலம்புகூறி வந்தது.

சிலம்புவிற்றவாராரே தென்மதுரைகோவிலரும்
ராஜகன்னிவீதியிலே கலமாகக்கூறிவாறார்

மணிச்சிலம்பென் றுசொல்லி மணியழகர் கூறிவாரார்
பத்தினியாள் காற்சிலம்பை பட்டணத்தில் கொள்வாருண்டோ
உத்தமியாள் காற்சிலம்பை யுத்தயர் கொள்வாருண்டோ
என்றுமிகக்கூறையிலே பேத்திழையாள் தான்கேட்டாள்
குரலோசையிவ்வழகு கொற்றவனு செவ்வழகோ
மணிக்குரலோசையிவ்வழகு மணியழகசெவ்வழகோ
சிலம்புவிற்கும்மன்னவனை தேன்மொழியாளழையுமென்றாள்
தாதிமாரோடிவந்து தனஞ்சயரைதானழைத்து
அழைத்தகுரல்கேட்டு ஆணழகர் வாறாரே
மூன்றும்படித்தலத்தில் வந்துநின்றார் கோவிலனார்
முத்துமணி தான்கொடுத்தார் பெத்தனவேதாரியர்கள்
இராஜகன்னிகோவிலின் கலமாயெழுந்திருந்தார்
முத்துதிரைவிலைத்து பொல்லியிலங்கொடியாள்
வர்த்தகரைத்தான்பார்த்து மயிலனையாள்கேட்கலுற்றார்
வர்த்தவுரெந்நாடு எனக்கறியச்சொல்லுமென்றாள்
அப்போதுகோவிலனு ராணழகரேதுசொல்வார்
கஞ்சிகொண்டுமதவடைக்கும் காவிரிப்பூநன்னாடு
காவிரிப்பூம்பட்டணத்து கரைதுறைக்கும்வர்த்தகர்கள்
மாஞகன்செட்டியென்றும் மாச்சோட்டான்செட்டியென்றும்
மாஞகன்செட்டிபெற்ற மணியரசன்கோவிலனும்
என்பேருகோவிலன் கூத்தியர்மாதவியாள்
கூத்தியர்மாதவியாள் கொண்டவள்கர்ணகியாள்
தாசிக்கடனுக்காக தனிச்சிலம்புதானெடுத்தேன்
வேசிக்கடனுக்காக மெல்லியுடசிலம்பெடுத்தேன்
மெல்லிசிலம்பெடுத்து மேன்மையுடன்விற்கவந்தேன்
சிலம்பையவர்தானெடுத்து தேன்மொழியாள்கைகொடுத்தார்
இராஜகன்னிவாங்கையிலே கலமாகபொற்சிலம்பு
அயிர்தஞ்சொரிகிறது ஆரணங்குநாயகிக்கு
கண்ணீரைசோரவிட்டு கதறியழுகிறாளே
தவமாய்தவமிருந்து தையலரைப்பெற்றெடுத்தேன்
வரமாய்வரமிருந்து வையகத்திலேவொப்படைத்தேன்
அன்றுகண்டேன்மகளையுன்னை பின்றுகண்டேன்பொற்சிலம்பை
அழுதுபுலம்புகிறாள் அரசங்குராஜகன்னி
கோவிலனைத்தான்பார்த்து கொம்பனையாளேதுசொல்வாள்
பாம்பெடுத்துமேல்போடும் பழிகாரத்தென்மதுரை
இந்தமதுரையிலே பிறந்தும்போகாளைச்சே
ஆனையின்மேல்நிரவியத்தை அனுப்புகிறேனுன்மனைக்கு
அதையெடுத்துமுத்த னாண்மனைக்குப்போய்ச்சேரும்
இந்தச்சிலம்புதா னேற்காதுயெந்தனுக்கு
நாகரத்னசிலம்பிதுதா னுயுக்கேற்காது

எடுத்துமெள்ளக்கட்டுமென்று ஏந்திழையாள் தானுரைத்தாள்
அப்போதுகோவிலனார் ஆணழகர்வாறாரே

### கோவிலர் வாத்தியாரைக் காணுதல்.

வேதவாத்தியார்பள்ளிக்கூடம் மெழுந்தவாரார்வாத்தியாரும்
அட்டாணுஞ்சொக்கரென் றடிபணிந்துதெண்டனிட்டார்
சொக்கரல்லசொக்கரல்ல சாமியிலேசெட்டிபிள்ளை
சுத்தியார்கடனுக்காக சிலம்பெடுத்துவிற்கவந்தேன்
என்றுமவர்சொல்லையிலே யியலையவாத்தியாரும்
பள்ளிக்கூடத்திலே பாங்காகவுந்தவைத்தார்
பசியாருமென்றுசொல்லி பசியிளைப்பைதீர்த்துவிட்டார்
தாம்பூலந்தான்கொடுத்தார் தனஞ்செயனார்கோவிலர்க்கு
அப்போதுவாத்தியா ராணழகனென்னசொல்வார்
பரிகாரமதுரையிலே கோவிலரேயென்வந்தீர்
சிந்தையிட்டுதலைவாரும் நீதியில்லாமதுரையது
அந்தமாய்மாளவந்தீ ராணழகாகோவிலரே
காரம்பகவைவிற்றுக் கட்டழகாவுந்தனுக்கு
சுத்தியார்கடனடைக்க கொற்றவனோனாலாதரேன்
இதையெடுத்துடைந்த வரண்மனைக்குப்போய்வாரும்
இவ்வார்த்தைகேட்டு மெடலந்தபுண்ணியனும்
பள்ளிக்கூடத்தைவிட்டுப் பாங்காகத்தானடந்தார்
வஞ்சிபத்தன்பிள்ளைகள் வகையாகத்தானெழுந்து
வாத்தியாரைப்பார்த்து வகையுடனேதுசொல்வார்
ஒண்ணுக்குப்போறீரென்று கேட்டார்கள்பசங்களங்கே
போங்களென்றனுப்பிவிட்டார் புகழானவாத்தியாரும்
அரண்மனையைத்தேடி ஆணழகர்வாரார்கேள்
தாயுந்தகப்பனையுந் தான்பார்த்து ஏதுசொல்வார்
சிலம்பையெடுத்தொருவன் தென்மதுரைவிற்கவந்தான்
ஆனைமுருடன்ன ஞாதனார்வர்த்தகனும்
சிலைபோல்வடிவழகன் செட்டிபிள்ளைகோவிலனும்
சிலம்புகொண்டுவாரானே செட்டிபிள்ளைகோவிலரும்
அவனையனுப்புகிறே னணழகாவுமிடத்தில்
மூத்ததமையன் முதல்தமையன்பிள்ளையென்று
ஒப்பாரிகொண்டு உறவுகொண்டுநீயழைத்தால்
செஞ்சிலம்பைபறித்துக்கொண்டு திருடனென்றிருகக்கட்டி
இராசர்முன்னேகொண்டுவந்தால் நலமாகவெட்டிடுவார்
நீர்-தப்பிப்பிழைத்திடுவீர் தனஞ்செயரேயென்றுசொன்னார்
என்றவற்குச்சொல்லி இன்பமுடனோடிவாரார்
கோவிலரைக்கண்டு கொற்றவர்களென்னசொல்வார்
வஞ்சிபத்தன்வீதிக்கு மன்னவரேபோவீரானால்

சிலம்பைவிற்றுநான்கொடுப்பேன் சீக்கிரமாயுந்தனுக்கு
என்றுமவர்சொல்லி இன்பமுடன்போனார்கள்

கோவிலனார் வஞ்சிபத்தன் வீதிக்குவருதல்.

அப்போதுகோவிலனா ரவ்வீதிவாறாராம்
சிலம்போசிலம்போவென்று செட்டிபிள்ளைவாறாராம்
சிலம்பென்றசத்தமதை கேட்டுவிட்டான்வஞ்சிபத்தன்
திண்ணையைவிட்டுமவன் திட்டென்றெழுவந்தான்
கட்டியழுகிறானே கட்டழகன்கோவிலனை
மூத்ததமையனவன் முதற்றமையன்பிள்ளையப்பா
வாத்தியார்தானடித்து வனவாசம்போனபிள்ளை
காடுபோனபிள்ளையப்பா வீடுவந்துசேர்ந்தாயே
ஒப்பாரிக்கொண்டுமே உறவுகொண்டுதானழைத்தான்
அவனுடையமாளிகைக்கு அழைத்துப்போனான்வஞ்சிபத்தன்
வட்டமணைபோட்டு வர்த்தகரைக்குந்தவைத்தான்
இளைப்பாயிருக்கிறீரே இளநீர்புசியுமென்றான்
பசியாயிருக்கிறீரே பாலமிர்தம்புசியுமென்றான்
போசனஞ்சமையுமென்றான் புண்ணியனார்கோவிலற்கு
அப்போதுகோவிலனா ரணழகரேதுசொல்வார்
உன்னுடையமாளிகையில் போசனங்களுண்ணேனென்றார்
சைவமடிமங்கையரே தையலிளங்கொடியே
தவலைசெம்புதான்கொடுத்துத் தனஞ்சயனார்கோவிலற்கு
அமுதுபடிகாய்கறிக ளன்பாகவையுமென்றான்
புறக்கடையில்நீபோய் புண்ணியனார்கோவிலரே
சமையல்செய்துநீர்புசித்து தனஞ்செயரேவாருமென்று
அப்படியேயல்லதென்று ஆணழகர்தானெழுந்து
சிலம்பையெடுக்கையிலே கண்டுவிட்டான்வஞ்சிபத்தன்
இந்தச்சிலம்பிதுதா னிங்கேவைத்துப்போமென்றான்

கோவிலர் போசனஞ்செய்தல்.

சிலம்பையவன்கைகொடுத்துச் செட்டிபிள்ளைவாறாரே
போசனமுங்காய்கறிகள் புண்ணியனார்கோவிலரும்
வாழையிலைபோட்டு வட்டித்துக்கொண்டாரும்
காய்கறிகள்பதார்த்தங் கட்டழகர்வைத்துக்கொண்டு
போசனமுண்டுமவர் புண்ணியனார்தானெழுந்து
வஞ்சிபத்தன்முன்பாக வந்துநின்றார்கோவிலரும்
என்சிலம்பைத்தாருமென்று செட்டிபிள்ளைகேட்கலுற்றார்

வஞ்சிபத்தன் கோவிலரைக்கட்டி இராசர்முன்னே கொண்டுவருதல்.

கம்பிளிக்கயிறுதேடிக் கட்டியுருட்டுமென்றான்
பலத்தகயிறுதேடிப் பக்குவமாய்க்கட்டினாராம்
மட்டுலக்கைகொண்டுவந்து மண்டைமேல்தானடித்தான்
உதிரம்பெருகுதப்பா குத்தமனார்கோவிலற்கு

சிலம்பையன்றாவென்றேதாம் செட்டியாரைக்கொண்டுவாறேன்
இராசசிடகச்சேரிக்கு சுலமாகக்கொண்டுவந்தான்
சொக்கரென்றுசொல்லி எல்லவருந்தெண்டனிட்டார்
அட்டாளுஞ்சொக்கரென் றடிபணிந்துதெண்டனிட்டார்
அப்போதுவஞ்சிபத்த னணழகனேதுசொல்வான்
சிலம்புகொண்டுபோனதொரு திருடனைநான்கொண்டுவந்தேன்
அவன்-காலில்விழுந்தீர்களோ கனக்குநிலந்தராசர்களே
கம்மாளன்சொற்கேட்டு கலங்குகிறார்பாண்டியர்கள்
அப்போதுசொக்கலிங்க மாண்டவரேதுசெய்தார்
வெண்ணீரைத்தானெடுத்து விமலரங்கேறுவிட்டார்
வஞ்சிபத்தன்சொற்கேட்டு மதிமயக்கவேண்டுமென்று
அட்டாளுஞ்சொக்க ராண்டவரேதுசெய்தார்
அறிவுகெட்டுமதிகுலைந்து ஆணழகர்பாண்டியர்கள்
சிலம்புகொண்டுபோனதொரு திருடனகப்பட்டான்காண்
மணிச்சிலம்பைகொண்டுபோன மன்னனகப்பட்டான்காண்
எட்டுநாள்முன்பாக எடுத்துக்கொண்டுபோனவன்தான்
ஆரைச்சுவர்மேலே காயவைத்தபொற்சிலம்பை
ஓட்டபார்த்துளவிருந்து உங்கள்சிலம்பெடுத்து
கம்மாளத்தெருவிலே வைசிவிற்கவந்தவன்காண்
என்றுமிவன்சொல்லையிலே யியலானபாண்டியர்கள்
இந்தட்சணத்திலே யிவனைநீங்கள்கொண்டுபோய்
காளியம்மன்கோவிலிலே கடுகபலிவாங்கிடுங்கள்
அப்போதுமந்திரிக ளாணழகர்தான்கேட்டு
கொலுவைவிட்டுத்தானெழுந்தார் கொற்றவர்மந்திரிகள்
உத்தியோகம்வேண்டாமென்று உத்தமர்கள்தானெழுந்தார்
இப்பெரியதீர்ப்பதுதான் செய்வீரோபாண்டியரே
நியாயத்தைதான்கேட்டு சுலமாகத்தீர்ப்புசெய்து
ஆக்கினைகள்செய்யவேண்டு மழகானபாண்டியரே
இந்தநல்லதீர்ப்பு ஏற்காதுளங்களுக்கு
அப்போதுபாண்டியர்க ளன்பாகவேதுசெய்தார்
கோவிலனைத்தான்பார்த்துக் கொற்றவர்களேதுசொல்வார்

## பாண்டியர்களுடைய மந்திரிகள் கோவிலனை விசாரித்தல்.

இது-ஆருடையசிலம்பு ஆணழகாசொல்லுமென்றார்
என்னுடையசிலம்பு என்றாரேகோவிலனும்
கூத்திகடனுக்காக கொடிமதுரையிற்கவந்தேன்
திருடனென்றுகட்டிக்கொண்டு வந்தானேவஞ்சிபத்தன்
என்றுமேசொல்லி யெடுத்துரைத்தார்கோவிலனும்
என்னுடையசிலம்பென்று யெடுத்துரைத்தான்வஞ்சிபத்தன்
ராசகன்னிதான்கொடுத்த நற்சிலம்பென்றுசொன்னான்
அப்போதுமந்திரிக ளாலோசனைகள்பண்ணி

சேவகரைத்தானழைத்துச் சொன்சிலம்பைக்கொடுத்து
இராசகன்னிதன்னிடத்தில் கொண்டுபோய்க்கேளுமென்றான்
தன்னுடையதெனச்சொல்லுவது மல்லவெனச்சொல்லுவதும்
இரண்டிலொருசேதி பதிந்துவாரும்சேவகரே
அப்படியேகொண்டுவந்தா ரணமுகச்சேவகர்கள்
ராசகன்னிகைதனிலே கையிற்கொடுத்தார்கள்
இராசகன்னிதான்பார்த்து என்னுதல்லவென்றுரைத்தாள்
இது-ஆருடையபொற்சிலம்பு அறியேனென்காவலரே
என்றுசொல்லிப்பொற்சிலம்பை யெறிந்துவிட்டாள்ராசகன்னி
அப்போதுகாவலர்க ளங்கனமேகொண்டுவந்து
மந்திரிகள்முன்பாக கொண்டுவந்துவைத்தார்கள்
அவள்சிலம்பல்லவென்று ஆரணக்குகாருரைத்தான்
வர்த்தகர்கைகொடுத்து வணக்கமுடனுப்புமென்றார்
வஞ்சிபத்தன்றனக்கு ஆக்கினைகள்செய்யுமென்றார்
இப்படிக்குச்சொன்னார் இயலானசேவகர்கள்
அப்போதுமந்திரிக ளாணமுகர்கோவிலரை
பிடாரிகளைத்தானழைத்துப் பாம்புகொண்டுவாருமென்றார்
சிலம்பையவர்கைகொடுத்துச் சீர்பெற்றுப்போமென்றார்
அப்போதுவஞ்சிபத்த னாணமுகனேதுசொல்வான்
சத்தியஞ்செய்யவேணுமே தனஞ்செய்யேனென்றானும்
அப்போதுபிடாரர்கள் பாம்புகொண்டுவந்தார்கள்
புதுக்குடத்தில்போட்டடைத்தார் பெட்டிடையிலாம்புகளை
மஞ்சளாடைகட்டினார் மங்கையர்கள்பொற்குடந்தை
பொன்னரிசிபோட்டார்கள் பெட்டியிலேபொற்குடத்தில்
அந்தக்குடத்திலே ஆணமுகர்கோவிலரை
கைவிட்டெடுமென்றார் கட்டமுகர்மந்திரிகள்
அப்போதுகோவிலனு ரரைநினைக்கலுற்றார்
கர்ணகியுமெய்யானால் கடியாதுவரவேண்டும்
கர்ணகியைத்தானழைத்து கட்டமுகர்கைபோட்டார்
பத்தினியைத்தானழைக்க பாம்புகளுமபார்த்து
இவரைக்கொன்றால்தோஷமென் றிடைக்கதுசர்ப்பமெல்லாம்
கழுத்தின்மேல்பட்டதைக் கவ்வுதுசர்ப்பமெல்லாம்
பொன்னரிசியள்ளிவந்தப் புண்ணியனார்சபையில்வைத்தார்
அப்போதுமந்திரிக ளாணமுகரேதுசொல்வார்
அவன்பேரில்குற்றமில்லை யென்றார்கள்மந்திரிகள்
அப்போதுபாண்டியர்க ளடைவாகவேறுசெய்தார்
இன்னமொருசத்தியந்தா னின்பமொடுசெய்யச்சொன்னார்

கோவிலர்க்கு முதலாவதாக்கினைநீங்கி இரண்டாமாக்கினை வருதல்.

வெங்கைசத்தியமசெய்ய வேணுமென்றுசொன்னார்கள்
வெங்கைக்காரரையழைத்து வெங்கைகொண்டுவாருமென்றார்

அப்படியேவேங்கையை அன்பாகக்கொண்டுவந்தார்
போனிலேதானடைத்துப் புன்னியனுமெதிரேவைத்தார்
கோவிலனைத்தானழைத்துக் கொற்றவர்களேதுசொல்வார்
போனுக்குள்ளேதள்ளிவிட்டார் கோவிலசெட்டியாரை
கர்ணனைபெத்தானினைத்துக் கதறியழுகையிலே
பாராதுபோல பார்த்ததுவேங்கையது
கோவிலனையப்போது கொடிவேங்கைதள்ளிவிடும்

### கோவிலருக்கு மூன்றாவதுசெய்யும் காலாவதுமழுவும்வருதல்.

செப்பிலேசத்தியந்தான் கோரகச்செப்புமென்றான்
கொப்பனையில்காய்ச்சி கோவிலனைத்தள்ளிவிட்டான்
அதுக்கும்பிழைத்தெழுந்தா னானைமுகர்கோவிலரும்
மழுவுகொண்டுகாச்சிபல்லோ மன்னவனார்கைகொடுத்தார்
என்னுதுசிலம்பென்று எத்தினார்மழுவுதன்னை
மழுவுகொண்டுதானேந்தி வாராராங்கோவிலரும்
சொக்கரிடவாசலிலே வாசற்படிமீதில்வைத்தார்
மழுவுமதுதானுருகி வாசற்படியாச்சுதங்கே
அக்கிரமவேளையிலே ஆனைமுகர்கோவிலரும்
அப்போதுபாண்டியர்களாக்கினையேதுசொல்வார்

### கோவிலற்கு ஐந்தாவது பானைசத்தியம் செய்தல்.

பானைகல்லசத்தியந்தா னடைவாகச்செய்யுமென்றார்
மாரளவுபள்ளம்வெட்டி மன்னவனைத்தானழைத்து
செவ்வினைநீர்காட்டிவைத்தார் செட்டிபின்னைசத்தியமா
பள்ளத்தில்குத்தவைத்து சாலெடுத்துமூடிவிட்டார்
ஆனையைத்தானத்தினார்க ளானைமுகர்கோவிலர்மேல்
அப்போதுகோவிலரு மழுதுபுலம்புகிறார்
ஆனையதுவிட்டவந்து ஆனைமுகர்கோவிலனை
கும்பல்தனத்தில்வைத்து உத்துகளைந்தங்கே
இவர்-ஆனையின்மேலேறி அங்குசக்கோல்கைபிடித்து
கோலம்வருகிறாரே கோவிலச்செட்டியாரும்
இராசகன்னிவீதியிலே வலமாகவரும்போது
அப்போதுகோவிலர்க்கு ஆனைக்குதானெழுந்து
உப்பரிகைமேலேறி புத்தமியும்பார்க்கலுற்றாள்
பார்த்தழுகலுற்றாள் பைங்கொடியாள்ராசகன்னி
அந்தச்சமயத்திலே ஆறுயிரம்பாண்டியர்கள்
உப்பரிகைமேலநின்ற உத்தமியைக்கண்டுவிட்டார்
கோபம்வருகுதங்கே கொற்றவர்கள்பாண்டியர்க்கு
ஆனையின்மேல்வாரவனை அட்சணமேதானிறக்கி
பாசக்கயிறுலே பக்குவமாய்கட்டுமென்றார்
மழுவாசனையழைத்து மன்னவனைவெட்டுமென்றார்

அப்போதுகோவிலனுர் ஆனைமுகனோதுசொல்வார்
அன்னீதமாய்வெட்டச்சொன்னீர் மழுகாணபாண்டியனே
ஒருவன்பழிக்குநானூ உலகம்பழிவாங்கி
மதுரையைகொளுத்திடுவேன் மன்னர்களைக்கொன்றிடுவேன்
கர்ணகியாள்வந்தாலே கண்டதுண்டஞ்செய்திடுவேன்
என்றுமந்தக்கோவிலனு மெடுத்துரைத்தாராங்கோம்

கோவிலனைவெட்ட மழுவாசர் கொண்டுவருதல்.

அப்போதுமழுவாசர் அம்பாகக்கொண்டுவந்தார்
அப்போதுமழுவாசர் கோவிலருக்கேதுசொல்வார்
வெட்டமனமுமில்லை விசியபோபோய்விடுக்காக
அப்போதுகோவிலரும் ஆனைமுகனோதுசொல்வார்
சிலம்புகொண்டுவந்த திருடனென்றுபெயராச்சு
காற்சிலம்புதிருடிவந்த கள்ளனென்றுபெயராச்
சென்னை-கொன்றுவிடுமென்றூராங் கோவிலருமப்போது
மாட்டோமென்றுபின்னிடைய மழுவாசரோடிப்போனும்
அந்தக்குளத்திலே ஆனைமுகன்போயழுந்தி
சொக்கரையும் அம்மனையும் தோத்தரித்தாரப்பொழுது

கோவிலற்குமீனாட்சிவந்து பூர்வக்கியானம் சொல்லுதல்.

அங்கயற்கண்மீனாட்சி ஆரணங்குமோடிவந்து
கோவிலன்முன்பாகக் கொடியிடையும்வந்துநின்றாள்
மீனாட்சிதன்னைக்கண்டு மொத்தவழுதாரம்
ஏனப்பாவழுகா பெண்மகனேகோவிலனே
ஜாதகமும்பொய்யாது கல்விதியுந்தப்பாது
உனக்கென்னவாவேண்டும் என்னைநீகேளுமென்றாள்
மாலையிட்டுமூலைவைத்தேன் மருவிச்சுகமறியேன்
கூறையிட்டுமூலைவைத்தேன் கூடிச்சுகமறியேன்
வீணுக்குமாலையிட்டு விருதாபறக்கலானேன்
தாலிபறிபோகுதே தலைவனிங்கேமாளுறேனே
இந்தவசனமுமே வேந்திழையாள்தானகேட்டு
அவளுனக்குதாயல்லவா நீயவட்குபிள்ளையல்லோ
பதினுறுவயதுதன்னில் மாளவேநீபிறக்காய்
கற்பாவைக்கென்றுசொல்லி கட்டமுகாநீவளர்ந்தாய்
சாதகமுமதப்பாது நல்விதியும்பொய்ப்பாது
நீ-முன்பிறப்பில்வாணியன் மாதவியும்பெண்சாதி
கர்ணகைகாளியப்பர் கட்டமுகாயெனழுதாய்
ஒருவன்பழிக்குமவ ளுலகம்பழிவாங்கவந்தாள்
உமைதன்பழிக்கு மதுரைபழிவாங்கவந்தாள்
இப்படிக்குசொல்லையிலே ஆனைமுகர்கோவிலரும்
அப்போது-மீனாட்சிதனைப்பார்த்து கோவிலருக்கேட்கலுற்றான்
கர்ணகைமீனாட்சி கட்டமுகியானையிட்டேன்
ஆனைவிடுதல்பண்ணும் ஆனைமுகமீனாட்சி

ஆணையிட்டேன் தோஷமில்லை யென்றாளே மீனாட்சி
செத்தாலுங் கயிலாசஞ் சிவன்பாதஞ் சேரவேண்டும்
மாநிலையை யென்னுடனே யுடன்பட்டுச் சேர்க்கவேண்டும்
எனக்குமந்தாரமிருக்கும் பதவிகொடுக்கவேண்டும்
அப்படியே தருவேனென் றாளருக்கினியாள் மீனாட்சி
அப்போது மீனாட்சி யம்மனுந்தான் மறைந்தான்
காளிகோவில்முன்பாகக் கட்டமுசர்வந்துநின்று
பழுவாசனைப்பார்த்து வாருமென்றுதானழைத்தார்
தலைவெட்டுமென்றுசொன்னார் தயவுடனே கோவிலரும்

பழுவாசர் கோவிலை வெட்டுகின்றது.

வாளெடுத்துவீசினார் பழுவாசரப்போது
மலைபாய்விழுந்தது வர்த்தம்கன் முதலிலேதான்
வாகோமென்னவே முன்போட்டு மன்னர்களோடிவிட்டார்
அப்போதுகோவிலதை மண்முகரோதுசெய்தார்
சர்னகைவருவனவும் சத்திருக்களென்றுடலே
சற்பானைதன்னை நீக்கள் கட்டமுகாகரத்திருக்கள்
இச்சகாயமது செய்கனுக்குச்செய்யுமென்றார்
பத்தினியைக்காவிலைக்கு பாலவுந்தானெடுத்தார்
உச்சியழிசிலே புத்தமன்னர்துலைத்தான்
பத்தினிமெய்யானுல் பார்க்கவேவேண்டும்
பத்தினியாள்பேனைச்சொல்லப் பார்க்கவேவேண்டும்
ஒன்றாயிருந்தவர்தா னிரண்டாய்ப்பிளந்துகொண்டார்
காளைவெட்டிசாய்ந்ததுபோல் பாறையின்மேல்தான்விழுந்தார்
மாண்டுமடிந்தாரே வடிமுசர்கோவிலரும்
சொக்கரிடத்திலே சேர்ந்தாரம்பதுக்குசுகம்
தங்கச்சிமிழ்களிலே தானடைத்தார்சொக்கலிங்கம்
அப்போதும்பழுவாச சனைமுகரோதுசெய்தார்
காகம்பாவாமல கமுகுகண்டாமல்
கல்லால்பாணைகட்டி காத்திருந்தாரேழுபேரும்

கோவில்துதிரம் சமயிலனைவோரும் பொட்டிடுதல்.

அதிலேயொருமன்னவன்தா னுணமுகநேடிவந்தான்
பாண்டியர்கள்முன்னேவந்து பாக்கரவே துலைப்பான்
வாருமடிதாங்கிரும் மன்னவர்க்குகாட்டினானே
ஆருக்கொருதிலாத மன்னிரிட்டாராசாக்கள்
வஞ்சிபத்தனோடிவந்து வாரிவாரிதான்குடித்தான்
எங்களுக்குதியாகம் குடுமென்றான்வஞ்சிபத்தன்
காலாய்த்தினத்திலே வாருமென்றார்மன்னவர்கள்
அப்படியேசம்மதித்து அரண்மனைக்குப்போனான்காண்
வஞ்சபத்தன்போனபின்பு மன்னவர்கள் காரிருந்தார்

மதுரையில் பாண்டியர்கள் அரசுகுறிகாணுதல்.

அப்போதுமதுரையிலே அரசுகளாறுகளிலே
கல்மழைபெய்யுதங்கே கனத்தமதுரையிலே

இரத்தமழைபெய்யுதங்கே கோணமதுரையிலே
கோட்டையிடியுதங்கே கொத்தளம்சாயுதங்கே
பட்டத்துக்கோட்டைகளும் இருகுறபாரமதுரையிலே
கழுகுகளோலமிட்டுக் கதறிடுதங்கே
அப்படிமதுரையிலே அரைகுணக்[illegible]றுதங்கே

பாண்டியர்கள் பயந்து மதுரையில் திட்டஞ்செய்தல்.

அந்தச்சமயத்தில் அனைவர்பாண்டியர்கள்
காதுகோட்டைவாசல்களும் கழுகுடனோசர்த்தமென்று
சாதிக்கலைந்து தான்பூட்டிவையுமென்று
அப்படியேசெய்தார்கள் அந்தமதுரையிலே
தன்பேருபோட்டுவைத்தார் தனிமதுரைப்பட்டணத்தில்
என்னவென்றுதன்பேரு போட்டுமென்றார்பாண்டியர்கள்
கோவிலைக்கொண்டேனென்று கொற்றவர்கள்சொன்னது
கைக்காட்டிக்காட்டினன் கலைதனித்திடுவோம்
வாயாலேசொன்னாலே வாயைத்தறித்திடுவோம்
அண்டைவாசல்கூட ஆராவதுபோனால்
அவர்கள்தலையும்போமென்று தமுக்கடியும்
இப்படிச்சொல்லி தமுக்கடித்தார்பட்டணத்தில்
மதுராபுரிபட்டணத்தில் மகாஜனங்கள்தவிக்கவும்
சாத்திக்கதவடைத்து தான்பூட்டிமறைத்தார்
தக்கதங்கள்மாளிகையைச் சாத்தியிருந்தார்
இப்படியாகயிருக்குமந்தவேளையிலே
மாமதுரையிலே வாழ்ந்திடைச்சிதன்மனையில்
ஆச்சிமாதம்மனையில் ஆனைக்குகள்ளையும்
பஞ்சவர்ணமெத்தைதனிலே படுத்திருக்கும்போதையிலே

கண்ணகை சொப்பனங்கள் காணுதல்.

அவர்-கண்ணகைதனிப்படி காணுகின்றசொற்பனங்கள்
பெட்டியுடையக்கண்டாள் பூவாடைக்கண்டாள்
நெற்றிமைத்திலகங்க இருளடைந்தபோகக்கண்டாள்
ஒற்றியைதான்தனத்தா ஐயிபோநிறக்கண்டாள்
தேகாயுடையக்கண்டாள் செம்புகலசக்குறைபடக்கண்டாள்
வாடாதமல்லிகைப்பூ வாடிகருகக்கண்டாள்
அட்டகுருசெக்கரசெவல் அணிமதுரைபிடிபக்கண்டாள்
வாழ்மதுரைப்பட்டணத்து மதில்இடியக்கண்டாளே
உன்னுதிரம்போதநாவல் உடையக்கண்டாள்கனவிலும்
அருகுதனிலும் அக்கழுதியக்கண்டாள
கொண்டைக்கொடக்கண்டாள் கொண்டைபூவாடக்கண்டாள்
மாங்கல்யந்தான் மணவாளனார்கண்டாள்
முன்னாடிதியாகள் முகத்தமிட்டமணியும்
கடகமுனைதனிற கண்டாளேகனவையும்
கொலுமைத்தாவடமும் கொலுகழுதிரக்கண்டாள்
வயிரமணிதாமறந்து வண்டுக்கொலுகக்கண்டாள்

உட்மெழுந்துமணிரமணி வருவிழக்கண்டாளே
மஞ்சளழியக்கண்டாள் மணமழிந்துபோகக்கண்டாள்
தாலிபறிபோகக்கண்டாள் நிலைமைக்கேடமாகக்கண்டாள்
மாலைபறிபோக மணவாளன்மாளக்கண்டாள்
காளியம்மன்கோவில்முன்னே கண்டாண்டஞ்செய்யக்கண்டாள்
கொலைவெட்டிசாய்த்ததுபோல் கோவிலைச்சாய்க்கக்கண்டாள்
மரம்வெட்டிசாய்த்ததுபோல் வர்த்தகனைசாய்க்கக்கண்டாள்
கைகேவெட்டியங்கே கற்பாறைமேல்சாயக்கண்டாள்
அவர்வுதிரம்பலபலென வுதிரவாய்ப்பூச்சொரிய
இரத்தம்பலபலென்ன யிரத்தவாய்ப்பூச்சொரிய
சிறுகுடலும்பெருகுடலும் சிதறிவிழக்கண்டாளே
மணிகுடலும்பெருகுடலும் மண்மேல்விழக்கண்டாள்
இப்படியாய்ச்சொற்பனங்கள் கண்டாளேசர்னகையும்
சொற்பனங்கண்டுமவள் அடி அடித்துத்தாவெழுந்தாள்
ஆச்சிமுகம்பார்த்து ஆனைமுகியேதுசொல்வாள்
மதுரைக்குப்போனவிடத்தில் மாண்டாரேயென்கணவன்
சிலம்புவிற்கப்போனவிடத்தே செத்துமடிந்தாரென்
மதுரைக்குப்போனவிடத்தே மாண்டுமடிந்தார்கள்
அவர்-மாண்டபடுகளத்தில் மயிலினியாள்போகவேண்டும்
செத்தபடுகளத்தை தேன்மொழியாள்காணவேண்டும்
கொன்றவனைக்காணவேண்டும் கொடியபழிவாங்கவேண்டும்
மாண்டவனைக்காணவேண்டும் மன்னர்கிளைக்கொல்லவேண்டும்
ஒருவன்பழிக்காக உலகம்பழிவாங்கவேண்டும்
மன்னன்பழிக்கு மதுரைபழிவாங்கவேண்டும்
மார்க்கண்டம்துடிக்குதிங்கே மணவாளன்மாண்டிருக்க
அவர்மாண்டபடுகளத்தில் மயிலனையாள்போய்வாரேன்
செத்தபடுகளத்தில் தேன்மொழியாள்போய்வாரேன்
போகவிடைகொடம்மா போய்வாரேன்தென்மதுரை
என்றுவெழுந்திருந்தா ளேந்திழையாள்கர்னகியும்
ஆச்சியம்மான்தான்பார்த்து அரிவையருக்கேதுசொல்வார்
அடைக்கலமாயுன்னைவைத்து அணியணியாய்போனாரே
செஞ்சிலம்பைவிற்பதற்கு தென்மதுரைபோனாரே
சிலம்பைபயவர்விற்கக்கொண்டு செட்டியாரிங்கேவர்த
கர்னகையாளைக்கேடென்று கட்டழகிகேட்டாலே
அதுக்கென்னாதுணைப்பேனா னைக்கேள்கர்னகியே
நீபோறகாரியத்தை நான்போய்ச்செய்துவாரேன்
நான்போய்வாரேனென்றாள் எழுமடவாள்விடைச்சி
அவருடையசேதிதனை அறிந்துகொண்டுவாரேனென்றாள்
புருஷனிடசேதியெல்லாம் போயறிந்துவாரேனென்றாள்
வீட்டிலிருமென்றாள் மெல்லியிடைச்சியவள்
என்னத்திருவேயல்லோ மதுரைக்குப்போராயென்றாள்
பாதுமோர்விற்கப்போறேன் பட்டணத்திலென்றுசொல்லி

பால்விற்றுப்போலேயவர் சேதியறிந்துவாரேன்
என்றந்த ஆய்ச்சிசொல்ல யேதுசொல்வாள் கர்ணகியும்
அப்படியேபோவாயானால் வருஞ்சேதிசொல்லுகிறேன்
வெறும்பானைவெறுங்குடம் வெள்ளியபோட்டியெடுத்து
ஆற்றிலேதான்முழுகி அரிவையரோக்கினைத்தால்
அந்த அறைதனிலே அடைபானபானையிலே
அந்த அறைதனிலே அஞ்சுவிதமுண்டாகும்
அதன்விலைகூறி அவ்விதமாய்விற்றயானால்
அவர்சேதிதான்தெரியும் ஆனைக்கேழுக்கனுக்கு
என்றந்தகர்ணகையும் எடுத்துரைக்கவாய்ச்சியர்க்கு
நல்லதென்று ஆய்ச்சியவள் நலமாகச்சம்மதித்து
அப்படியேபோவேனென்று ஆரணங்குவாராளே

## இடைச்சி மதுரைக்குச் செல்லுதல்.

தயிர்பானைதானெடுத்து தையலரும்வாராளே
ஆற்றில்முழுகினாளே ஆரணங்குவாழ்இடைச்சி
பானைகளும்புலன் பக்குவமாய்ப்பாவைத்து
அஞ்சுகைஜலமெடுத்து அரிவையரும்விட்டாளே
அஞ்சுவிதமாக்க அரிவை புடமிருமையபடலே
பால்மோர்தயிர்வெண்ணை பக்குவமாயுண்டாச்சு
பத்திபாசொல்லி பக்குவமாய்கருவித்து
கட்டுச்சிபிறைனெடுத்து சிமமாடுதோளிலேவைத்தாள்
பால்கூடைதூக்கியெடுத்து புரங்காக்கருதினாளே
மதுரைக்குளாகவேலோ மயிலண்ணயாள்வாராளே
காலுகோட்டைவாசல்களும் நலமாகசாத்திருக்கும்
தெற்குதல்லவாசலிலே தேன்மொழியும்வந்தினாள்
அங்கிருக்கும்சேவகர்கள் ஆணழகாதான்பார்த்து
வழிமையமறித்தவர் போகாதேயென்றுசொன்னார்
அப்போதவள்சொல்லி ஆரணங்குடன்நுழைந்தாள்
மதுரையாதியக்குடும் சாற்றிமிருக்குதுகாண்
கர்ணகைசொன்னது மெய்யென்றுபெண்ணியவள்
என்னவென்றுசகவுழுந்தேனுழையாள் மதுரையிலே
ஒருபடிமுத்தளக்கால் ஒருஉழக்குசெய்வார்ப்போல்
இரண்டுபடிமுத்தளந்தா லிரண்டுழக்குசெய்வார்ப்போல்
மூன்றுபடிஜலம்கொடுத்தால் மூன்றுழக்குசெய்வார்ப்போல்
நாலுபடிஜலம்கொடுத்தால் நாலுழக்குதயிர்வார்ப்போல்
இப்படிக்குதன்விலை கூறியவள்வாராளே
மதுரையிலுள்ளபெண்கள் தயிர்கொள்ளவாரார்கள்
தயிர்பாலுமோருங்கொள்ள தையலரும்வாரார்கள்
ஆச்சிமுன்னேவந்து அதைவாங்கிநின்றார்கள்
அவர்கள்மனதின்படி அதைவாங்கிநின்றார்கள்

## இடைச்சி மதுரைக்குவந்து கோவலர் சங்கதியறிதல்.

அதிலேயொருத்திதன்னை அன்பாகத்தானழைத்து

மதுரைபிறந்ததென்று மர்மமெல்லாம்சொல்லுமென்றான்
ஆரோகணமாம் அழிமதுரைசேதுவந்தால்
சிலப்புதெருவிலே [illegible] கொட்ட பின்னை கோவிலார்
சிலைப்பறித்துக்கொண்டு திருடனென்று சொல்லிவிட்டார்
மாண்புமிக்காரும் மடிவழக்கல் கோவிலாரும்
அவன்மாண்டதின்பிறகு மதுரையெல்லாம் [illegible]
என்றுமவன்சேதி எடுத்துரைத்தார்கள்
அவ்வார்த்தைதான்கேட்டு அழுதவாறவள் இடைச்சி
மதுரையைவிட்டகன்று மாட்டிடைச்சியவளாமே
மாட்டுக்காரபிள்ளைகளை மயிலினையாள்தான்பார்த்து
செட்டியார்பிள்ளைகள் எங்கேயென்றுதான்கேட்டாள்
காளியம்மன்கோவிலுள்ளே கண்டதுண்டமாய்செய்தார்கள்
திருப்பரங்குன்றக்காடு செல்லக்காளிகோயிலம்மா
வெங்கலப்பாறையிலே வெட்டிவைத்தார்கோவிலார்

இடைச்சி கோவிலர் பிள்ளைகளைக் கண்டு புலம்பல்

அவ்வசனந்தான்கேட்டு அழுதுகொண்டுபோனாளே
பிள்ளைகளைத்தேடியல்லோ பாறையருகில்வாராளே
மாண்டிருக்கும்பிள்ளைகளைத்தை மயிலினையாள் தான்பார்த்து
செத்திருக்கும்பிள்ளைகளை செண்பகப்பூவாள் தான்பார்த்து
தன்மாட்டில்கறந்து தயிர்ப்பானைபோட்டுடைத்தாள்
தயிர்ப்பானைபோட்டுடைத்து தாவியழுதாளே
[illegible] எடுவாரும் [illegible]
அப்போதுசொன்னாளே ஆணைக்குவந்[illegible]
போகாதேயென்றாளே பேச்சுத்தள்ளியேபோ
பேச்சுத்தள்ளியதினில் பெருமையோசம்பத்துபோதாதாம்
வார்த்தைதள்ளியதினில் [illegible]
என்றுசொல்லியிடையாள் கோத்திரம்பார்வழியிடைச்சி

இடைச்சி அழுததினால் ஆவின பாதர்மூன் சொல்லுதல்

அழுதகுரல்கேட்டு மழுவாளசோதியுடன்
கட்டிக்கொண்டுவாரதுகள் தமையனாகர்மூன்னே
பாண்டியர்கள்தான்பார்த்து பாறையருகே நின்றுசொல்வார்
என்டியழுதாயென்று இனிதாகக்கேட்டார்கள்
கைதவறிப்பானை தன்னை கவிழ்வுடைத்துவிட்டேன்
பாலுக்கழுவில்லை பாண்டியரேயென்றுரைத்தாள்
தயிருக்கழுவில்லை தயிர்ப்பானைதனக்கழுதேன்
மோருக்கழுவில்லை மோர்ப்பானைதனக்கழுதேன்
என்றுமவள்சொல்லுதலே பாண்டியர்களே சொல்வார்
மண்பானையில்லையோ பொருமோ பொன்குடமெத்தனையும்
உறக்கபெற்றவில்லைபொருமோ [illegible]
மண்ணுடைந்துள்ளிப்போகட்டும் பட்டணத்துவரையாள
[illegible]

என்றுமிகச்சொன்னனே பேத்திழையாள்வாழ்மிடைச்சி
மண்ணைவாரி தூற்றிவிட்டு மயிலனையாள்வாராளே

இடைச்சி கண்ணகிக்கு மனைதேற பலசரக்கு கொண்டுவருதல்.

இன்னகடைதேடி தேன்மொழியாள்வாராளே
கண்ணகிக்குவேண்டுமென்று எல்லெண்ணைவாங்கலுற்றாள்
கோடிபுடவையொன்று கொம்பனையாள்வாங்கலுற்றாள்
கம்பியுடன்கோடிசீலை கண்ணகிக்குவாங்கலுற்றாள்
பாக்குபைமஞ்சளும் பத்தினிக்குவாங்கலுற்றாள்
சீப்புசிக்கல்கோனுமது தேன்மொழிக்குவாங்கலுற்றாள்
மல்லிகைப்புட்பமது மயிலனைக்குவாங்கலுற்றாள்
மாங்கனியுந்தேங்கனியும் மயிலனைக்குவாங்கலுற்றாள்
கல்லெண்ணைசீக்காயும் காயமிக்குவாங்கலுற்றாள்
மஞ்சள்மருக்கொழுந்து மயிலனைக்குவாங்கலுற்றாள்
இத்தனையும்வாங்கிக்கொண்டு ஏந்திழையாள்வாராளே
மாதுமதனைக்கு வாழ்மிடைச்சிவாராளே
அந்தச்சமயத்தி லருங்கிளியாள்கண்ணகியும்
அடுக்காய்சமையல்செய்து ஆரைக்குழம்புவைத்தாள்
வரும்வழியைப்பார்த்திருந்தாள் மயிலனையாள்கண்ணகியும்
அந்தச்சமயத்தில் ஆச்சியம்மைவந்துவிட்டாள்
திண்ணைக்கடையிலுட்கார்ந்தாள் தையலிடைச்சியவள்
கண்ணகியாள்முன்னேவந்து காரிழையாளேநீசொல்வா
மதுரைக்குப்போனவே வர்த்தகர்சேதியென்ன
தென்மதுரைபோனதொரு சேதியென்னசொல்லுமென்றாள்
மாண்டார்மடிந்தாரோ வடிவழகர்சேதியென்ன
தெரியவேசொல்லுமென்றாள் தேன்மொழியாள்கண்ணகியும்
அப்போதுவாழ்மிடைச்சி அருங்கிளிக்கேதுசொல்வா
மதுரைக்குப்போனவிடத்தில் வர்த்தகரைக்கண்டிலேன்தான்
தென்மதுரைப்போனபின்பு செட்டியாரைக்கண்டுவந்தேன்
கண்டுவந்தேனென்றுமைத்த கட்டழகிதானுரைத்தா
என்னசொன்னாரென்னவென்று கண்ணகிகேக்குதுமென்று
கோடிபுடவையது கொற்றவரைக்கேட்டையாம்டீ
வாங்கிக்கொடுத்தாரோ வடிவழகர்கோவலரும்
பாக்குமஞ்சள்வெற்றிலையும் பாவையளேகேட்டையாம்டீ
அதுவுங்கொடுத்தார்காண் ஆணழகர்கோவலரும்
கல்லெண்ணைசீக்காயும் கையாகத்தான்கொடுத்தார்
இத்தனையுமகொடுத்தாரென்று எடுத்துரைத்தாளாச்சியம்மாள
கண்டவுடனேயவள் கதறியழுதாளே
மாமிவிட்டகணமுதலாய் வாங்கிக்கொடுத்ததில்லை
செத்ததின்பிற்பாடு சீரனுப்பிவைத்தாரோ
ஆருக்குவற்றுமது ஆணைக்குமாதவிக்கு
அவருக்குவற்றுவளாம் ஆணைக்குமாதவியும்
அவருக்குவற்றுமது அலிவைக்குக்கேற்காதென்றாள்

புருஷன்படுகளமே போகிறேனென் றுரையெழுந்தாள்
மாளவில்லையுன்கணவன் மயிலனையேகர்ணகியே
என்றுமிவள்சொன்னாளே எந்திழையாள்வாழ்விடைச்சி
சாதத்தைதப்போட்டு மையவரைச்சாப்பிடென்றாள்
இவள்பிடித்தபிடிசாதம் புழுவாய்சொரியுதங்கே
அப்போதுகர்ணகியா ளாரணங்கேதுசொல்வாள்
மாண்டதுமெய்தான்காண் வடமதுரைபட்டணத்தில்
என்றுமிவள்சொல்லையிலே எந்திழையாளென்னசொல்வாள்
பாலகிலுங்குடித்துப் பசியாறுவோமென்றுசொல்லி
செம்பிலேப்பாலும் தோசையுங்குத்தான்கொடுத்தாள்
செம்பில்வைத்தநற்பாலும் சிழுரத்தமாச்சுதப்போ
கர்ணகியுந்தான்பார்த்துக் கன்னிமனமுனொந்து

கர்ணகி இடைச்சிவீட்டை கோபத்தினாலே எரித்துவிட்டது.

அப்போதுகர்ணகியா ளாரணங்குதான்பார்த்து
எனக்குப்பொய்சொன்னயிந்த இடைச்சிவீடுவேகவேண்டும்
கைமுரித்துசாபமிட்டாள் சட்டமுங்கர்ணகியாள்
கொந்துபற்றிஎரியுதங்கே கட்டமுங்கிடந்துதான்
வெந்துபற்றிஎரியுதங்கே வாழ்விடைச்சிவீடுமங்கே
அப்போதுவாழ்விடைச்சி அலறிகொண்டோடினார்கள்
கர்ணகிகாலிலே சடுக்கெனவேபோய்விழுந்து
புத்தாதபத்தினியே பழுதுபடாரத்தினமே
குடியிருந்தவீட்டில் கொள்ளிவைக்கலாமோபெண்டே
உண்மையாய்ச்சொல்லுகிறேன் உத்தமியேயுந்தனுக்கு
செத்ததில்லைபோனாரோ செட்டிபிள்ளைகோவலனார்
மாண்டதுமெய்தான்காண் மயிலனையேகர்ணகியே
ஆறுபத்துநாறுபிழை அடியாள்செய்தவுபசாரம்
கோடிதப்புமனம்பொறுத்து கொண்டருளக்கவேணுமம்மா
அப்போதுகர்ணகியா ளவள்மேல்மனதிரங்கி

கர்ணகி இடைச்சிவீட்டை யுண்டுபண்ணி மதுரைக்கு வருதல்.

எப்போதும்போலந்த இடைச்சிவீடுகண்டாச்சு
கூந்தல்விரித்தாளே கொம்பனையாள்கர்ணகியும்
எல்லாருந்தலைகூந்தல் ஒருபாகமிருபாகம்
கர்ணகிதலைகூந்தல் அறுபத்துமூன்றுபாகம்
அறுபத்துமூன்றுபாகம் அழகுள்ளபொற்கூந்தல்
கூந்தல்விரித்து கொடியிடையாள்வந்தாளே
மன்னவன்படுகளத்தே கர்ணகியும்வாராளே
காடுசெடிதாண்டி கடுகெனவேவாராளே
கல்லென்றகாடும் செடியும்வனந்தாண்டி
குளமூன்றுகாரைமூன்றுந் தொடைப்புகுந்திப்போதுமப்பா


P. V. Press, Madras:—1929

காரைமுள்ளுஞ்சூரைமுள்ளுங் கடுகெனவேதைக்குதுபார்
துறட்டுமுள்ளுதைக்குதுபார் துணியைக்கிழிக்குதுபார்
செடிக்கொருமயிராதுதான் சிக்குபட்டுவாராளே
ஐயோசிவனேயென்று அழுதுகொண்டுவாராளே
கொக்குக்குருவிகளா கோவிலரைக்கண்டதுண்டோ
காட்டானைபுலியினமே கண்டதுண்டோகோவிலரை
சிங்கங்கரடிகளே செட்டியாரைக்கண்டதுண்டோ
செக்கச்சிவந்தழகர் செங்கீரைத்தண்டழகர்
பார்க்கஅழகுடையார் பாக்குமெத்ததின்பவர்காண்
செஞ்சிலம்புகொண்டுவந்த செட்டியாரைக்கண்டதுண்டோ
அங்கிருக்குமிருகமெல்லா மரிவையருக்கேதுரைக்கும்
நேற்று-போம்போதுகண்டதுண்டு வரும்போதுகண்டதில்லை
என்றுசொல்லிகர்ணகியும் ஏந்திழையாளப்போது
அப்போதுநான்சொன்னே னணிமதுரைபோகாதேயென்று
என்-வார்த்தைதள்ளிபோனதினால் வகைமோசம்வந்ததுவே
பேச்சுதள்ளிபோனதினால் பிழைமோசம்வந்ததுவே
செத்தபடுகளந்தான் தேன்மொழியாள்நானறியேன்
நீ-மாண்டபடுகளந்தான் மயிலனையாள்நானறியேன்
மாட்டுகாரபிள்ளைகளை மயிலனையாள்கண்டுவிட்டாள்
மாடுமேய்க்கும்பிள்ளைகளா மாட்டாங்கோல்தம்பியரே
என்-ஆளன்படுகளத்தை அரிவையற்குசொல்லுமென்றாள்
புருஷன்படுகளத்தை பொற்கொடிக்குசொல்லுமென்றாள்
என்னத்துக்காககேட்டீர் இளங்கொடியேசொல்லுமென்றார்
மதுரையைதான்கொளுத்த மயிலனையாள்போறேனென்றாள்
நெருப்புகொண்டுபோறீரோ நேரானதென்மதுரை
வாயாலேசொன்னாலே மதுரையதுவெந்துவிடும்
அப்போதுபிள்ளைகளும் அருங்கிளிக்கேதுசொல்வார்
இளைப்பாயிருக்குது எங்களுக்கென்றுசொன்னார்
பசியிளைப்பைதீர்த்துவிட்டால் படுகளத்தைசொல்லுகிறோம்
அப்போதுகர்ணகியா ளரிவையருமேதுசொல்வாள்
எப்படிக்குச்சாதம்நான் இயலாகச்சமைப்பேனென்றாள்
எப்படிக்குத்தென்மதுரை இனிதாய்க்கொளுத்துவாயோ
அப்படிக்குச்சாதமது அடைவாகசமையுமென்றான்
அப்போதுகர்ணகியா ளாரணங்குதான்பார்த்து

### கர்ணகி மாட்டுக்காரபிள்ளைகளுக்குச் சாப்பாடிடுதல்.

பத்தினிசொருபத்தை பசங்களுக்காட்டவென்று
ஆற்றுமணலெடுத்து அரிசிகளையுண்டுபண்ணி
காய்கறிகளுண்டுபண்ணாள் கன்னியிளங்கொடியாள்
பானைசட்டியுண்டுபண்ணாள் பாவையருமப்போது
காய்கறிபதார்த்தங்கள் கட்டழகிதான்சமைத்தாள்

இலைபறித்துவாங்களென்று ஏந்திழையாள்சொன்னாளே
தடதாரிதானுருவி மடிதனிலேகட்டிக்கொண்டு
ஆளுக்கொருகலப்பை அவர்களெடுத்துவந்து
அவள்முன்னேவைத்தார்கள் கட்டழகிபாலரெல்லாம்
இதுதானோஇலையென்று ஏந்திழையாள்கேட்கலுற்றாள்
அதைவிடவேறேயில்லை யென்றுமேதானுரைத்தார்
ஈருக்குயெங்கேயென்று இளங்கொடியாள்கேட்கலுற்றாள்
கலப்பையைமுன்னேவைத்தார் கட்டழகரப்போது
பத்தினியாள்தான்பார்த்து பாவையருமேதுசொல்வாள்
கையலம்பிக்கொண்டு கட்டழகாவாங்களென்றாள்
மடியிலிலைகளெல்லாம் வகையாகப்பரப்பிக்கொள்ளும்
அப்படியேபரப்பிக்கொண்டா ரந்தநல்லபிள்ளைகள்தான்
பத்தினியுமெய்யானு லிலையொன்றாயாகவேணும்
என்று-கர்னகியாள்சொல்லையிலே கலந்தநிலைகளெல்லாம்
சாதங்கறிவகைகள் சட்டமாய்வட்டித்தாளே
போசனமுண்டுமவர் புண்ணியனார்தாமெழுந்து
இப்போதாகிலும்சொல்லும் என்கணவன்படுகளத்தை
பலகாரந்தந்தாலே பக்குவமாய்சொல்வோமென்றாள்
ஆற்றுமணலெடுத்து ஆளுக்கொருபிடிகொடுத்தாள்
அவளுடையசத்தியந்தான் அவனுங்கடலையாச்சு
அப்போதுபிள்ளைகளும் அன்பாகத்தான்பயந்து
செம்பருந்துங்கரும்பருந்தும் சேர்ந்துபறக்குதங்கே
மாமரச்சோலைகளும் மருதிலுப்பைச்சாலைகளும்
திருப்பரங்குன்றங்காடு தெய்வகாளிகோவிலண்டை
அடக்கல்சகடப்பாறை அச்சமில்லாதச்சக்கொம்பு
உய்யகொண்டால்பாதையது வுயர்ந்தமலைகளது
இரணிபுத்துபரணியின் இருபிளவாய்செத்தார்கள்
இருபிளவாய்செய்திடத்தில் மறுபிளவாய்செய்தார்கள்
தோற்றுதுபடுகளந் தோகையரேபாருமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அலறிகொண்டுவாராளே
காட்டேரிதுர்க்கையைப்போல் கன்னியரும்வாராளே
தலைவிரித்துகொண்டுமவள் தார்குழலாள்வாராளே
கர்னகிவருகிறதை கண்டார்மழுவரசர்
பாளைவிட்டுகீழிறங்கிப் பக்குவமாயோடிவாரார்
அந்தச்சமயத்தில் அருங்கிளியாள்வந்துவிட்டாள்

கர்னகி இறந்துபோன தன் புருஷனைக்கண்டு புலம்பல் கண்ணி.

வந்தாள்விழுந்தாள் புரண்டழுதாள்
ஐயோசிவனேயென் றழுதுமாரடிப்பாளாம்
தக்கோலந்தின்னும் தனிவாயைக்கண்டு
முத்தங்கொடுத்தவள் மோதியழுவாளாம்

வெற்றிலைத்தின்னும் வெல்வாயைக்கண்டு
முத்தங்கொடுத்தவள் மோதியழுவாளாம்
கற்பூரந்தின்னும் கனிவாயைக்கண்டு
முத்தங்கொடுத்தவள் மோதியழுவாளாம்
சுத்திவருவாளாம் சுழன்றுவருவாளாம்
துக்கம்பெருகியவள் மாரடிப்பாளாம்
பற்றிவருவாளாம் பறந்துவருவாளாம்
பக்கத்தில்நின்றவள் மாரடிப்பாளாம்

வேறு,

இப்படியாக இளங்கொடியாள் தானழுதாள்
யாரைக்கென்றுசொல்லி பட்டணத்தில்நீர்வளர்ந்தீர்
பாறையுறுத்தலையோ பட்டணத்தார்கோவிலரே
கற்பாறையுறுத்தலையோ கட்டழகாவுந்தனுக்கு
மாதகியாள்பஞ்சணையில் மயிரிருந்துருத்துதென்று
கட்டிவைத்துதானடித்தீர் கட்டழகர்வர்த்தகரே
பொற்பாறையுறுத்தலியோ புண்ணியரேயுந்தனுக்கு
நீ-மாளவயதல்லவே மாண்டிருக்கநாளல்லவே
நீ-இறக்கவயதல்லவே இறந்திருக்கநாளல்லவே
பார்த்தால்பிராயமது பதினாறுக்குள்ளாகும்
எண்ணாற்பிராயமது இருபதுக்குள்ளாகும்
இந்தவயதிலே இனிமாளநீதியுண்டோ
அஞ்சுவயதுதானறியாதநாளையிலே
மாலையிட்டுமூலைவைத்து மாதகியாள்வீடுவந்தீர்
கூறையிட்டுமூலைவைத்து கூத்தியிடம்போய்ச்சேர்ந்தீர்
பன்னிரண்டுதன்வருஷம் பரஸ்திரியாள்வீடுவந்தீர்
அவளிடத்திலிருந்ததுபோல் என்னிடத்திலிருப்பீரானால்
கொள்ளிவைக்கப்பிள்ளையுண்டாம் குடமுடைக்கமைந்தனுண்டா
ஆழியிடுங்கையினாலே அரிசியிடமைந்தனுண்டாம்
உற்றரிமைசெய்வதற்குப் புத்திரனுமின்றெடுப்பீர்
சேம்புக்கிரைத்தீரே செவ்வாழைவைத்தீரே
வேம்புக்கிரைத்தீரே விருதாவாய்நின்றீரே
எருக்குநீர்சொரிந்து எத்தனைப்பூத்தாலும்
மருக்கொழுந்துபோல்வருமோ மாதகியாள்நேசமெல்லாம்
என்றுமவளழுதாளேந்திழையாளப்போது

கர்ணகி இறந்த புருஷனையெழுப்பி வாய்ப்பிறப்பறிதல்.

மாண்டவரைத்தானெழுப்பி வாய்பிறப்புகேட்கவேண்டும்
செத்தவரைத்தானெழுப்பி சேதிதெறியவேண்டும்
சொக்கரைமனதிலே தோகையரும்தானிருந்து
நானுடன் தன்னுயிரை அனுப்பவேண்டுமென்றுசொன்னாள்

அப்போது சொக்கலிங்கம் ஆண்டவர்கள் தான் பார்த்து
தங்கச்சிமிளதனில் தனஞ்செயனார் தன்னுயிரும்
தங்கச்சரடுகளும் தங்கத்திருனூசியுமே
பொற்பிறப்பங்கோலதுவும் விபூதிகள் பழமும்
அந்தரத்தில் விட்டெறிந்தார் ஆனைமுகர் சொக்கலிங்கம்
கர்ணகிவாள் தன்னிடத்தில் கடுகெனவே வந்ததப்போ
அப்போது கர்ணகியா ளாரணங்கு தானெடுத்து
மாண்டதொரு செட்டி மன்னவரை தானெடுத்து
இருக்குமெதாஸ்தான மேந்திழையாள் வைத்தாளே
மணிக்குடனுஞ்சிறுகுடனும் மயிலணையொன்றாகவைத்து
ஈரவிளைச்சிதனை ஏதாஸ்தானமாகவைத்தாள்
இரண்டாயிருந்தவரை யொன்றாய்த்திருகிவைத்தாள்
தங்கசல்லூசியிலே தருந்தொரு நூல்கோர்த்து
உச்சியிலேதானிழுத்து ஒட்டிவிட்டாள் பொற்சரடு
சரடேறச்சரடேறச் சதையேறிவருகுதங்கே
கால்வழியாய்வரும்போது கடுகெனவேபோய்ச்சரடு
பெருவிரற்குச்சரடுமிட்டாள் பொற்கொடியாள் கர்ணகியும்
தங்கச்சிமிளதனை தையலருந்தான் திறந்தாள்
அவருடையபஞ்சவுயிர் பொருந்திலடைந்ததுவே
வெண்ணீறுதான் தூவி மெல்லியிளங்கொடியாள்
பொற்பிறப்பங்கோலாலே பொற்கொடியாள் தட்டினாளே

## இறந்த கோவிலர் பிழைத்து தன் பெண்சாதியுடன் வருத்தங் கூறல்.

அவர்-தூங்கியெழுந்ததுபோல் திடுக்கிட்டுதானெழுந்து
வேங்கைமாமருகில் மெல்லியவள் போயொளித்தாள்
அப்போது கோவிலரும் அலண்டுயெழுந்திருந்து
மாதவியோ கர்ணகியோ வந்தவர் படுகளத்தில்
மாதவியாள் வந்தாலே வாடியென்மடிமேலே
கர்ணகியாள் வந்தாலே கடுகிப்போய்கில்லுமென்றார்
இந்தவிசேஷமது ஏந்திழையாள் தான் கேட்டு
கூத்தியாரேன்வாரான் கொண்டவள்பான்வாரேனென்றாள்
என்றுமவள்சொல்லி எதிரில்வந்துநின்றாளே
ஆனைகொண்டேன் கர்ணகிநா னேறிக்கொண்டாள் கர்ணகியாள்
ஆனைகொண்டால்வந்தேனிங்கே யேறிக்கொண்டாளோன் வருவாள்
தோட்டங்கொண்டேன் கர்ணகிநான் பூமுடித்தாள் மாதவியாள்
தோட்டங்கொண்டால் கர்ணகிநான் பூமுடித்தாளோன் வருவாள்
கின்னிகொண்டேன் கர்ணகிநான் கீரியுண்டாள் மாதவியாள்
கின்னிகொண்டாளிங்கேவந்தேன் கீறியுண்டாளோன் வருவாள்
பட்டுக்கொண்டேன் கர்ணகிநான் பாவித்தாள் மாதவியாள்

மாதவிக்குவேண்டுமென்று மடியிலேகட்டினரே
மரத்தைதவிட்டுஇறங்கினரே மணியரசர்கோவலரும்
எந்தனுக்குசொத்தைதக்கனி இனிதாகநீர்போட்டீர்
நல்லகனியாருக்கு வைத்தீரோநாயகரே
ஆசைதந்தமாதவிக்கு அருங்கனிக்குவேண்டுமென்றார்
நீர்-செத்துமறக்கவில்லை தேன்மொழியாள்தன்னை

### கர்ணகி மறுபடியும் கோவிலனைக் கொன்றுவிட்டது.

வர்த்தகனைக்குத்தவைத்து மயிலனையாளேந்துசெய்தாள்
தலைபார்க்கும்போதந்த தார்குழலாள்கர்ணகியும்
உச்சிசாட்டை உருவிவிட்டாளப்பொழுது
ஒன்றாயிருந்தவர்தா னிரண்டாகவிழுந்துவிட்டார்
குலைவெட்டிசாய்ந்ததுபோல் கோவிலனார்விழுந்துவிட்டார்
வாழைவெட்டிசாய்ந்ததுபோல் வர்த்தகனார்விழுந்துவிட்டார்
அப்போதுகர்ணகையா ளாரைநினைக்கலுற்றாள்
சொக்கனைத்தானழைத்து கோவிலர்க்குகாவலென்றாள்
மாணிக்கத்தைத்தான்பார்த்து வர்த்தகர்க்குகாவலென்றாள்
கட்டெறும்பைதானழைத்து கண்கள்ரெண்டுங்காவலென்றாள்
காவலில்லாகோவிலற்கு காவல்வைத்துகர்ணகியும்


### கர்ணகி மகாவுக்கிரத்துடன் மதுரைக்குவருதல்.

மதுரைதனைத்தேடி வாறாளேகர்ணகையாள்
கோவிலர்க்குகாவல்வைத்து கொம்பனையும்வாறாளே
ஆயிரம்பாண்டியர்களை அருங்கனியாள்தேடிவாறாள்
அறிவுகெட்டபாண்டியர்களைக்கேயென்றுதேடிவாறாள்
காலுமதுரையெல்லாம் கலமாகச்சாத்திருக்கும்
தெற்குநல்லவாசலிலே தேன்மொழியும்வந்துநின்று
கதவைத்திறவென்றுசொல்லி கன்னியுமேகேட்கலுற்றாள்
நீ-ஆரென்றுகேட்டாரே அங்கிருக்கும்சேவகரும்
திருடனிடதேடினான் தேன்மொழியும்வந்தேனடா
இராசாக்களுடபோட்டிகாணா காயமும்வந்தேனடா
கதவைத்திறவென்றாளே கன்னியிளங்கொடியும்
சேவகருந்தான்பார்த்து திடுக்கிட்டுமெய்மறந்து
திறந்திருந்தபொற்கதவை திட்டென்றுமூடிக்கொண்டார்
கர்ணகியுந்தான்பார்த்து காந்தாளம்பொங்கியுமே
எட்டியுதைத்தாளே யெந்திழையாள்பொற்கதவை

அவள்-தாண்டியுதைக்கையிலே தவிடுபொடியாச்சுதங்கே
பொடிபொடியாச்சுதல்லோ பொற்கொடியாள்தன்னுதையால்
அப்போதுவுள்நுழைந்தா ளரிவையந்தக்கன்னியும்
அதிலேயொருவனையும் ஆணழகிதான்பிடித்து
அவனை-முன்பின்னாய்த்திருப்பிவிட்டு மூதேவிகேளுமென்று
திருடனிடதேவிநான் தேன்மொழியாள்வந்தேனென்று
என்னைவந்துகாணச்சொல்லு இரண்டுங்கெட்டராசாக்களை
அப்போதுபாண்டியர்க ளவள்முகத்தைத்தான்பார்த்து
இப்படிக்குச்செய்தவரா ரெனக்கரியச்சொல்லுமென்றார்
அப்போதுசேவகனு மரசர்களுக்கேதுசொல்வார்
திருடனிடதேவியவள் தேன்மொழியாள்வந்தாளிங்கு
என்றுசொல்லியவர்க ளெடுத்துரைத்தானந்நேரம்
எதிர்வந்துகாணச்சொன்னாள் நாயகரேயுங்களைத்தான்
திருடனிடதேவி தேன்மொழியாள்மங்கையவள்

கள்ளி பாண்டியர்களைக் கண்டுபேசுதல்.

அப்போதுபாண்டியர்க ளருங்கிளியாள்முன்னேவந்தார்
பாட்டியவளைத்தான்பார்த்து பாவையுமேதுசொல்வாள்
பழிகொடடாபழிகொடடா பத்தாவைக்கொன்றபழி
ஆளைக்கொன்றபழி அறிவையர்க்குநீகொடடா
ஏதுக்கடாவெட்டிவைத்தா யேதுகெட்டபாண்டியனே
அள்ளினாரோதிருடினாரோ அணிமதுரைபட்டணத்தில்
அள்ளினதோர்கோவிலர்க்கு அழிவிலங்குபோடொணாதோ
திருடினாரோஅள்ளினாரோ தென்மதுரைப்பட்டணத்தில்
திருடினதோர்கோவிலர்க்கு சேர்விலங்குபோடொணாதோ
சேர்விலங்குநீபோட்டு சேதியனுப்பிவைத்தால்
சேதிகண்டாழிலைக்கு தேன்மொழிநான்வந்திடுவேன்
திருடன்திருட்டையெல்லாம் இட்டமுடன்நான்கொடுப்பேன்
கோட்டையேறிகுதித்தாரோ கொள்ளைகளவுசெய்தாரோ
அகழேறிக்குதித்தாரோ ஆட்டைமாட்டைசாய்த்தாரோ
உன்கொண்டவளிடத்திலே கூடியிருக்கக்கண்டாயோ
என்னகுற்றஞ்செய்தாரென் றேதுக்கடாவெட்டிவைத்தாய்
அவர்-ஈனுதவாழை யிளவாழைத்தண்டலவோ
கொலைதள்ளாவாழையவர் கோவிலரைக்கொன்றபடா
என்னகுற்றஞ்செய்தாரென்று இரண்டுதுண்டாக்கிவைத்தாய்
ஏகவாயதல்லவே தானஞ்செயனார்கோவிலரும்
பாளவாயதல்லவே மன்னரந்தகோவிலரும்
காய்க்கும்பிராயமவர் கன்னிகட்டுந்தற்காலம்
படுக்கும்பிராயமவர் பிஞ்சுவிடுந்தற்காலம்



ஞாதவாழை யீனாவாழைகண்டல்லவோ
அறிவுள்ளகோவிலனை அநீதமாய்வெட்டிவைத்தாய்
ஊர்பழியின்போனாலும் ஆனாள்பழியின்போமோ
பழிக்குப்பழிகொடடா பாதகச்சிலம்புதாடா
என்றந்தகர்ணகியா ளேந்திழையுங்கேட்கலுற்றாள்

கர்ணகிக்குப் பாண்டியர்கள் மறுமொழிகூறல்.

அப்போது பாண்டியர்க ளானமுனிவரேதுசொல்வார்
காற்சிலம்பைக்கொண்டுபோன கள்ளனைத்தான்வெட்டிவிட்டோம்
பேர்-சிலம்பைவரவழைத்தால் கள்ளன்பழிதாரோமென்றார்

கர்ணகி சிலம்பை வரவழைத்தல்.

அப்போதுகர்ணகியும் அருங்கிளியாளேதுசொல்வாள்
அந்தச்சபையினின்று அழைக்கிறாள்காற்சிலம்பை
இராசசபையிலிருந்து கலாகலவழைக்கலுற்றாள்
என்னசொல்லியவளழைத்தா ளேந்திழையாள்காற்சிலம்பை
கூடப்பிறக்கிலையோ கூட்டுப்பாலுண்ணலையோ
ஒக்கப்பிறக்கலையோ ஒருதனப்பாலுண்ணலையோ
எங்கேயிருந்தாலு மேந்திழையேவாருமென்றாள்
வாருமென்றுசொல்லியந்த மங்கையருந்தானழைத்தாள்
அப்போதுபாண்டியர்த மவருடையபொக்கிஷத்தில்
பெட்டிக்குள்ளேதானிருந்த பொற்சிலம்புகேட்டதப்போ
எட்டுகட்டுந்தானுடைத்து யெழுந்ததேசெஞ்சிலம்பு
பத்துகட்டுந்தானுடைத்து பாவையுடபொற்சிலம்பு
அங்கிருந்தகாவலர்கள் ஆயிரம்பேர்தலையுடைத்து
ஆவென்றசத்தத்துடன் அண்டரண்டந்தானதிர
சக்கரம்போலேசுழன்று தனிமதுரைபாண்டியர்முன்
கர்ணகிக்குமுன்னேவந்து காற்சிலம்புநின்றதங்கே
புத்திலியாள்தான்பார்த்துப் பாவையருமேதுசொல்வாள்
அடி-கிட்டவாரவேண்டா மெட்டநின்னுசெஞ்சிலம்பே
சேரவரவேண்டாம் தூரநில்லுசெஞ்சிலம்பே
என்னண்டைவரவேண்டாம் அப்புறத்தேயொதுங்கிநில்லு
என்-தாலிபறிக்கவந்த தனிச்சிலம்பேயொதுங்கிநில்லு
கூறைபறிக்கவந்த தனிச்சிலம்பேயொதுங்கிநில்லு
வேசியுன்னைப்பார்த்தாளோ விலைமாதுகொண்டாளோ
தாசியுன்னைப்பார்த்தாளோ தகாதவள்தொட்டாளோ
மஞ்சள்பறிக்கவந்த மாபாவியொதுங்கிநில்லு
என்-சிலம்பிங்கேவந்ததுவே திறமைகெட்டபாண்டியரே
காற்சிலம்புவந்ததுவே கர்ணகியாள்பழிகொடென்றாள்

சித்திரைமாதத்திலே சிறப்பானநாளையிலே
முதற்பூசையுந்தனுக்கு மேலாகத்தாரேனமென்றார்
இன்னமுனக்கென்னவேண்டும் எனக்குரியச்சொல்லுமென்றார்
எட்டுகுட்டி எட்டுபொட்டை எட்டுபுட்டி எட்டுசட்டி.
கம்மாளபலியெனக்கு கர்த்தரே தருகவேணும்
வருஷத்துக்கோர்பலிதான் வகையாகக்கொடுக்கவேணும்
அப்போது தியாகரவர் அப்படியே தருகவென்றார்
வட்டபுரியம்மனென்று வகையாகக்கொடுக்கவேணும்
ஆண்டுக்கொருதினந்தான் அழகுள்ள கம்மாளனை
பலிவாங்கிக்கொண்டு பூசையுந்தானையும்
அப்போது மறுகுடம் ஆனதொருகம்மாளன்
பத்தம்பதிகமது பாவையற்றுமுன்படித்தான்
செங்கையாய்ப்பாலதுதான் கிளிமொழிக்குதானறக்க
வட்டபுரியம்மையவள் மனமகிழ்ந்தேதுசொல்வாள்
இன்றுமுதலெந்தனுக்கு இந்தபலிவேண்டாமென்று
அருமையிடோகாவுதந்தால் இஷ்டமுடன்கொள்வேனென்றாள்
அப்படியேசம்மதித்தார் ஆதிபுரீசுவரனார்
கனவில்வந்துதானுரைத்தார் கலியுகத்துமானிடர்க்கு
ஆண்டவனார்சொற்படியே அன்புள்ள காவலர்கள்
பூசைதவறாமல் புண்ணியங்கள்செய்திடுவார்
செவ்வாய்புதன்கிழமை திருவாட்சிமேல்வருவாள்
வந்தவர்க்குவரந்தருவாள் வட்டபுரிராச்சியம்மாள்
வட்டபுரியம்மன்கதை வையகத்தில்படித்தோர்
கற்றவர்கள்கேட்டவர்கள் கலியுகத்தில்சொன்னவர்கள்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்கிளைத்து முசியாமல்வாழ்ந்திருந்தார்
வாழிவாழியென்றுசொல்லி வாமனிக்கசரீஸ்வரனே

வாழி விருத்தம்.

கார்வாழி க[illegible]யும் மாதமும்மேவாழி
பேர்வாழி கோ[illegible] பெம்மானுமிகவாழி
[illegible]ர்வாழிபத்தினிபோ லென்றுந்துதிப்போர்கடவ்ளை
சீர்வாழி பெரியோர்கள் சிறந்துமிகவாழியவே.

கோவிலன்கதை — முற்றிற்று.

07891PV,9
N29
76809